REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 25 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 48 | Friday 25, February, 2022 | 20பக்கங்கள் | 30/-




## நாட்டிலுள்ள பிரச்சினைகளை அரசியலாக்கும் எதிர்க்கட்சிகள்

### பாராளுமன்றில் அமைச்சர் – கெஹெலிய குற்றச்சாட்டு



தற்போதைய நிர்வாகம் கொவிட் 19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் கூறும் கூற்றுகளில் அரசியல் அடிப்படை மாத்திரமே உள்ளதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய எதிர்க்கட்சிகள் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரச்சினையையும் அரசியலாக்கியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

06

## இறக்குமதியான 41,000 மெ.தொன் டீசல் நாடு முழுவதும் விநியோகம்

### எரிபொருள் தட்டுப்பாடு நீங்குமென எதிர்பார்ப்பு



நாட்டில், இறக்குமதி செய்யப்பட்ட 41,000 மெற்றிக் தொன் டீசல் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருவதாக எரிபொருள் தொகை களஞ்சியசாலையின் தலைவர் நாலக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒக்டேன் 92 ரக மற்றும் ஒக்டேன் 95 ரக பெற்றோல் என்பன

06

### லேக்ஹவுஸ் நிறுவன முன்னாள் தலைவர்

## சிரேஷ்ட ஊடகவியலாளர் பந்துல பத்மகுமார காலமானார்



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான பந்துல பத்மகுமார நேற்று காலமானார்.

உடல் நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் தனது 71 ஆவது வயதில் நேற்று காலமானார்.

1980 களில் பிரபல்யமான குமரி, அரலிய, சரசி, சத்சர மற்றும் ரெஜினா போன்ற பத்திரிகைகளின்

06

### ஜனாதிபதி செயலகம் முன்பாக முன்னறிவித்தலின்றி ஆர்ப்பாட்டம்

# ஜெனீவாவில் அரசை தவறாக சித்தரிக்க TNA திட்டமிட்ட சதி



### அலுவலகத்தில் ஜனாதிபதி இல்லாதபோது வருகை தந்தமை அநாகரீகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அலுவலகத்தில் இல்லாத போது எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் வருகை தந்த த.தே.கூ எம்.பிக்களால் நடத்தப்பட்ட போராட்டம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கத்தைத் தவறாகப் பிரதிபலிப்பதற்கு திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதியென தெளிவாவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகைக்கு எவ்வித முன்னறிவிப்பும் இல்லையென்ற தலைப்பில்

06

> **ஜனாதிபதியை சந்தித்து மகஜரை கையளிக்க வந்ததாக தெரிவித்தமை முன்னரே திட்டமிடப்பட்ட ஒரு சதியே..**
>
> **– ஜனாதிபதி செயலகம் அறிக்கை**



இலங்கை ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான இரத்மலானை இயந்திரப் பொறியியல் தொழிற்சாலைக்கு நேற்று (24) ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார். இதன்போது நிறுவனத்தின் ஊழியர்களுடன் ஜனாதிபதி உரையாடுவதை படத்தில் காணலாம்.



ஊழியர் சேமலாப நிதி விவகாரம்

**EPF மிகை வரி சட்ட மூலத்தை அமுலாக்கியது நல்லாட்சி அரசே**

03

## இந்தியாவுடன் ஒரு பில்லியன் டொலர் கடன் ஒப்பந்தம் கைச்சாத்து

### அமைச்சர் பசில் இன்று இந்தியா பயணம்



அத்தியாவசிய, மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் வகையில் இந்தியாவுடன் ஒரு பில்லியன் டொலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

06

## மிகக் குறுகிய காலத்திற்கே எரிபொருள் கையிருப்பு

### சபையில் உதய கம்மன்பில தெரிவிப்பு



அடுத்த மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய 1,285.50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்று சபையில் தெரிவித்தார்.

அத்துடன் இப்போதுள்ள 92 ரக பெற்றோல் பத்து

06

### இலங்கையில் கைது செய்யப்பட்ட

## தமிழக மீனவர்களை விடுவிக்க முயற்சிக்கவும்

### ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள, இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி,



06

## நெருக்கடி நிலைக்கு அரசின் தீர்வு என்ன?

### சபையில் சஜித் பிரேமதாச கேள்வி

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)



எரிபொருள் நெருக்கடி உட்பட நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு அரசாங்கத்தினால் முன்வைக்கக் கூடிய நிரந்தர தீர்வு என்னவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

06

## ஜனாதிபதி செயலகம் முன்பாக தமிழ் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்




தமிழர் பிரதேசங்களிலுள்ள காணிப் பிரச்சினை உள்ளடங்கலாக பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பாராளுமன்ற அமர்வை

06

## தடை செய்யப்பட்ட பொருளை எதிரணி சபைக்குள் எடுத்து வந்ததால் சர்ச்சை

### சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நேற்று சபைக்குள் டோர்ச் லைட் ஒன்றை கொண்டு வந்ததால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

சில நிமிடங்கள் நீடித்த சர்ச்சையையடுத்து எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைகையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா



06

## மின் துண்டிப்பால் இணையவழி கற்பித்தல்களுக்கு பாதிப்பு

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

நாடு முழுவதும் தற்போது அமுலாக்கப்பட்டுள்ள மின் துண்டிப்பு காரணமாக, இணையவழி கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இணையவழி கற்பித்தலுக்காக பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை செயற்படுத்துவதற்கு மின்சாரம் தேவைப்படுவதால், இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு

06



**கொவிட் 19 தடுப்பூசிகளால் பக்க விளைவு ஏற்படாது**

கெஹெலிய

03



காணி அபகரிப்பு விவகாரம்

**சபையில் பதாதைகளை ஏந்தி த.தே.கூ எம்பிக்கள் ஆர்ப்பாட்டம்**

03

### இலங்கை கடற்பரப்பினுள்

## அத்துமீறி மீன்பிடித்த 22 தமிழக மீனவர் கைது

(யாழ். விஷேட நிருபர்)



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 22 தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகையை சேர்ந்த 22 மீனவர்களை கைது செய்த கடற்படையினர், அவர்களின் இரண்டு

06



## உக்ரைன் மீது ரஷ்யா முழு வீச்சில் படையெடுப்பு வான், தரை மற்றும் கடல் வழியாக தாக்குதல்

### இதுவரை 40 பேர் பலி: நகரை விட்டு வெளியேற மக்கள் முண்டியடிப்பு



உக்ரைன் மீது ரஷ்யா வான், தரை மற்றும் கடல் வழியாக நேற்று வியாழக்கிழமை முழு வீச்சில் படையெடுப்பை ஆரம்பித்தது.

இரண்டாம் உலகப்

06

### விக்கல் வீராச்சாமி



சம்பந்தன் ஐயாவ போல மலையக மக்களின்ர பிரச்சனைகளையும் மோடி ஐயாவிட்ட சொல்லப்போறதா மனோ எம்.பி கூறியிருக்கிறாரே....

நல்லாட்சியில அஞ்சு வருஷமா 2 அமைச்சரவை அமைச்சர்களோட இருக்கேக்க அவர் இந்த மக்களின்ர பிரச்சனைகள தீர்த்து இருக்கலாமே...!!!

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# ஜனாதிபதி தலைமையில் உலக சாரணர் தின விழா







உலக சாரணர் தின விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் (23) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சாரணர் இயக்கம், 172 நாடுகளைச் சேர்ந்த 52 மில்லியன் சிறுவர்களைக் கொண்ட சிறுவர்களுக்கான உலகின் மிகப்பெரிய தன்னார்வ அமைப்பாகும். ஒரு சாரணர் பெறக்கூடிய மிக உயர்ந்த விருது, ஜனாதிபதி சாரணர் பதக்கம் ஆகும்.

இவ்விழாவில் கலந்துகொண்ட இலங்கையின் தலைமைச் சாரணர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்பிரித் பெர்ணான்டோவினால் சாரணர் பட்டி அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டது.

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகரான பேடன் பவல் பிரபுவின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சாரணருக்கும் ஜனாதிபதி சாரணர் விருதை வழங்கினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக மாகாண மட்டத்தில் ஒன்பது நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், 700 ஜனாதிபதி சாரணர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அனைத்து மாகாணங்களையும் இணைய வழியில் நேரடியாக இணைத்து நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நடும் தேசிய சாரணர் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவு செய்தமை தொடர்பான அறிக்கையை, உதவிப் பிரதம ஆணையாளர் பிரபாத் குணரத்ன ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார். ஒவ்வொரு சாரணர் வீட்டிலும் பசுமையான வீட்டுத்தோட்டத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் அடையாளமாக ஜனாதிபதி மரக்கன்றுகளை விநியோகித்தார்.

பிரதம சாரணர் ஆணையாளர் ஜனபிரித் பெர்ணான்டோ, ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் வழங்கினார்.

## சென்னை புத்தக திருவிழாவில் மணிமேகலை பிரசுரத்தின் 45 ஆவது புத்தக திருவிழா

### முதற் பிரதிகளை பெற புரவலர் ஹாசிம் உமர் சென்னை விஜயம்



மணி மேகலைப் பிரசுரத்தின் 45 ஆவது சென்னைப் புத்தக திருவிழாவில் இலங்கையின் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் இந்நூற்களின் (45) முதற் பிரதிகளை பெறுவதற்காக நாளை 26 சென்னை விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிகழ்வு, எதிர்வரும் (27) ஞாயிற்றுக்கிழமை ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது. நீதியரசர் பா.புகழேந்தி (சென்னை உயர் நீதிமன்றம்) தலைமை தாங்கும் இந்நிகழ்வில், வரவேற்புரையை கலைமாமணி லேனா. தமிழ்வாணன் (தலைவர் மணிமேகலை பிரசுரம்) நிகழ்த்துகிறார்.

இந் நிகழ்வுக்கு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது. சிறப்பு விருந்தினர்களாக பத்மஷ்ரீ டாக்டர். நல்லி குப்புசாமி மற்றும் நடிகை சீதா ஆகியோர் பங்கேற்கின்றனர். நூல்களின் வாழ்த்துரையை நடிகர் ராதா ரவி, நடிகை கௌதமி, அனிதா குப்பு சாமி (தமிழிசைக் கலைஞர்), நடிகர் திருமுருகன், திரைப்பட இயக்குநர் கஷ்தூரி ராஜா, 'பசங்க புகழ்' இயக்குநர் பாண்டிராஜ், நடிகர் மதன் பாப், நகைச்சுவை நடிகர் வையாபுரி ஆகியோர் நிகழ்த்துகின்றனர். நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை ரவி தமிழ்வாணன் மேற்கொள்கிறார்.

## டி.ஆர்.விஜயவர்த்தனவின் 136 ஆவது ஜனன தினத்தையொட்டி இந்து மன்றம் நடத்திய ஜனன தின பூஜை வழிபாடுகள்







லேக்ஹவுஸ் நிறுவுனர் டி.ஆர்.விஜயவர்த்தனவின் 136 ஆவது ஜனன தினத்தையொட்டி லேக் ஹவுஸ் இந்து மன்றத்தின் ஜனன தின பூஜை வழிபாடுகள் மருதானை கபித்தாவத்தை கைலாசநாதர் கோயிலில் நடைபெற்றது. பூஜை வழிபாடுகளில் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டப்ள்யூ தயாரத்தன, நிதிப் பணிப்பாளர் ஜனக்க ரணதுங்க, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் மற்றும் லேக்ஹவுஸ் இந்து மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். பூஜை நிறைவின் பின்னர் நிறுவனத்திலுள்ள டி.ஆர்.விஜயவர்த்தனவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

படங்கள்: ரஞ்ஜித் அசங்க





















தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 25 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

25முதல் 28 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.09 |
| லுஹர் | 12.25 |
| அஸர் | 03.45 |
| மஃரிப் | 06.23 |
| இஷா | 07.33 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 13

| | | | |
|---|---|---|---|
| ராகுகாலம் | பகல் | 10.30 - 12.00வரை | |
| சுபநேரம் | காலை | 09.00 - 10.30வரை | |

யோகம்: மரணஅமிர்த யோகம்

திதி: தசமி

நாட்டில் எரிபொருள் நெருக்கடி நிலை

# ரணிலும், சம்பிக்கவும் தீர்வு முன்வைக்கையில் சிறுபிள்ளை தனமாக சஜித் பதாதை ஏந்துகிறார்

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

நாட்டில் பாரிய எரிபொருள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சிறுபிள்ளைத்தனமாக பதாதை ஏந்திப் போராடுகிறார். ஆனால் முன்னாள் பிரதமர் ரணிலும் முன்னாள் அமைச்சர் சம்பிக்கவும் பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைத்துள்ளனரென எரிசக்தி அமைச்சர் உதய கம்மம்பில தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி விவகாரம் அரசின் பிரச்சினையல்ல. நாட்டின் பிரச்சினையாகும் என்றும் அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

1978 ஆம் ஆண்டு முதல் நாட்டில் அந்நிய செலாவணி நெருக்கடி உள்ளது. எதிர்க்கட்சி தலைவரின் கட்சி உட்பட சகல அரசுகளும் இதற்குப் பொறுப்பு கூற வேண்டும்.



இரு அரச நிறுவனங்களுக்கும் கடன் குறைக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொரோனா தொற்று காரணமாக அந்நிய செலாவணி நெருக்கடி அதிகரித்தது. மொத்த இறக்குமதி செலவில் 20 வீதம் எரிபொருள் இறக்குமதிக்கு செலவாகிறது.

எரிபொருள் கையிருப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் வினவியிருந்தார்.

மின்சார சபைக்கும் 6,000 மெற்றிக் தொன் டீசலும் சோஜிட் மின் உற்பத்தி நிலையத்திற்கும் 4,200 மெற்றிக் தொன்னும் வழங்கப்பட உள்ளது. 30 000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் மார்ச் 03 ஆம் திகதி வந்தடைய உள்ளது. எரிபொருள் நெருக்கடி நிலை இருப்பது அனைவருக்கும் தெரியும். இது அரசின் பிரச்சினையல்ல. நாட்டின் பிரச்சினையாகும்.

பதாதைகளை ஏந்தி போராடுவது சிறுபிள்ளைத்தனமானது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டுகிறேன். அவர் தீர்வு பற்றியே பேசுகிறார். சம்பிக்க ரணவக்க எம்.பியும் தீர்வை முன்வைத்துள்ளார். தவறு இருந்தால் நாம் திருத்திக் கொள்வோம்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த அதிகாரத்தை பயன்படுத்தி பிரச்சினையை தீர்க்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரினார். ஆனால் பிரச்சினை பற்றி தெரியாமலே சஜித் பேசுவதாகவும் அவர் தெரிவித்தார்.



அகில இலங்கை கம்பன் கழகத்தினால் கிளிநொச்சியில் உருவாக்கப்பட்டு வருகின்ற கலைக் கூடத்தின் வேலைகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ளும் நோக்கில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கம்பவாரதி இ. ஜெயராஜ் சந்தித்துக் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடல் மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று நடைபெற்றது.

காணி அபகரிப்பு விவகாரம்

## சபையில் பதாதைகளை ஏந்தி த.தே.கூ எம்பிக்கள் ஆர்ப்பாட்டம்

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் பறிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பி.க்கள் சபைக்குள் பதாகைகளை ஏந்தியவாறு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வன ஜீவராசிகள் சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போதே, இவர்கள் சபைக்குள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி விவாதத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் உரையாற்றிய பின்னர் பதாகைகளுடன் எழுந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி.க்களான எம்.ஏ. சுமந்திரன்,எஸ்.ஸ்ரீதரன். கருணாகரம்,

06

## கொவிட்19 தடுப்பூசிகளால் பக்க விளைவு ஏற்படாது




அமைச்சர் கெஹெலிய

கொவிட்19 தடுப்பூசி ஏற்றுவதால் பக்க விளைவுகள் ஏற்படுவதாக எந்தவொரு ஆய்விலும் கண்டறியப்படவில்லையென, சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 27/2இன் கீழ் விஷேட கூற்றொன்றை எழுப்பிய ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர், கொரோனா வைரஸ் தடுப்பூசி ஏற்றுவதனால் ஏற்படும் பக்க விளைவுகள் குறித்தும், தேசிய ஆயுர்வேத மருத்துவத்தை பலப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் தெரிவித்த சுகாதாரத் துறை அமைச்சர் கூறுகையில்,

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தில், தடுப்பூசி ஏற்றுவதையே அரசாங்கம் பிரதானமாக கருதுகின்றது. கொவிட்19 மரணங்களில் 65 வீதத்திற்கு அதிகமானவை எந்தவொரு தடுப்பூசியும் ஏற்றாதவர்களின் மரணம் என்பது தரவுகளில் வெளிப்படுகின்றன. ஒரு தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்களின் மரணம் 18.2 வீதமாக பதிவாகியுள்ளதுடன், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டும் மரணித்தவர்கள் 15.7 வீதமாகும். மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் மரணித்த வீதமானது 0.2 என்ற மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே பதிவாகி

06

## EPF மிகை வரி சட்ட மூலத்தை அமுலாக்கியது நல்லாட்சி அரசே

### எதிரணியின் குற்றச்சாட்டுக்கு அரச தரப்பு பதில்

(லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்)

ஊழியர் சேமலாப நிதிக்கு மிகை வரி அறவிடுவது தொடர்பில் சபையில் நேற்று கடும் சர்ச்சை ஏற்பட்டது. கடந்த அரசாங்கமே ஊழியர் சேமலாப நிதிக்கு சட்டம் கொண்டு வந்து வரியை அதிகரித்ததோடு கம்பனியாக உள்வாங்கி வரி அறவிட அடித்தளமிட்டதாக ஆளும் தரப்பு குற்றஞ்சாட்டியது.

ஆனால்,மிகை வரி சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதிக்கு 25 வீத வரி அறவிட, அரசு தயாராவதாகவும் தமது ஆட்சியில் அவ்வாறான சட்டம் கொண்டுவரப்படவில்லையெனவும் ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாய்மூல விடைக்காக ஹேசா விதாரண எம்.பி எழுப்பிய கேள்விக்கு தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பதிலளித்தார்.

இடையீட்டு கேள்வி ஒன்றை எழுப்பிய ஹேசா விதாரண எம்.பி, மிகை வரி சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதிக்கு வரி அறவிடுவதை தடுக்க நடவடிக்கை எடுத்தீர்கள். அதற்கு அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கிறேன். அதன் தற்போதை நிலைமை என்ன? என ஹேசா விதாரண எம்.பி வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மிகை வரி சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதிக்கு வரி அறவிடப்படாதென நிதி அமைச்சர் அமைச்சரவைக்கு உறுதி அளித்தார். உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு வந்த பின்னர், தேவையான திருத்தங்களை முன்வைத்து ஊழியர் சேமலாப நிதியை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

இதனைத் தொடர்ந்தே சர்ச்சை ஆரம்பமானது. இரு தரப்பு எம்.பிக்களும் மாறி, மாறி குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

ஹர்ச டி சில்வா எம்.பி குறிப்பிடுகையில் ஊழியர் சேமலாப நிதியிலிருந்து எவ்வித வரியும் அறவிடமுடியாது. ஆனால் கடந்த காலத்தில் 14 வீத வருமான வரி அறவிடப்பட்டுள்ளது. இது சட்டவிரோதமானது. அதனை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்று வினவினார்

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இது சட்டவிரோதமாயின் நீதிமன்றம் செல்லமுடியும். ஊழியர் சேமலாப நிதிக்கு 25 வரி அறவிடுவதை நாம் எதிர்த்தோம் என்றார்.

ஊழியர் சேமலாப நிதி

06

# ஆழ்ந்த அனுதாபங்கள்



## பந்துல பத்மகுமார

**02.06.1950 - 24.02.2022**

**2007 இலிருந்து 2015 வரையும் அஸோசியேட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட்டின் (ANCL) (லேக் ஹவுஸ்) தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளராக சேவையாற்றியவர்.**

முன்னாள் ANCL இன் தலைவரும் திறமையான பத்திரிகையாளரும், ஊடகவியலாளருமாகிய திரு. பந்துல பத்மகுமாரவின் திடீர் மரணத்தினால் ANCL இன் தலைவர், பணிப்பாளர்கள் சபை மற்றும் பணியாளர்கள் அனைவரும் துக்கத்தில் மூழ்கியிருப்பதுடன் அன்னாரின் குடும்ப அங்கத்தினர்களுக்கு தங்களின் ஆழமான துயரத்தை இந்த துக்ககரமான வேளையில் தெரிவித்துக் கொள்கின்றனர். அன்னாருடைய முன்மாதிரியான தலைமைத்துவம், மனிதநேய குணவியல்புகள் மற்றும் ஊடகவியலுக்கான பக்கச்சார்பற்ற கடப்பாட்டையும் ANCL இலிலுள்ள அனைவரும் நன்றியுடன் என்றென்றும் மனதில் நீங்காத நினைவாக வைத்திருப்பார்கள்

*இந்த உலக வாழ்க்கையின் பயணமானது சிறியது*
*அன்னாரின் ஆத்மா சாந்தியை அடைவதாக.*

LAKE HOUSE

அஸோசியேடட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 23

### குறள் தரும் சிந்தனை

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள

ஒருவருக்கு வறுமை வந்த நேரத்திலும் அவரிடம் பழைய உறவைப் பாராட்டும் பண்பு உடையவர்களே சுற்றத்தார் ஆவார்கள்.

## உலகை பாதிக்கக் கூடிய ரஷ்ய உக்ரைன் போர்!

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் நிலவி வந்த முறுகல் நேற்று கடும் மோதலாக உருவெடுத்துள்ளது. இவ்வாறானதொரு ஆயுத மோதல் ஆரம்பமாவதைத் தவிர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகின் பல நாடுகளும் கடந்த சில வாரங்களாகத் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வந்தன. ஐ.நா பாதுகாப்பு கவுன்ஸில் இவ்விடயம் தொடர்பில் இவ்வாரத்தில் இரண்டு தடவைகள் கூடி கலந்துரையாடிய போதிலும், கடும் மோதல் உருவாகியுள்ளது. மக்கள் உக்ரைன் தலைநகரை விட்டு கடந்த சில தினங்களாக வெளியேறி வருகின்றனர்.

இப்போரின் இழப்புக்கள், அழிவுகள் குறித்து இரண்டு தரப்புகளும் தமது பக்க நியாயங்களை அதிகரித்துக் காட்டிக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

உக்ரைன் கிழக்கு ஐரோப்பாவில் அமைந்திருக்கும் ஒரு நாடாகும். இந்நாடு 1991 இல் சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்து சுதந்திரமடைந்த நாடுகளில் ஒன்றாகும். ரஷ்யாவுக்கு அடுத்த பெரிய நாடு இது. 41 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டின் வடக்கில் பெலாரஸும், மேற்கில் போலந்து, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி ஆகிய நாடுகளும், தெற்கில் மோல்டோவாவும், ருமேனியாவும் கிழக்கிலும் வடகிழக்கிலும் ரஷ்யாவும் அமைந்திருக்கின்றன.

மொழி, கலாசார அடையாளங்கள் என்பவற்றில் உக்ரைனின் சில பிரதேசங்கள் ரஷ்யாவுடன் ஒத்துப் போகின்றன. அதனால் உக்ரைனைத் தன்னுடைய அங்கமாக ரஷ்யா கருதுகிறது. ஆனால் அந்நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிறநாடுகளுடன் அடையாளப்படுத்தவே விரும்புகின்றனர். தடையற்ற வர்த்தகம், முதலாளித்துவப் பொருளாதாரம், அதிகரித்த ஜனநாயக உரிமைகள், மேற்கத்திய நாடுகளின் நுகர்வுக் கலாசாரம், பொழுதுபோக்குகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டுள்ள அம்மக்கள் பழைய சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டுடனான வாழ்க்கை முறையிலிருந்து சுதந்திரமான வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றனர்.

அதனால் உக்ரைன் மக்களில் பெரும்பகுதியினர் ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்திருக்கவே விரும்புகின்றனர். இந்த நிலையில் 1994 களில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் உடன்படிக்கை செய்து கொண்டது. அதனை ரஷ்ய சார்பு உக்ரைன் ஜனாதிபதி இடைநிறுத்தி வைத்தார். அதற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து தமது ஐரோப்பிய சார்பு நிலையை வெளிப்படுத்தியதோடு, ரஷ்ய சார்பு ஜனாதிபதி பதவியிழக்கவும் வழிவகுத்தனர்.

உக்ரைன் ஐரோப்பிய சார்பு நிலையை எடுப்பதைத் தமக்கு ஆபத்தாகக் கருதத் தொடங்கிய ரஷ்யா, உக்ரைனுடன் முரண்படும் நிலை உருவானது. இந்நிலையில் உக்ரைனின் பகுதிகளில் ஒன்றான கிரீமியாவை 2014 இல் தமது பகுதியாக்கிக் கொண்டது ரஷ்யா. இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்துடன் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய விரிவான வர்த்தக ஒப்பந்தத்தை செய்து கொள்ள விரும்புவதாக உக்ரைன் அறிவித்தது. அத்தோடு நேட்டோவுடன் இணையும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தது.

இவ்வாறு உருவாகி வந்த முறுகல் போக்கே உச்சக் கட்டத்தை அடைந்து தற்போது போராக உருவெடுத்துள்ளது. இவ்வாறான துரதிர்ஷ்டமான நிலை உருவாவதைத் தவிர்க்கும் வகையில் பல தரப்பு முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த சூழலில், உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள டொனட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகளை தனிநாடுகளாக அங்கீகரித்துள்ளது ரஷ்யா. அதேநேரம் ஐரோப்பிய ஒன்றியமும் பிரித்தானியாவும் 05 ரஷ்ய வங்கிகளுக்கும் சில தனிநபர்களுக்கும் தடைவிதித்துள்ளன. அமெரிக்காவும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில் உக்ரைன் ஜனாதிபதி வோளோடிமிர் ஜெலன்ஸ்கி, 'ரஷ்யா ஐரோப்பாவின் மிகப் பெரிய போரை தொடங்கியுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், 'ரஷ்யாவுக்கும் உக்ரெய்னுக்கும் இடையிலான போரில் வேறு யாராவது குறுக்கிட்டால், அவர்கள் இதுவரை சந்தித்திராத வரலாறு காணாத மோசமான அழிவுகளை சந்திப்பர்' எனக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் போரின் விளைவுகளை கருத்தில் கொண்ட ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் ஐ.நா பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் உரையாற்றிய போது, 'போரின் விளைவுகள் உக்ரைனுக்குப் பேரழிவை ஏற்படுத்தும். உலகப் பொருளாதாரத்தை வெகுவாக பாதிக்கும். ரஷ்ய அதிபரே... மனிதாபிமான அடிப்படையில் உங்களது படைகளைத் திரும்பப் பெறுங்கள்' என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அதுதான் உண்மை. இப்போர் உக்ரைனை மாத்திரமல்லாமல் உலகப் பொருளாதாரத்தையும் பெரிதும் பாதிக்கும். இதனை பொருளாதார நிபுணர்களும் சுடடிக்காட்டியுள்ளனர். இதன் விளைவாக எரிபொருள், எரிவாயு, தங்கம் என்பவற்றின் விலைகள் பெரிதும் உயரும், பங்குச் சந்தையும் பெருவீழ்ச்சி காணும். இவற்றின் விளைவாக பொருட்களின் விலைகள் அதிகளவில் அதிகரிக்கும். இவற்றின் தாக்கங்களுக்கு இலங்கை உட்பட உலகின் எல்லா நாடுகளும் முகம் கொடுக்க நேரிடும். அதனால் தற்போதைய உலகலாவிய நிலவரங்களைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதற்கான பொறுப்பு இந்நாட்டினருக்கும் உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# விசேட திறமைகளைக் கொண்ட கமாண்டோ வீரர்கள் 157 பேருக்கு 'மெரூன் தொப்பி' அணிவித்து கௌரவம்



இலங்கை இராணுவத்தின் விசேட நடவடிக்கைகள் படைப்பிரிவில் ஒன்றான கமாண்டோ படைப்பிரிவில் மிகவும் திறமையாகப் பயிற்சி பெற்ற 157 கமாண்டோ வீரர்கள் கமாண்டோ உத்தியோக பூர்வ இலச்சினை மற்றும் 'மெரூன்தொப்பி 'அணிந்து கலைந்து செல்லும் நிகழ்வு, பாதுகாப்புப் படைத் தலைவர் மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் கடந்த சனிக்கிழமை ஊவா குடா ஒய கமாண்டோ படைப்பிரிவு பயிற்சி பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

கமாண்டோ படைப்பிரிவின் பயிற்சி பாடநெறி இலக்கம் 48 டி மற்றும் 48 ஈ இன் கீழ் 18 மாதங்களுக்கும் அதிக காலமாக ஆலோசகர்கள் பலரின் வழிகாட்டலின் கீழ் விசேட நடவடிக்கைகள் தொடர்பாக விசேட பயிற்சி பெற்ற திறமை வாய்ந்த அதிகாரிகள் 13 பேர் மற்றும் ஏனைய பதவித் தரங்களை உடைய 144 பேர் கலைந்து செல்லும் அணி வகுப்பில் கலந்து கொண்டார்கள். அதனைப் பார்வையிடுவதற்காக இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், கலைந்து செல்லும் கமாண்டோ வீரர்களின் பெற்றோர், உறவினர்கள் பலரும் வருகை தந்திருந்தார்கள்.

பிரதம அதிதியாக வருகை தந்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை கமாண்டோ படைப்பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் கிரிசாந்த ஞானரத்ன, பிரிகேடியர் விஜித ஹெட்டியாரச்சி, கேர்னல் கமல் தர்மவர்தன மற்றும் பயிற்சிப் பாடசாலை நிறைவேற்றுனர் கேர்னல் ஜனக்க சமரசேகர ஆகியோர் இராணுவ சம்பிரதாயங்களுடன் வரவேற்கப்பட்டதுடன் முகாமின் கௌரவ அணிவகுப்பும் அவருக்கு வழங்கப்பட்டது.

அதன் பின்னர் விருது வழங்கும் அணிவகுப்பின் கட்டளை அதிகாரியின் அழைப்பின் பேரில் இராணுவத்தளபதி கலைந்து செல்லும் கமாண்டோ வீரர்களின் அணிவகுப்பைப் பார்வையிட்டார். அதன் பின்னர் அணிவகுப்பு மரியாதை இராணுவத் தளபதிக்கு வழங்கப்பட்டது.





சிரமம் மிகுந்த விசேட பயிற்சி பெற்று திறமையாளர்களிடையே திறமையாளர்களாக நாட்டையும் இனத்தையும் பாதுகாக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக, 'முடியாதது எதுவுமில்லை' என்னும் தொனிப்பொருளை முன்னெடுத்து கமாண்டோ படைப்பிரிவினருடன் இணைந்த வீரப்புதல்வர்களுக்கு கமாண்டோ இலச்சினை அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கையால் அணிவிக்கப்பட்டது.

விசேட பயிற்சி பெற்றதன் பின்னர் திறமையாக இலங்கை இராணுவ கமாண்டோ படைப்பிரிவில் இணைவதை அடையாளப்படுத்தி உலகின் விசேட இராணுவ வீரர்கள் மாத்திரம் அணியும் மெரூன் தொப்பிகளை அச்சந்தர்ப்பத்தில் பிரதான அதிதியான இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுடன் இணைந்து கமாண்டோ படைப்பிரிவின் படைப்பிரிவு தலைவர் மேஜர் ஜெனரல் கிரிசாந்த ஞானரத்ன மற்றும் 65வது படைப்பிரிவின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அணில் சமரசிங்க ஆகியோர் கலைந்து செல்லும் கமாண்டோ வீரர்களுக்கு வழங்கினார்கள்.



அதன் பின்னர் பயிற்சிப் பாடநெறியில் திறமையானவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் இராணுவத் தளபதியால் வழங்கப்பட்டன. சிறந்த துப்பாக்கி சுடுபவருக்கான விருதை லெப்டினன்ற் டி.எம்.சி. எம்.பீ. தென்னக்கோன் தனதாக்கிக் கொண்டார். சிறந்த உடற்தகுதி கொண்ட மாணவனாக லூர்த்தினன் சீ.எல். ஜயதுங்க விருதினை பெற்றார்.

பின்னர் அங்கு அனைவரின் முன்னிலையில் உரையாற்றிய படைப் பிரிவுகளின் தலைவர் மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா திறமையானவர்களிடையே திறமையானவராக கலைந்து செல்லும் வீரர்களுக்கு தனது வாழ்த்தினை தெரிவித்ததோடு "நீங்கள் அனைவரினதும் கௌரவத்துக்கு உரியவர்களாக உள்ளதோடு நாட்டை பாதுகாப்பதற்காக நீங்கள் சிறப்பாக செயல்படு வீர்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்" எனத் தெரிவித்தார்.

"கமாண்டோ வீரராவது இலகுவான காரியம் அல்ல ஏனென்றால் அதற்கு கமாண்டோ வீரர்களின் 'முடியாதது ஒன்றுமில்லை' என்னும் தொனிப்பொருளை முன்னிலைப்படுத்தி மனத்தைரியத்துடன் மற்றும் அர்ப்பணிப்புடன் செயல்படுவது அவசியமாகும். சவால்களுக்கு மத்தியில் உங்கள் திறமையை மேலும் அதிகரித்து முறையான பயிற்சிகளின் பின்னர் நீங்கள் புதியபாதையில் பயணத்தை ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்" என தொடர்ந்து அவர் தெரிவித்தார்.

கலைந்து செல்லும் அணிவகுப்பின் இறுதியில் படைப்பிரிவின் தலைவரின் அழைப்பிற்கிணங்க புதிதாக அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கத் தொகுதி மற்றும் அந்தத் தொகுதியில் அமைந்துள்ள நவீன உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சி மண்டபத்தையும் திறந்து வைத்த படைத்தளபதி யுத்த வெற்றியின் சரித்திரத்தை ஞாபகமூட்டும் விமானப்படை அருங்காட்சியகத்தையும் திறந்து வைத்தார்.

கலைந்து செல்லும் விழாவின் முடிவில் கமாண்டோ வீரர்கள் அவர்களின் கமாண்டோ பயிற்சித் திறமைகளை காட்சிப்படுத்தும் விசேட நேரடி கண்காட்சிகளையும் நிகழ்த்திக் காட்டினார்கள். கலைந்து செல்லும் அணிவகுப்பை பார்வையிடுவதற்காக கௌரவ அதிதிகள், சிரேஷ்ட அதிகாரிகள், ஏனைய உத்தியோகபூர்வ அதிகாரிகள் பலரும் வருகை தந்திருந்தார்கள்.

தமிழில்:
**வீ.ஆர்.வயலட்...**

# உக்ரைன் மீதான போரை நிறுத்த பிரதமர் மோடியினால் முடியும்

### உதவி கோருகிறார் இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் இகார் பொலிகா



ரஷ்யாவுடன் பிரதமர் நரேந்திர மோடிக்கு நல்ல உறவு உள்ளது. இதனால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் மோடி தொடர்பு கொண்டு பேச வேண்டும். பிரதமர் நரேந்திர மோடியால் இந்த பிரச்சினையில் சிறப்பான பங்களிப்பு செய்ய முடியும்.

இவ்வாறு இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் இகார் பொலிகா கோரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. உக்ரைன் தலைநகர் கிவ் உள்பட பல நகரங்களில் ரஷ்யா குண்டுவீசி தாக்குதல் நடத்துகிறது.

இந்நிலையில் இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் இகார் பொலிகா இந்தியாவிடம் உதவி கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு கோரிக்கை முன்வைத்துள்ளார்.

"ரஷ்யாவுடன் இந்தியாவுக்கு சிறப்பான உறவு உள்ளது. உக்ரைனில் நிலவும் தற்போதைய சூழலை இந்தியாவால் கட்டுப்படுத்த முடியும். பிரதமர் நரேந்திர மோடி உடனடியாக ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் தொடர்பு கொள்ள வேண்டும். தற்போதைய அசாதாரணமான சூழலுக்கு ஆக்கிரமிப்பு பிரச்சினையே பிரதானமாக உள்ளது.

ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைனில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன. ஆனால் இராணுவ மையங்களை மட்டும் தாக்கியதாக ரஷ்யா பொய் கூறுகிறது. உண்மையில் பொதுமக்கள் பலியாகி வருகின்றனர். எல்லையைத் தாண்டி ரஷ்யப் படைகள் உக்ரைனுக்குள் நுழைந்துள்ளன. உக்ரைன் தரப்பில் 5 ரஷ்ய விமானங்கள், 2 ஹெலிகொப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. இந்தியா ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் தற்காலிக உறுப்பினராக உள்ளது. இது உலகளாவிய அமைப்பாகும். இந்தியாவின் ஆதரவுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். ஒரு ஜனநாயக நாட்டின் மீது சர்வாதிகார ஆட்சி செய்யும் நபர் நடத்தும் தாக்குதலை தடுக்க இந்தியா தனது உலகளாவிய பங்கை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். உலகில் சக்தி வாய்ந்த, மரியாதைக்குரிய தலைவராக பிரதமர் நரேந்திர மோடி உள்ளார். ரஷ்யாவுடன் சிறப்பான உறவைக் கொண்டுள்ளார். எந்தத் தலைவர் கூறினால் புடின் கேட்பார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நரேந்திர மோடி இதில் சிறப்பான பங்களிப்பைச் செய்ய முடியும். ஏனென்றால் ரஷ்யாவுடன், மோடிக்கு நல்ல உறவு உள்ளது. இந்திய அரசின் சாதகமான பதிலை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். இது உண்மையின் தருணம், விதியின் தருணம்" என இகார் பொலிகா கூறியுள்ளார்.

# கல்வி அதிகாரிகளுக்கு முன்மாதிரியாக திகழ்ந்த மருதமுனை அபுல் கலாம் பழீல் மௌலானா

### ஒன்பதாவது நினைவு தினம் இன்று



அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை முதுசங்களில் அபுல் கலாம் பழீல் மௌலானாவும் ஒருவர். சிறந்த கல்விமானாகவும், சமூக சமயப்பற்றாளராகவும், அரசியலில் ஈடுபாடுடையவராகவும் விளங்கிய இவர், சிறந்த கவிஞரும் பன்முக ஆளுமையுமாவார். அவர் மருதமுனை மண்ணுக்குக் கிடைத்த பெருமையாவார். இவர் தொடர்பில் முதுபெரும் கல்விமானான அருட்சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ. 'அன்றைய கல்வி அதிகாரிகள் மத்தியில் அபுல் கலாம் மௌலானா ஓர் இலக்கியமாக வாழ்ந்து காட்டினார். இன்றைய கல்வி அதிகாரிகளுக்கும் அவர் ஓர் இலக்கணம், அவர் ஒரு தொல்காப்பியம்' என்றுள்ளார்

இந்த வரிகள் ஆழம் நிறைந்தவை. இலக்கியம் என்பது அழகியல். அதுவொரு இரசனை. உயிருடன் இருக்கும் போது தனது வாழ்க்கையை அழகாக வாழ்ந்து காட்டியவர். ஒரு கல்வி அதிகாரி எவ்வாறிருக்க வேண்டுமென விருப்போடு ஒரு இரசனையாய் தன் பணியைச் செய்தவர். இலக்கணம் மாறாத் தன்மையுடையது. அவரின் வாழ்க்கை நடைமுறைகளை மாற்றாது வாழ வேண்டுமென இன்றைய கல்வி அதிகாரிகளை வலியுறுத்துகின்றார்.

1865 ஆம் ஆண்டளவில் தென்அரேபிய நாடான யெமனின் ஹழ்ரமௌத் பள்ளத்தாக்கிலிருந்து செய்யித் உத்மான் அல்அஹ்தல் அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமுனை கிராமத்திற்கு வருகை தந்து 'யாகுவ' குடியைச் சேர்ந்த ஷரீபா உம்மா எனும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 1869 இல் ஐதுரூஸ் மௌலானா என்னும் பெயரில் மகன் பிறந்தார். ஐதுரூஸ் மௌலானாவின் பரம்பரையில் வந்தவர்களில் ஒருவரே பழீல் மௌலானா.

ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா தனக்கு தரம் 01 முதல் தரம் 09 வரை கல்வி புகட்டிய ஆசிரியர்களை ஞாபகத்தில் வைத்திருந்தாரென குறிப்பிட்டுள்ள விரிவுரையாளர் ஏ.ஜே.எல். வஸீல் மௌலானா, மருதமுனையின் முதலாவது பயிற்றப்பட்ட தலைமை ஆசிரியரும், பயிற்றப்பட்ட ஆசிரியருமென்ற இரட்டை அந்தஸ்துக்குரியவர் அவர் என்கிறார். அதுமட்டுமன்றி மருதமுனையின் முதலாவது ஆங்கில அதிபரும் அவராவார் எனக் கூறுகின்ற விரிவுரையாளர் வஸீல், 1959 ஆம் ஆண்டில் ஐ.ஏ. ஹமீட் என்பவர் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமை இவருடைய பாடசாலைக்கு கிடைத்த பெருமை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவர் இளம் பராயத்திலேயே அல்குர்ஆனை ஓதக் கூடியவராக இருந்தார். இவர் அல் குர்ஆனை ஓதும் இனிமையை செவியேற்ற அன்றைய மட்டக்களப்பு தெற்குத் தொகுதி சட்டவாக்க சபை உறுப்பினரும் போக்குவரத்து அமைச்சருமான சேர் முஹம்மது மாக்கான் மாக்கார் வெள்ளி நாணயத்தைப் பரிசாக வழங்கி கௌரவித்தார். பின்னாளில் 'மௌலானா மாஸ்டர்' என அவர் கள்ளலியவில் அழைக்கப்பட்டார். இவர் கடமையாற்றிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சமயம் தொடர்பான ஒழுக்கவிழுமியங்களை அதிக சிரத்தையோடு கற்றுக் கொடுக்கக் கூடியவராக இருந்தார்.

கல்முனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மர்ஹூம். ஐ.ஏ. ஹமீட் தமது மாணவப் பருவ அனுபவத்தை விபரிக்கையில் 'எனக்கு இலகுவாகவும் சரளமாகவும் புனித அல்குர்ஆனை ஓத முடியாது என்பதை அறிந்த பழீல் மௌலானா பெரிதும் கவலையடைந்ததோடு அல்குர்ஆன் பிரதியொன்றை அன்பளிப்பாகவும் வழங்கினார். 1960 இல் அநுராதபுரம் கொட்டியாவெள முஸ்லீம் மகாவித்தியாலய அதிபராக கடமையேற்ற இவர், அப்பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்ததோடு அப்பிரதேச மக்கள் ஐவேளை தொழுகையை நிறைவேற்ற வலசதியளிக்கும் வகையில் பள்ளிவாசல் ஒன்றையும் நிறுவினார்' எனக் குறிப்பிடுகின்றார்.

இவர் இளைஞராக இருக்கும் போது முஹம்மத் அலி ஜின்னாஹ் முன்னெடுத்த பாகிஸ்தான் போராட்டம் அவரைக் கவர்ந்தது. அதனால் பத்திரிகைகளில் வரும் முஹம்மத் அலி ஜின்னாஹ் பித்தனாக இருந்தார். தனது மகனொருவருக்கு ஜின்னாவின் பெயரையும் அவர் சூட்டினார். இவர் நாட்குறிப்பு எழுதும் பழக்கம் கொண்டவராக இருந்தார். அதனை அடிப்படையாகக் கொண்டு அவரது 'வாழ்வும் பணிகளும்' என்ற பெயரில் நூலொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறாக பன்முக ஆளுமை கொண்டவராக விளங்கினார் மர்ஹூம் அபுல் கலாம் பழீல் மௌலானா.

**பாத்திமா ஸுபா...**
*(எம்.ஏ.சமூகவியல்) ஆசிரியை*
*ஸாஹிறா கல்லூரி, கல்முனை*

# போதை ஒழிப்பில் உலகுக்கான முன்மாதிரி

மது என்பது போதை தரக்கூடிய அனைத்தையும் குறிப்பதாக சட்ட அறிஞர்கள் குறிப்பிடுவர். இவ்வகையில் மதுபானம் ஒரு போதையாகவும் போதைப்பொருட்கள் மதுபானமாகவும் கருதப்படுகின்றது. மதுவும் போதைப் பொருட்களும் இஸ்லாத்தில் ஹராமாக்கப்பட்டுள்ளன.

மது என்பதற்கு பயன்படுத்தப்படும் 'கம்ரு' என்ற அரபு மொழிச் சொல் மறைப்பு, திரை என்ற கருத்தை தரும். அது அறிவுக்கு திரையிடுகிறது, அறிவை மூடி மறைக்கிறது, அறிவின் விளைவை இல்லாமலாக்குகிறது என்ற கருத்தில் இவ்வாறு பெயரிடப்பட்டிருக்கலாம்.

'போதையை ஏற்படுத்தும் அனைத்தும் மதுவாகும். அனைத்து மதுவும் ஹராமாகும் (தடுக்கப்பட்டுள்ளது). **(ஆதாரம்: அபூ தாவூத், அஹ்மத்)** அறிவை பாதுகாப்பதானது இஸ்லாத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள், காய்ந்ததும் அரைப் பழுத்ததுமான பேரீச்சம் பழங்கள் மூலம் தயார்படுத்தப்பட்ட போதை தரக்கூடிய ஒரு பானத்தை எடுத்துக்கொண்டு அபூ துஜானா (ரலி), அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் (ரலி), முஆத் இப்னு ஜபல் (ரலி), அபூ தல்ஹா (ரலி) போன்றோரிடம் கொடுத்து, விருந்தாளிகளின் தலைவர்களுக்கு மது பரிமாறப்பட்டுக் கொண்டு இருக்கும்போது, தூரத்திலிந்து ஒரு சப்தம் எதிரொலிப்பதை கேட்டார்கள்.

'அறிந்து கொள்ளுங்கள். மது அருந்துவது தடுக்கப்பட்டு விட்டது' என்பதுதான் அந்த சப்தம். அவருக்கும் அவரது விருந்தாளிகளுக்கும் மதுவை கொட்டுவதையும் மதுக்கிண்ணங்களை உடைப்பதையும் தவிர வேறு வழி இருக்கவில்லை. வுழூ செய்பவர்கள் வுழூ செய்து கொண்டார்கள். கழுவுகின்றவர்கள் கழுவிக் கொண்டார்கள். அதன் பின்னர் மது அருந்துவதை ஒட்டுமொத்தமாக தவிர்ந்து கொண்டார்கள்.

**(ஆதாரம்: தப்ஸீருல் குர்ஆன் அல்அழீம் இப்னு கஸீர்)**

இத்தனித்துவமான வெளிப்பாடு அபூ புரைதா (ரலி) அவர்கள் தன் தந்தையிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸிலும் வெளிப்படுகிறது. 'நாம் மூன்று அல்லது நான்கு நபர்கள் ரம்லா என்ற இடத்தில் குடிபானங்களுடன் கூடியிருந்தோம். பெரிய பாத்திரங்களும் எங்களிடம் இருந்தன. நாம் மது அருந்திக் கொண்டிருந்தோம். நான் எழும்பியபோது நபி (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். நான் அவருக்கு ஸலாம் சொன்னேன். அப்போது தான் மது தடைசெய்யப்படும் வசனம் அருளப்பட்டது.

'ஈமான் கொண்டவர்களே! மதுபானமும், சூதாட்டமும் அருவருக்கத் தக்க ஷைத்தானிய செயல்கள். அவற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தைக் கொண்டும் சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டு பண்ணவும் அல்லாஹ்வின் நினைவிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களை தடுத்து விடுவதையுமாகும். எனவே அவற்றைவிட்டும் நீங்கள் விலகிக் கொள்வீர்களாக.. **(அல்குர்ஆன்:மாஇதா 90,91)**

நான் எனது நண்பர்களிடம் வந்து 'நீங்கள் விலகிக்கொள்வீர்களா'? என்ற வசனம் வரை ஓதிக்காண்பித்தேன். சிலரிடம் மதுக்கிண்ணம் இருந்தது, பாத்திரத்தில் மது இருந்தது. உதட்டின் கீழே சிலர் மதுவை வைத்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் பாத்திரத்திலிருந்தவற்றை கொட்டினார்கள். எமது ரப்பே.. நாம் விலகிக் கொண்டோம்' என்றார்கள். **(ஆதாரம்: தப்ஸீர் இப்னு கஸீர் 2/637)**

ஆரம்ப கால முஸ்லிம்கள் மதுவில் திளைத்திருந்த போதிலும் 'மது தடுக்கப்பட்டு விட்டது' என்ற வசனம் அருளப்பட்டதை செவிமடுத்தவுடன் அதனை தவிர்ந்து கொண்டார்கள். தனது வயிற்றிலுள்ள மதுவைக் கூட வாந்தியெடுத்து வெளியேற்றுகின்ற அளவுக்கு அவர்கள் நடந்து கொண்டார்கள்.

'மது தடுக்கப்பட்டு விட்டது' என்ற செய்தி மதீனாவெங்கும் வேகமாகப் பரவிக்கொண்டிருந்த போது, மதுவைத் தயாரிக்கின்ற பிரமாண்டமான பாத்திரங்களும், மதுவால் நிரம்பியிருந்த கிண்ணங்களும் உடைக்கப்பட்டன. பேரீச்சம், திராட்சை, தேன் கலந்து செய்யப்பட்டிருந்த மது வகைகள் கொட்டி அழிக்கப்பட்டன. மதீனாவின் பாதைகளில் மது ஆறாக ஓடியது. **(ஆதாரம்: தப்ஸீர் இப்னு கஸீர் 2/637) .**

மஸ்ஜிதுன் நபவியில் நபி (ஸல்) அவர்கள், 'அனைத்து வகை மதுவும் சூதும் தடுக்கப்பட்டு விட்டது' என்ற செய்தியை அமைதியாகவும், ஆழ்ந்த உணர்வுடனும் அறிவித்தார். அதனை அவரைச் சூழ பெரியதொரு கூட்டம் அமைதியாக உள்ளச்சத்துடன் செவிமடுத்துக் கொண்டிருந்தது. அவர்களது தலைகளில் பறவைகள் அமர்ந்து விட்டனவோ என்று நினைக்குமளவுக்கு அங்கு அமைதி நிலவியது.

நபியவர்கள் ஓதுவதனை நிறுத்திக் கொள்கிறார்கள். இதுவரை செவிமடுத்துக் கொண்டிருந்தவர்கள் உறுதியான தோரணையில், 'எங்கள் ரப்பே... நாங்கள் நிறுத்திக் கொண்டோம். எங்கள் ரப்பே... நாங்கள் நிறுத்திக் கொண்டோம்' என்றார்கள்.

**(ஆதராம்: தப்ஸீர் இப்னு கஸீர், 2/636)**

அல்லாஹ்வின் கட்டளைக்கு முன்பாக இவ்வாறான முழுமையான கட்டுப்பாட்டையும் பூரண கீழ்ப்படிவையும் நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள். ஆங்காங்கே எஞ்சியிருந்த மதுவையும் ஸஹாபாக்கள் தேடித்தேடி கொண்டு வந்தார்கள்.

ஒரு தடவை இப்னு உமர் (ரழி) நான் நபி (ஸல்) அவர்களுடன் மஸ்ஜிதில் இருந்தேன். நபியவர்கள் அமர்ந்திருந்தார்கள். 'யாரிடம் மது இருக்கிறதோ அவர் அதனை கொண்டு வரட்டும்' என்றார்கள். அப்போது அவர்கள் கொண்டு வரலானார்கள். அப்போது ஒருவர், 'என்னிடம் மதுவை சுமக்கும் ஒரு மிருகம் உண்டு, மற்றொருவர், 'என்னிடம் மதுவை சேமிக்கும் பாத்திரமொன்று உள்ளது' என்றார்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களிடம் இருப்பவற்றைக் கூறினார்கள். 'அவை அனைத்தையும் இந்த வெட்டவெளியில் ஒன்று சேருங்கள். அதன் பின்னர் எனக்கு அறியத் தாருங்கள்' என்றார்கள். அவ்வாறு செய்துவிட்டு அறிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் எழும்ப, நானும் அவருடன் சேர்ந்து எழும்பினேன். மது இருந்த இடத்திற்கு சென்றார்கள். அங்கு அவர், 'இது என்னவென்று தெரியுமா?' என வினவ, அதற்கவர்கள், 'அல்லாஹ்வுடைய தூதரே... இது மது' என்றார்கள். அதற்கவர், 'நீங்கள் உண்மை கூறுகிறீர்கள்' என்று கூறிவிட்டு, 'நிச்சயமாக அல்லாஹ் மதுவை காய்ச்சுபவர், காய்ச்சுமாறு வேண்டுபவர், குடிப்பவர், புகட்டுபவர், சுமப்பவர், சுமக்கப்படும் இடம், விற்பவர், வாங்குபவர், அதன் பெறுமதியை அனுபவிப்பவர் ஆகிய அனைவரையும் சபித்துள்ளான்' என்றார்கள். அதனைத் தொடர்ந்து ஒரு கத்தியை எடுத்து வருமாறு வேண்டினார். அதனை தீட்டுங்கள்' என்றார்கள். அவ்வறு செய்யப்பட்டது. பின்பு அதனை எடுத்து மது சுமக்க பயன்படுத்தும் தோலிலான பாத்திரத்தை வெட்டினார்கள். 'நான் வெட்டுகிறேன்' என்று உமர் (ரழி) கூறிய போதும் இல்லை என்று மறுத்து விட்டார்கள்.

இந்த ஹதீஸை அறிவிப்பவர் கூறுகிறார், 'தோலிலான பாத்திரத்தில் பிரயோசனம் இருக்கிறதல்லவா? எனக் கேட்கப்பட்ட போதும் நபியவர்கள் அப்பாத்திரத்தைத் தொடர்ந்து சிதைத்துக் கொண்டிருந்தார்கள். 'உண்மைதான், என்றாலும் நான் அல்லாஹ்வுக்காக கோபப்பட்டு இதனை செய்கிறேன். ஏனெனில் இவ்விடயத்தில் அல்லாஹ்வின் கோபம் இருக்கிறது' என்று அமைதியான குரலில் கோபத்தோடு கூறினார்கள். **(ஆதாரம்: தப்ஸீர் இப்னு கஸீர்; 3/640, 641, பைஹகி)**

மேலும் ஷாம் போன்ற தூர தேசத்திலிருந்து மதீனாவுக்கு மது விற்பனைக்காக வந்திருந்தவர்கள் கூட இதற்கு கட்டுப்பட்டார்கள். இலாபகரமான மது வியாபாரத்தை அவர்கள் கைவிட்டார்கள். மதுவை விற்பதற்கோ, குடிப்பதற்கோ, கொடையாக கொடுப்பதற்கோ கூட அவர்கள் முயற்சிக்கவில்லை.

அது ஹராமாக்கப்பட்டு, சபிக்கப்பட்டு விட்டது. அல்லாஹ்வும் ரஸூலும் சபித்த மதுவை கொட்டி விடுவதால் ஏற்பட்ட நட்டம் குறித்து அவர்கள் கொஞ்சமும் கவலைப்படவில்லை.

மது தொடர்பான இறை கட்டளை சில மணித்தியாலயங்களுக்குள் மதீனாவில் முழுமையாக நடைமுறையானது. போதைக்கு எதிராக மனித குலம் தொடுத்த மிக வெற்றிகரமான நடவடிக்கையாக இது அமைந்தது. முஸ்லிம்கள் மதுவை தவிர்ந்து கொண்டதோடல்லாமல் அதனை மீண்டும் நினைவு கூர்ந்து அதன்பால் செல்லாதவர்களாகவும் மாறினார்கள். மனித இன வரலாறு கண்ட போதைப்பொருளுக்கு எதிரான சாதனைமிக்க போராட்டம் இதுவேயாகும்.

**யூ.கே. றமீஸ் எம்.ஏ (சமூகவியல்)**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# மிஃராஜ்: அற்புதங்கள் நிறைந்த பயணம்

இஸ்லாம் விஞ்ஞானத்தையும் வென்ற மெஞ்ஞான மார்க்கம் என்பதை, நபியவர்களின் புனித 'மிஹ்ராஜ்' பயணம் நிரூபிக்கிறது. அன்றைய காலத்தில் அறிவியலில் மிகத் தூரத்திலிருந்த அரபிய சமூகத்தினர் மத்தியில் இப்பயணம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தாலும் ஆத்மீக உணர்வு, அறிவுகளால் தான் முஸ்லிம்கள் இப்பயணத்தை ஈமான் கொண்டனர்.

இஸ்லாத்தின் இலட்சியப் பயணத்துக்கும் இப்புனித பயணம் அத்தாட்சியாகத் திகழ்கிறது. இறைவன் தன்னைப் பற்றிக் கூறும் போது, 'வானங்கள், பூமியின் ஒளியாக இறைவன் இருக்கிறான்' என்கிறது அல் குர்ஆன். ஆனால், ஒளி வேகம், ஒலி வேகம் என கணித விற்பன்னர்கள் பயன்படுத்தினாலும், ஒளி என்பது இறைவனைக் காட்டும் மறை பொருளாகவும், வானங்கள், பூமி என்பன இறைவனின் வெளிப்படைப் பொருளாகவும் உள்ளதையே, திருமறை எமக்கு மறைமுகமாகச் சொல்கிறது. திருமறையின் இக்கூற்று இறைவனின் இருப்பையும் அத்தாட்சிப் படுத்துகிறது. இந்த வேகத்தில்தான், நபியவர்களின் புனித மிஹ்ராஜ் பயணமும் இடம்பெற்றிருப்பதை இன்றைய விஞ்ஞானம் நிரூபிப்பதை காணலாம்.

மிஃராஜ் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று மக்காவிலிருந்து பைதுல் முகத்திஸ் (பலஸ்தீன்) வரை புராக் வாகனத்தில் இடம்பெற்றது. அதுவே இஸ்ராவாக விளங்குகின்றது. மற்றையது அங்கிருந்து ஏழு வானங்களைக் கடந்த விண்ணுலகப் (மிஃராஜ்) பயணமாக அமைந்தது. 1400 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்த அற்புதம் ஈமானை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. ஏழு வானங்கள், அதற்கு மேலுள்ள அண்டசராசரங்களை தாண்டி அல்லாஹ்வை சந்தித்து திரும்பியமை ஒளியின் வேகத்திலே நடந்திருக்கிறது.

இறைவன் படைப்பின் இரகசியங்களை வெளிப்படுத்தவும் மனிதர்களுக்குள் சமாதானத்தை நிலைநாட்டவுமே மிஃராஜ் பயணத்தை உலக மக்களுக்கு நிகழ்த்திக் காட்டியிருக்கிறான். இஸ்லாத்திற்கு எதிரான குறைஷியர் நபி (ஸல்) அவர்களை பொய்ப்பிப்பதற்காக இப்பயணத்தையும் தூக்கிப்பிடித்தனர்.

இப்பயணம் தொடர்பாக நபிகளாரின் ஆருயிர்த் தோழர் அபூபக்கர் (ரழி) அவர்களிடம் சென்று, 'அபூபக்கரே! உமது நண்பரின் பித்தலாட்டம் பற்றி இப்போதாவது அறிய மாட்டீரா? அவர் ஒரேயொரு நொடியில் ஒரு மாத கால பயணத்தையும் ஏழு வானங்களையும் கடந்து, சுவர்க்கம் நரகம் இரண்டையும் சுற்றிப் பார்த்து, இறைவனுடன் உரையாடி, மீண்டும் உலகிற்கு திரும்பி விட்டதாக கூறுவதை உம்மால் நம்ப முடியுமா? என்று கேட்டனர். அதற்கு அபூபக்கர் (ரழி) அவர்கள் எந்தத் தாமதமும் இல்லாமல் குறைஷிகளை விழித்து, நண்பர்களே... அவ்வாறு முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினாரா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், வியந்தவர்களாக, அபூபக்கரே! நீரே அவரிடம் சென்று அவரைக் கேட்டுப் பாரும். நாங்களும் வருகிறோம்' என்றனர்.

அதற்கு அபூபக்கர் (ரழி) அவர்கள், 'நீங்கள் வியப்படைய வேண்டாம். இதைப்பற்றி நான் முஹம்மதிடம் கேட்கப் போவதில்லை. முஹம்மத்(ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியிருந்தால் அது உண்மையாகவே இருக்கும். அதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்' என்று மிகவும் சாதாரணமாக பதிலளித்தார்.

அபூபக்கர் (ரழி) அவர்களின் பதிலானது குறைஷியரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அவர்கள் எதிர் பார்த்த பதில் அபூபக்கர் (ரழி) அவர்களிடம் இருந்து கிடைக்கப்பெறாத ஏமாற்றத்துடன் அவர்கள் திரும்பினர்.

மிஃராஜ் பயணத்தின் ஊடாக அல்லாஹுத ஆலா நபி(ஸல்) அவர்களின் சிறப்பித்துள்ளான். மிஃராஜ் பயணத்தில் நபியவர்கள் பெற்று வந்த, ஐவேளைத் தொழுகையானது, மானிட சமத்துவத்தை மதிப்பதற்கு நிகராக எந்த திட்டங்களும் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளன. மிஃராஜ் ஒரு சாதனை மிக்க அற்புத பயணமாகும்.

**பன்னூலாசிரியர் மௌலவி றபீயுத்தீன் ஜமாலி**

# முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய உறவு முறை

வறுமை ஒழிப்புக்காக இஸ்லாம் முன்வைக்கும் வழிமுறைகளில் செல்வந்தர்கள் தம் உறவினர்களைப் பொறுப்பேற்றலும் ஒரு வழிமுறையாகும். வேலைவாய்ப்புகளில் ஈடுபட முடியாதோர் இதன் மூலம் வாழ்வு பெற முடியும். அதனால் இஸ்லாம் இதனை அதிகமாக வலியுறுத்தியுள்ளது. இதில், ஒரு குடும்ப அங்கத்தவர் வசதியற்ற தன் குடும்பத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வதும் முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாறு பரஸ்பரப் பொறுப்பேற்றல் மூலம் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்தவும் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இந்த உறவையே 'இரத்த பந்தம்' என்றும் 'நெருங்கிய உறவு' என்றும் அது அழைக்கிறது. இது தொடர்பில் அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றது.

'இன்னும், அல்லாஹ்வின் வேதப்படி (அவர்கள்) உங்கள் உறவினர்களே.. ஒருவர் மற்றொருவருக்கு மிக நெருக்கமுடையவரும் ஆவார்'. **(அல் குர்ஆன் 08:75)**

ஒரு முஃமின் தனது உறவினர்களுக்குப் புரிய வேண்டிய கடமைகளை இதன் மூலம் உணர்த்தும் அல் குர்ஆன், இரத்த பந்தத்தைத் துண்டித்துக் கொள்வோரையும் உறவினருக்கு நோவினை செய்வோரையும் எச்சரிக்கவும் தவறவில்லை. 'நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும் உறவினர்களுக்கு கொடுக்குமாறும் (உங்களை) ஏவுகிறான்' **(அல்குர்ஆன் 16:90)**

'ஆகவே, உறவினர்களுக்கு அவர்களது உரிமைகளைக் கொடுத்து வருவீராக! அவ்வாறே ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் (அவர்களுக்குரிவற்றைக் கொடுத்து வருவீராக) எவர்கள் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடுகிறார்களோ, அவர்களுக்கு அது மிக்க நன்மையுடையதாகும்' **(அல்குர்ஆன் 30:36)**

இதேவேளை நபி (ஸல்) அவர்கள் 'யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசிக்கிறாரோ அவர் இரத்த பந்தத்தைப் பேணிக் கொள்ளட்டும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். **(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)**

அல் குர்ஆனும் நபிமொழிகளும் வலியுறுத்தியுள்ளபடி ஏனையோரை விடவும் தமது உறவினர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்கே ஒரு முஃமின் முன்னுரிமை அளிக்க வேண்டும். அத்தோடு உறவினர்கள் சம்பந்தப்பட்ட இவ்விடயம் பெற்றோருக்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெறுகிறது. இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் எடுத்துக் காட்டுகின்றது. 'மேலும் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும் தாய் தந்தையருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள்'

**(அல்குர்ஆன் 04:36)**

இவ்வாறு உறவினர்களுக்கு உதவி, உபகாரம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள இஸ்லாம், ஒருவர் தமது சக்திக்கு மேல் அவர்களுக்கு செலவு செய்ய வேண்டுமென எவரையும் நிர்ப்பந்திக்கவுமில்லை. முஸ்லிம் சமூகம் இவ்வழிகாட்டல்களை முழுமையாகக் கடைப்பிடிக்குமாயின் பரஸ்பரம் உதவி ஒத்துழைப்பு புரியக்கூடிய சிறந்த சமூகமாக மாறும் காலம் வெகுதூரத்தில் இராது எனலாம்.

**ஏ.எம். முஹம்மத் ஸப்வான்...**
சீனன்கோட்டை, பேருவளை

# கவலை தொடர்பில் இஸ்லாத்தின் பார்வை

கவலை என்பது மனதை துன்புறுத்தும் செயல். அதற்கு அடிமையாகாமல் எல்லா வழிகளிலும் கவலையை மனதிலிருந்து களைவது இறைநம்பிக்கையாளனின் பொறுப்பாகும்.

கவலை வாழ்வின் நோக்கமன்று. கவலையினால் பலன்களை அடைய முடியாது. அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் 'இறைவா கவலையிலிருந்தும் துக்கத்திலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன்' என்று பிராத்தனை செய்து வரக்கூடியவர்களாக இருந்தார்கள்.

நடக்க விருப்பதை நினைத்துக் கவலைப்படுவதும், நடந்து முடிந்ததை எண்ணி துக்கப்படுவதும் உள்ளத்தைப் பலவீனப்படுத்தும். மன வலிமையை ஆட்டங்காணச் செய்யும், கவலை வாழ்வைக் காயப்படுத்திக் கொண்டே இருக்கும். அது ஆன்மாவை பலமிழக்கச் செய்யும். கவலையால் தடுமாற்றம், சோர்வு, விரக்தி என்பன ஏற்படும். அவை வாழ்வின் அழகை மெல்ல மெல்ல சீர்குலைக்கும். இறுதியில் வாழ்வில் இழப்பும் வேதனையும் தான் மிஞ்சும்.

அதனால் கவலையை அதற்குரிய இடத்தில் வைக்கவும், எங்களை விட்டும் எல்லாக் கவலைகளையும் நீக்கிவிட்ட இறைவனுக்கே எல்லாப் புகழும்' **(அல் குர்ஆன்)**

மேலும் கவலை ஒரு சோதனையாகும். அதனால் தான் கவலையில் அவதியுறும் மனிதர்களுக்கு இறைவன் நன்மைகள் அளிக்கின்றான்.

அதேநேரம் பிராத்தனை மூலமும் ஆக்கபூர்வமான செயல்கள் ஊடாகவும் கவலையைப் போக்க முயற்சிக்க வேண்டும்.

ஒரு மனிதன் தவறிழைத்து விட்டாலோ நன்மை புரிவதற்கான வாய்ப்பைத் தவறவிட்டாலோ அதற்காக வருந்த வேண்டும், கவலைப்பட வேண்டும். இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதில் குறை ஏற்பட்டால் அதற்காகக் கவலைப்பட வேண்டும். அது இறை நம்பிக்கையாளனின் அடையாளம் என்பதோடல்லாமல் அவன் நேர் வழியில் இருக்கிறான் என்பதற்கான சான்றுமாகும்.

நபி (ஸல்) அவர்கள், 'ஓர் இறை நம்பிக்கையாளருக்கு ஏற்படும் துக்கம், கவலை ஆகிய எதுவாயினும் அதற்குப் பதிலாக அவருடைய பாவங்களில் சிலவற்றை இறைவன் மன்னிக்காமல் இருப்பதில்லை என்றார்கள். கவலை இறைவனது சோதனைகளில் ஒன்று.

அதன் மூலம் இறைவன் மனிதர்களின் பாவங்களை மன்னிக்கிறான் என இந்நபிமொழி தெளிவுபடுத்துகிறது.

நோய், துன்பம், துயரம் ஆகிய ஏதேனும் ஒரு வடிவில் உனக்குக் கவலை ஏற்படலாம். அதனால் மகிழ்ச்சிமான வாழ்வு அமையப்பெற இறைவனிடம் பிரார்த்தனை செய்வது அவசியமாகும்.

**கே.எல். ஹில்மி ...**
தேசிய பாடசாலை
சம்மாந்துறை 10

## மரண அறிவித்தல்

**செல்வி. மணிமேகலை கனகரத்தினம்** முன்னர் அமெரிக்காவிலும், தற்பொழுது வெள்ளவத்தை, கொழும்பில் வ சித்தவருமாகிய செல்வி மணிமேகலை கனகரத்தினம் அவர்கள் காலமானார். அன்னார் மறைந்த கனகரத்தினம், பாக்கியம் அவர்களின் அன்பு மகளும், யோகேஸ்வரி, தவேந்திரன், சுரேந்திரன், பத்மினி, இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வோல்டர், நிதி, சாந்தி, இன்பா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நெலும், சமன், ரதினி, ததீசன், தர்மிலா, ரஜீவ், ரோமலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் வெள்ளிக்கிழமை 25ஆம் திகதி 11 மணியளவில் மவுன்ட்லவேனியா மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, கொஹுவெல மயானத்தில் 1 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். 014301

# முகக்கவசங்களை வீசி எறிவதால் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு

*திறப்பனை தினகரன் நிருபர்*

பாவிக்கப்பட்டு முறையாக அகற்றப்படவேண்டிய முகக் கவசங்களை கண்டபடி வீதிகளில் வீசி எறிவதால் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

மாதமொன்றுக்கு சுமார் 03 இலட்சம் வரையான பாவிக்கப்பட்ட முகக் கவசங்கள் சுற்றாடலில் சேர்க்கப்படுவதாகவும், இவற்றில் உள்ள பிளாஸ்டிக் பகுதி அகற்றப்பட்டு ஏனையவற்றை முறையாக அகற்றுவதன் ஊடாக ஏற்படும் சுற்றாடல் பிரச்சினையை தவிர்க்கலாம் என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

(கண்ட கண்ட இடங்களில் வீசப்படும் முகக் கவசங்கள் தற்பொழுது உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு, அவை ஏனைய கழிவுப் பொருட்களிலிருந்து வெறுபடுத்தப்பட்டு, அவற்றை முறையாக அகற்றி விடுவதாகவும் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக மேலதிக செலவீனங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஏற்படுவதாகவும் அகற்றப்படும் முகக் கவசங்களை பிளாஸ்டிக் பகுதி நீங்கலாக ஏனையவற்றை வீட்டுக்கு அருகாமையில் தீ இட்டு எரிப்பதன் மூலம் சரியாக முகாமைத்துவம் செய்யும் வாய்ப்பு ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் ஜகத் வெள்ளவத்த (18) ரோமில் உள்ள பலாஸ்ஸோ டெல் குய்ரினாலேவில் வைத்து இத்தாலி ஜனாதிபதி செர்ஜியோ மேட்டரெல்லாவிடம் நற்சான்றிதழ் கடிதங்களைக் கையளித்த பின்னர் பிடிக்கப்பட்ட படம்.

## அத்துமீறி...

விசைப்படகுகளையும் கைப்பற்றினர். கைது செய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் மயிலிட்டி துறைமுகத்திற்கு கடற்படையினர் கொண்டு சென்றுள்ளனர்.

## இந்தியாவுடன் ஒரு பில்லியன்...

இந்திய அரசின் தலையீட்டுடன், இந்தியன் வங்கியுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதற்காக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெள்ளிக்கிழமை இந்தியா செல்லவுள்ளார்.

பசில் ராஜபக்ஷவுடன், தானும் இந்தியா செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நாட்டிலுள்ள பிரச்சினைகளை...

தொற்றுநோயுடன் அரசியலை கலப்பதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சியினர் தொடர்ந்தும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை கூறி மக்களை ஏமாற்றி வருவதாகவும், தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் செயற்படுத்திய அனைத்து கொள்கைகளையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விமர்சித்து வருகின்றனரென்றும் அவர் தெரிவித்தார்.

நாடு சுகாதார அவசரநிலையைக் கையாள்கையில், எதிர்க்கட்சிகளும் அதன் தலைவர்களும் கருத்துக்களை பொறுப்புடனும்,விவேகத்துடனும் வெளியிட வேண்டும்.

தொற்றுநோயின் போது கூட எதிர்க்கட்சிகள் தனது அரசியல் நலன்களை மேம்படுத்துவதில் மாத்திரம் கவனம் செலுத்துகின்றன.இவர்களின் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் பதிலளிப்பர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழக மீனவர்களை...

தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின், மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தொடரும் மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமென அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கைதான மீனவர்கள், அவர்களின் படகுகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கை இந்திய மீனவர்களின் பேச்சுவார்த்தை உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவரும் இந்திய இலங்கை மீனவர் பேச்சுவார்த்தை குழு உறுப்பினருமான என். தேவதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் ...

தலைமை ஆசிரியராக செயற்பட்டு வந்திருந்த அவர், 'லக்பிம' தேசிய வார இதழின் ஸ்தாபக ஆசிரியருமாவார். தனியார் தொலைக்காட்சியொன்றில் “முல் பிட்டுவ' என்ற பத்திரிகைக் கண்ணோட்டம் நிகழ்ச்சி மூலம் அவர் நாடு முழுவதும் பலராலும் நன்கு அறியப்பட்ட நபராக பிரபல்யம் அடைந்திருந்தார்.

2007 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை அமரர் பந்துல பத்மகுமார லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராக கடமையாற்றியுள்ளார்.

## ஜனாதிபதி செயலகம் முன்பாக...

புறக்கணித்து இந்த ஆர்பாட்டத்தில் நேற்று (24) அவர்கள் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், இரா.சாணக்கியன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரக்குமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்கினேஸ்வரன் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## மிகக் குறுகிய காலத்திற்கே...

நாட்களுக்கும், 95 ரக பெற்றோல் நாற்பது நாட்களுக்கும், டீசல் எட்டு நாட்களுக்கும், சூப்பர் டீசல் எட்டு நாட்களுக்குமே கைவசம் உள்ளன. எனினும் எதிர்காலத்தில் எரிபொருள் கிடைக்கவுள்ளது. மேலும் ஆறு நாட்களுக்கு தேவையான டீசல் இப்போதும் இறக்குமதி செய்யப்படுகின்றது.

அடுத்த மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய 1,285.50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றது.

இருந்தும் அடுத்த ஆறுமாத காலத்திற்கான தேவை குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம். இதில் 500 மில்லியன் டொலர்களை இந்திய நிதி உதவியிலிருந்து பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

ஏனைய நிதியை பெற்றுக் கொள்ள முயற்சித்துக்கொண்டுள்ளோம்.

அதற்காக பல தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார். பாராளுமன்றத்தில் நேற்று எரிபொருள் தட்டுப்பாடு நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## மின் துண்டிப்பால் இணையவழி...

நேரங்களில் மின் துண்டிப்பு அமுலாக்கப்படுவதால், தொலைதூர பகுதிகளிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒரே நேரத்தில் இணையவழி கற்பித்தலில் ஈடுபடுவதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் மின்வெட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## இறக்குமதியான 41,000 மெ.தொன்...

தற்போது விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம் 5,000 மெட்ரிக் டன் டீசலும், 4,000 மெற்றிக் தொன் பெற்றோலும் நாட்டுக்கு தேவைப்படுகிறது.

இந்நிலையில், நாடுமுழுவதுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, டீசல் இல்லாததால், நேற்றைய தினம் 20 சதவீத தனியார் பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுன விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமாயின் தங்களுக்கு சலுகை அடிப்படையில் எரிபொருளை வழங்க அரசாங்கம் பொறிமுறையொன்றை தயாரிக்க வேண்டும்.

இதற்கு மேலும் பஸ் கட்டணங்களை உயர்த்தி பொதுமக்களை அசௌகரியத்திற்குள்ளாக்க முடியாதென தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

## சபையில் பதாதைகளை ... 
(03ஆம் பக்கத் தொடர்)

கலையரசன்,விநோ, சாணக்கியன்,சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பி.க்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''பறிக்காதே,,,பறிக்காதே,,, தமிழர் நிலங்களை பறிக்காதே ''பறிக்காதே,,,பறிக்காதே,,, காடுகளை பறிக்காதே ''எனக்கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது குறுக்கிட்ட விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான சி.பி. ரத்னாயக்கவும், இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவும் இந்த ஆர்ப்பாட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த குழுக்களின் பிரதித்தலைவரான அங்கஜன் இராமநாதனிடம் கேட்டுக் கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்.பி.க்களை கட்டுப்படுத்த அவர் முயன்றபோதும், அவர்கள் உரத்த குரலில் கோஷங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டனர்.

ஜெனீவா அமர்வுக்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ் எம்.பிக்கள் செய்வதாகவும் தமிழ் மக்கள் மீது இவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாதெனவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குற்றம்சாட்டினார். பாராளுமன்ற சம்பிரதாயம் தெரியாவிட்டால் சுமந்திரன் எம்.பி.யி டம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் சி.பி. ரத்னாயக்க தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாதென வழங்கிய உறுதிமொழியையடுத்து தமிழ் எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.

## நெருக்கடி நிலைக்கு...

நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

ரஷ்ய மற்றும் உக்ரைன் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்துள்ள நிலையில், அதன் பின்னணியில் நாட்டுக்கு ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்கு அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்?

பாராளுமன்றத்தில் நேற்று (24) 27ன் கீழ் 2ல் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் நிதி கையிருப்பை முகாமைத்துவம் செய்ய முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் நிலையில், எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் நிற்பதை கடந்த சில நாட்களாக காணமுடிகிறது.

மின்சார துண்டிப்பு ஏற்படுவதால், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். சுற்றுலாத் துறை, கைத்தொழில் துறை உள்ளிட்ட பல துறைகள் பெரும் பாதிப்பை எதிர் கொள்ள நேரிட்டுள்ளன

ரஷ்யா உக்ரேன் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்த நிலையில் எமது நாட்டு தேயிலை ஏற்றுமதிக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகலாம்.

எமது நாட்டின் பெருமளவு தேயிலையை ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் கொள்வனவு செய்கின்றன. அதனை கவனத்திற்கொண்டுஅரசாங்கம்மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்ன என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கேள்வி எழுப்பினார்.நிதியமைச்சர் அதற்கு பதில் வழங்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## ஜெனீவாவில் அரசை...

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஜனாதிபதியைச் சந்தித்து

மகஜரொன்றைக் கையளிக்கவே தாம் வந்ததாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான எவ்வித முன்னறிவிப்பும் நேற்று (24) அவர்களால் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஜனாதிபதி நேற்று முற்பகல் ஏற்கனவே திட்டமிட்டிருந்த வேலைத்திட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில், பிரதமரைச் சந்திப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் அந்தக் கூட்டத்துக்குச் செல்லாமல் ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி தனது அலுவலகத்தில் இல்லாத போது வருகை தந்து அவர்களால் நடத்தப்பட்ட இந்தப் போராட்டம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கத்தை தவறாகப் பிரதிபலிப்பதற்கு திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதி என்பது தெளிவாவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொவிட்19 தடுப்பூசிகளால்... 
(03ஆம் பக்கத் தொடர்)

யுள்ளது.

ஆகவே, தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களின் மரண வீதம் குறைவானது என்பதே இதன் மூலம் வெளிப்படுகின்றது.

எனவே, மரணங்களை குறைக்க பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொண்டமை சாதகமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது. எனவே மக்கள் தமக்கான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தினார்.

## EPF மிகை வரி சட்ட ... 
(03ஆம் பக்கத் தொடர்)

சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து மிகை வரியோ வேறு வரியோ அறிவிட முடியாதென திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று ஹர்ச டி சில்வா எம்.பி குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பதிலளிக்கையில், ராஜபக்ஷவினர் 14 வீதம் வரி அறவிடுவதாக எதிரணி குற்றம் சாட்டியது.

10 வீதம் அறவிட்ட வரி, 2018 இல்,14 வீதமாக அதிகரிக்கப்பட்டது.

அமைச்சர் பந்துல குணவர்த்தன பதிலளிக்கையில்,

2017 உள்நாட்டு இறைவரி சட்டத்தை திருத்தி, புதிய சட்டத்தை நல்லாட்சி அரசு கொண்டுவந்தது. கம்பனி சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியையும் கொண்டு வந்தனர். வரி அறிவிடப்படுவதற்கான பொறுப்பை எதிரணிதான் ஏற்க வேண்டும். இந்த வெட்கம் கெட்ட செயலை இவர்களே செயதேனர் என்றார்.

மீண்டும் குறுக்கீடு செய்த ஹர்ச டி சில்வா எம்.பி,

கம்பனி பதிவாளர் சட்டத்தை இருவிதமாக வியாக்கியானம் செய்யலாம். 2017 இல் வருமான வரிச் சட்டமே கொண்டு வரப்பட்டது. ஏன் வர்த்தமானியை மீளப் பெற முடியாது என்றார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன மீண்டும் எழுந்து நின்று ,

வரிச்சலுகை அளிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம், ஓய்வூதிய திணைக்களம் என்பவற்றை கம்பனிகளாக வரி அறவிடச் செய்தது கடந்த அரசுதான் என்றார்.

அடுத்து இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவும் கருத்து வெளியிட்டார்.

2017 இல், இது தொடர்பான சட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது, ஹர்ச எம்.பி ஆதரவாக வாக்களித்துள்ளார். வரி அதிகரிப்பு அதன் பின்னரே நடந்தது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

லக்ஷமன் கிரியெல்ல எம்.பியும் இந்த சர்ச்சையில் கருத்துவெளியிடுகையில், 2017 சட்டத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கு 25 வீதம் மிகை வரி அறவிடுவதாக குறிப்பிடப்படவில்லை என்றார்.

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இதற்குப் பதில் அளித்தார். 25 வீதம் அறவிடுவதாக குறிப்பிடப்படாவிட்டால் எத்தனை வீதம் அறவிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது? இவர்கள் வரியை அதிகரித்துவிட்டு இங்கு, வேறு கதை சொல்கின்றனர் என்றார்.

25 வீதம் மிகை வரி அறவிடும் வர்த்தமானியை வாபஸ் பெற வேண்டும் என்று ஹர்ச டி சில்வா எம்.பி கோரினார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன இதற்கு பதில் அளித்தார்.

25 வீதம் மிகை வரி சட்டத்தில் சேமலாப நிதி உள்ளிட்ட நிறுவனங்கள் உள்வாங்கப்படாதென நிதி அமைச்சர் திருத்தங்களை முன்வைப்பார்.அத்தோடு பிரச்சினை முடிந்துவிடும் என்றார்.

சமந்த விஜேசிங்க எம்.பி குறிப்பிடுகையில்

நல்லாட்சி அரசு கொண்டு வந்த சட்டங்கள் பற்றி பேசாமல், மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி மாற்றங்கள் செய்யுங்கள் என்றார்.

ரணில் விக்கிரமசிங்க எம்.பி இந்த சர்ச்சையில் கருத்து வெளியிடுகையில்,

2017 வருமான வரிச்சட்டத்தில் என்ன தவறு உள்ளது? மிகை வரி சட்டத்தை வருமான வரிச்சட்டத்துடன் தொடர்பு படுத்தாதீர்கள். திருத்தத்திற்கு நாம் ஆதரவு வழங்குவோம் என்று குறிப்பிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் தனியான விவாதம் நடத்துமாறு கோரிய சபாநாயகர், சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.(பா)

## தடை செய்யப்பட்ட பொருளை...

அபேவர்தன சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளை நிறைவடைந்த பின்னர், சபை முதல்வரான தினேஷ் குணவர்தன முக்கிய விடயம் ஒன்றை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அதன்போது பாராளுமன்றத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், சபைக்குள் கொண்டு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள உபகரணம் ஒன்றை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபைக்குள் எடுத்து வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அதனை சோதனையிட முற்படுகையில், அங்கு பொலிஸாருக்கும் சம்மந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்குமிடையே பெரும் விவாதம் ஏற்பட்டதாக அவர் சபையில் தெரிவித்தார்.

மேற்படி உபகரணத்தை எவரும் சபைக்குள் கொண்டு வரமுடியாது. அத்தகைய உபகரணங்களில் இரசாயனம் உள்ளடங்கி இருக்கலாம்.

அது தனிப்பட்ட எனக்கு மட்டுமன்றி முழு பாராளுமன்றத்தின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகும். என சபையில் தெளிவுபடுத்தினார்.

அதன்போது, எதிர்கட்சி உறுப்பினர்கள் சிலர் சிரிப்பொலி எழுப்பினர். இதையடுத்து. தற்போது சிரிப்பவர்கள்தான் ஈஸ்டர் குண்டு தாக்குதலை நடத்தி 300க்கும் மேற்பட்ட மக்கள் பலியாக காரணமானவர்கள். அதேபோன்று புஞ்சி பொரளை தேவாலயத்தில் அத்தகைய அழிவை ஏற்படுத்த முயன்றவர்களும் இவர்களே! அது தொடர்பில் சபாநாயகர் தமது முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இதையடுத்து கருத்து தெரிவித்த சபாநாயகர்: கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுக்கு இணங்க அனாவசியமான பொருட்களை சபைக்குள் எடுத்து வர முடியாது, இதைக்கண்காணிக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதனால், உஷார் அடைந்த எதிர்க்கட்சியினர் பதாகைகளை ஏந்தி, டோர்ச் ஒளியை பரப்பி சபையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் தொடரவே சபையை கட்டுப்படுத்தும் வகையில் 10 நிமிடங்கள் சபையை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

மீண்டும் சபை நடவடிக்கைகள் ஆரம்பித்தபோது, மேற்படி உபகரணத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயனம் உள்ளடங்குவதாகவும் அதனை சபைக்குள் கொண்டு வருவது தடை என்றும் அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்றால் அது வீட்டுப் பயன்பாட்டுக்கு பிரயோசனமாக இருக்கும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து வழமை போன்று சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகின. மேற்படி சர்ச்சை சுமார் அரை மணித்தியாலங்கள் சபையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் மீது ரஷ்யா...

போருக்குப் பின் ஐரோப்பாவில் ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு எதிராக நடத்தும் மிகப்பெரிய தாக்குதலாக இது மாறியுள்ளது.

உக்ரைனின் பிரதான நகரங்களில் ஏவுகணை தாக்குதல்கள் மற்றும் வெடிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

கிழக்கு செர்னிஹிவ், கார்கிவ் மற்றும் லுஹன்ஸ் பிராந்தியங்கள் மற்றும் தெற்கில் கடல் வழியாக ஒடெசா மற்றும் மரியுபோல் நகரங்களுக்குள் ரஷ்ய துருப்புகள் நுழைந்திருப்பதாக உக்ரைன் குறிப்பிட்டுள்ளது.

மேலும் பெலாரஸ் நாட்டு எல்லை ஊடாகவும் ரஷ்ய படைகள் நாட்டுக்குள் வருதாக உக்ரைன் கூறியுள்ளது.

உக்ரைன் தலைநகர் கீவில் நேற்று சூரியோதயத்திற்கு முன்னர் வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. அருகிலுள்ள பிரதான விமானநிலையத்தில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டதோடு நகர் முழுவதும் சைரன் ஒலி எழுப்பப்பட்டது. பீதியடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கும் நகரை விட்டு வெளியேறுவதற்கும் முண்டியடிக்கின்றனர்.

உக்ரைன் மீதான படை நடவடிக்கை பற்றிய புட்டினின் அறிவிப்பு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. உக்ரைனில் இனப்படுகொலைக்குள்ளாகும் ஆபத்தை எதிர்கொள்ளும் ரஷ்ய குடிமக்கள் உட்பட மக்களை பாதுகாப்பதற்கான “விசேட இராணுவ நடவடிக்கை” ஒன்றுக்கு உத்தரவிட்டதாக புட்டின் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் தமது நாட்டை அழிப்பதே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் நோக்கமென்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிட் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மக்களுக்காக பிரார்த்திப்பதாக குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பதில் நடவடிக்கையாக கடும் தடைகள் விதிக்கப்படுவது பற்றி உறுதி அளித்தார்.

தாம் ஜி7 தலைவர்களை சந்திக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா மீது இதுவரை இல்லாத கடுமையான பொருளாதார தடைகளை விதிப்பதாக ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார தலைவர் ஜோசெப் பொரெல் உறுதி அளித்துள்ளார்.

ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு மத்தியில் இதுவரை சுமார் 40 பேர் கொல்லப்பட்டிருப்பதாக உக்ரைன் ஜனாதிபதியின் ஆலோசகர் ஒலெக்சி ரெஸ்டோவின் குறிப்பிட்டுள்ளார். எனினும் கொல்லப்பட்டவர்களில் பொது மக்கள் இருப்பது பற்றி அவர் குறிப்பிட்டு கூறவில்லை.

இந்நிலையில் ரஷ்யாவுடனான இராஜதந்திர உறவுகளை துண்டிப்பதாக உக்ரைன் அறிவித்துள்ளது.

44 மில்லியன் மக்கள்தொகை கொண்ட ஜனநாயக நாடான உக்ரைன், ஐரோப்பாவில் ரஷ்யாவுக்கு அடுத்து மிகப்பெரிய நாடாகும். சோவியட் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ரஷ்யாவிடமிருந்து பிரிவதற்கு அந்நாட்டின் அதிகப் பெரும்பான்மை மக்கள் வாக்களித்தனர். அந்த நாடு நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அமைப்புகளில் இணைய முயன்று வருகிறது.

# கந்தஹேன தோட்ட பாடசாலைக்கு குடிநீர் விநியோகம் மற்றும் கட்டட மறுசீரமைப்பு

கந்தஹேன தோட்ட பாடசாலையில் போதிய வசதிகளின்மையால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவந்தனர். சுத்தமான நீரின்மை, சேதமடைந்த கட்டடம் என்று பல்வேறு இன்னல்களை அனுபவித்தனர். இந்நிலையில் இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டடம் மறுசீரமைக்கப்பட்டதுடன், குடிநீர் வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டன.

மறுசீரமைக்கப்பட்ட கட்டடத்தை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஊவாவில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



ஊவா மாகாண உள்ளூராட்சி திணைக்கள அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள தரக்கட்டுப்பாட்டு, ஆய்வுகூடம், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ், ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) நிதி உதவியுடன், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டம் (UNDP) சி.டி.எல்.ஜி. வேலைத்திட்டத்தின் கீழ் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இது நிறுவப்பட்டுள்ளது. இந்த தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம், நாடளாவிய ரீதியில் காணப்படும் மாகாண உள்ளூராட்சி திணைக்கள அலுவலகங்களில் நிறுவப்பட்ட முதலாவது தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம் என்பது விசேட அம்சமாகும்.

மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கட்டுமாணம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தரங்களை அறிந்துகொள்வதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்த ஆய்வுகூடத்தின் ஊடாக சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் மூலம் மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தரத்தை உறுதிப்படுத்துவது பிரதான நோக்கமாகும்.

இந்நிகழ்வில் பண்டாரவளை நகர மேயர் ஜனக நிஷாந்த ரத்நாயக்க, பண்டாரவளை பிரதேச சபை தலைவர் கரகஹவெல நந்தவிமல தேரர் உள்ளிட்ட பிரதேச சபைத் தலைவர்கள், ஊவா மாகாண பிரதான செயலாளர் பி.பீ . விஜயரத்ன, உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஆளுநரின் செயலாளர் எம். எம். விஜயநாயக, பிரதான அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையின் சி.டி.எல்.ஜி. வேலைத்திட்டத்தின் மேலாளர் ஜார்ஜ்வால்டன், சி.டி.எல்.ஜி/ யு.என்.டி.பீ. வேலைத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஸிஹான் ஸரூக் உட்பட யு.என்.டி.பீ. அதிகாரிகள் கலந்துகொண்டனர்.






## களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

# வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2022-03-16ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**விஞ்ஞான பீடம்**

01 கைத்தொழில் நிர்வாக கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுனர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**மானுடவியல் பிரிவு**

01. சிங்கள கல்வி பிரிவு
சிங்களம் தொடர்பிலான பேராசிரியர் / சிரேஷ்ட பேராசிரியர்
02. நூதன மொழி கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுனர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**உடற்கல்விப் பிரிவு**

01. உடற்கல்விப் பணிப்பாளர்

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பதவிக்காவும் சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் மற்றும் இயைபுடைய சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**சம்பள அளவு**

1. விரிவுரையாளர் (பயிலுனர்)
ரூபா 54,600 – 10 x 1,335 - 67,590 p.m. (*U-AC 3 (IV)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 136,110.00)
2. விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத)
ரூபா 69,580 – 5 x 1,630 – 77,730 p.m. (*U-AC 3 (II)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 182,445.00)
3. சிரேஷ்ட விரிவுரையாளர் **- II**
ரூபா 79,360 – 11 x 1,630 – 97,290 p.m. (*U-AC 3 (II)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 222,865.00)
4. சிரேஷ்ட விரிவுரையாளர் - **I**
ரூபா 91,310 – 7 x 2,170 – 106,500 p.m. (*U –AC 3 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 255,250.00)
5. பேராசிரியர்
ரூபா 117,350 - 13x2,700 - 152,450 p.m. (*U –AC 5 (II)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 338,727.00)
6. சிரேஷ்ட பேராசிரியர்
ரூபா 139,175 - 11x2,925 - 171,350 p.m. (*U –AC 5 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 407,232.25)
7. உடற்கல்விப் பணிப்பாளர்
ரூபா 66,180 - 8 x 1,335 ; 8 x 1,630 - 89,900 p.m. (U-EX 2(II)) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 145,160.00)

**விண்ணப்பிக்கும் முறை**

இந்த பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரத்தினுள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்வி நிறுவனங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே https://www.kln.ac.lk/vacancies எனும் பல்கலைக்கழக இணையதளத்திற்குப் பிரவேசித்து உரிய விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தரவிறக்கம் (Downloads) செய்துகொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற வேண்டுமானால் அதற்கான வேண்டுகோளொன்றுடன் முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 செ.மீ. அளவான கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவியின் பொருட்டும் தனித்தனியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022-03-16ஆம் திகதி அல்லது அதற்கு முன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / கல்வி நிறுவனங்கள், களனிப் பல்கலைக்கழகம், களனி எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, திணைக்களம் மற்றும் மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பும்போது தலைப்பு (Subject) குறிப்பிடப்படும் நிரலில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம் என்பன குறிப்பிடல் வேண்டும். பூரணமற்ற, தெளிவற்ற மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞான பீடம் | - | applysc@kln.ac.lk |
| மானுடவியல் பீடம் | - | applyhu@kln.ac.lk |
| உடற்கல்விப் பணிப்பாளர் | - | aead@kln.ac.lk |

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச்சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்படிவங்களை குறும்பட்டியலிடும் முழுமையான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
2022-02-23




# சர்வதேச செய்திகள்

## நோய் கண்காணிப்புக்கு மோடி அரசு நடவடிக்கை



கொவிட் பெருந்தொற்றுக்கு எதிராக கடந்த இரண்டு ஆண்டுகளாக போராடி வரும் நிலையில் இந்தியாவில் நோய் பரவலை கண்காணிப்பதற்கு நரேந்திர மோடி அரசு செயற்கை நுண்ணறிவு முறையை பயன்படுத்தவுள்ளது.

நோய் கட்டுப்பாட்டுக்கான தேசிய மையத்துடன் இணைந்து தனியார் நிறுவனம் ஒன்றினால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தக் கருவி, நோய்த் தொற்று தொடர்பான அனைத்து ஊடக அறிக்கைகளையும் ஸ்கென் செய்து, 33 நோய்களின் பரவல் தொடர்பான தரவுத் தளத்தை உருவாக்கவுள்ளது.

ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் இந்த கண்காணிப்பு இடம்பெறவுள்ளது.

நோய் தொற்று பரவல் மற்றும் எக்ஸ்ரே அறிக்கைகளை விளக்குவதற்கான அடிப்படை அமைப்பை மேம்படுத்துவது ஆகிய இரு கருவிகளை மேம்படுத்துவதற்கு தனியார் நிறுவனத்துடன் சுகாதார மற்றும் குடும்ப நலன் ஒன்றிய அமைச்சு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

## சிவில் விமானங்களுக்கு உக்ரைன் 'வான் பூட்டு'



ரஷ்யாவின் படை நடவடிக்கையை அடுத்து சிவில் விமானங்களுக்கு உக்ரைன் தனது வான் பகுதியை நேற்று மூடியது. உக்ரைனுக்கு மேலால் பறக்கும் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்படுவது அல்லது சைபர் தாக்குதலுக்கு இலக்காகும் அச்சுறுத்தல் இருப்பதாக எச்சரிக்கை வெளியானதை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. “உக்ரைன் வான் பகுதியில் சிவில் பயணங்களுக்கு விமானசேவைகளை வழங்குவது இடைநிறுத்தப் பட்டுள்ளது” என்று உக்ரைன் அரச விமான போக்குவரத்து நிறுவனம் தனது இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளது. ரஷ்யாவும் கிழக்கில் தனது உக்ரைனுடனான எல்லையின் வான் பகுதியை விமானங்களுக்கு மூடியுள்ளது. எனினும் உக்ரைன் இந்த அறிவித்தலை விடுக்கும் முன்னரே, அமெரிக்கா, இத்தாலி, கனடா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் விமானங்கள் கிழக்கு உக்ரைன் மற்றும் கிரிமியா வான் பகுதிகளை தவிர்க்க கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2014இல் கிழக்கு உக்ரைனில் மலேசிய விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதில் இருந்து 298 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் தாக்குதல்: தடை குழுக்கள் காரணம்



பாகிஸ்தானின் முக்கிய பிரதேசங்களில் கடந்த சில வாரங்களாக இடம்பெறும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அந்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ள தீவிரவாத குழுக்களே காரணமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்டிருக்கும் தெஹ்ரீக் ஈ தலிபான் பாகிஸ்தானும், பலுசிஸ்தான் விடுதலை இராணுவமும் இவ்வாறான தாக்குதல்களை பெரும்பாலும் மேற்கொள்வதாக தெற்காசிய ஊடக ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் பெஷாவரின் பாண்டு பிரதேசத்திலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 04 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டுமுள்ளனர். இத்தாக்குதலுக்கு தடைசெய்யப்பட்டுள்ள தெஹ்ரீக் ஈ தலிபான் பாகிஸ்தான் பொறுப்பேற்றுள்ளது என்றும் அந்நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்லாமாபாத், பெஷாவர் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் கடந்த சில வாரங்களாகப் பல பயங்கரவாதத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பு

## முழு வீச்சில் தாக்குதல்; மக்கள் பீதி; ரஷ்யா மீது கடுமையான தடைகளுக்கு திட்டம்

உக்ரைன் மீது ரஷ்யா வான், தரை மற்றும் கடல் வழியாக நேற்று வியாழக்கிழமை முழு வீச்சில் படையெடுப்பை ஆரம்பித்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐரோப்பாவில் ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு எதிராக நடத்தும் மிகப்பெரிய தாக்குதலாக இது மாறியுள்ளது.

உக்ரைனிய நகரங்கள் மீது ரஷ்ய ஏவுகணைகள் பொழிந்து வருகின்றன. கிழக்கு செர்னிஹிவ், கார்கிவ் மற்றும் லுஹன்ஸ் பிராந்தியங்கள் மற்றும் தெற்கில் கடல் வழியாக ஒடெசா மற்றும் மரியுபோல் நகரங்களுக்குள் ரஷ்ய துருப்புகள் நுழைந்திருப்பதாக உக்ரைன் குறிப்பிட்டுள்ளது.

உக்ரைன் தலைநகர் கீவில் நேற்று சூரியோதயத்திற்கு முன்னர் வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. அருகில் உள்ள பிரதான விமானநிலையத்தில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டதோடு நகர் முழுவதும் சைரன் ஒலி எழுப்பப்பட்டது.

தொடர்ச்சியான வெடிப்புகளால் ரஷ்ய எல்லைக்கு நெருக்கமாக உள்ள உக்ரைனின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கிவ்வில், குடியிருப்பு கட்டடங்கள் அதிர்ந்து வருவதாக அங்கிருப்போர் தெரிவித்துள்ளனர். மக்கள் பீதியில் நகரை விட்டு வெளியேற முண்டியடிப்பதாக குடியிருப்பாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது நாட்டை அழிப்பதே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் நோக்கம் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

“உக்ரைனில் புட்டின் முழு அளவிலான ஆக்கிரமிப்பை தொடுத்துள்ளார். அமைதியான உக்ரைனிய நகரங்கள் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன” என்று உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ட்மிட்ரோ குளேபா, ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.



“இது ஒரு ஆக்கிரமிப்புப் போர். உக்ரைன் தம்மை பாதுகாக்கும் மற்றும் வெற்றிபெறும். புடினை உலகினால் தடுக்க முடியும் மற்றும் தடுக்க வேண்டும். செயற்படுவதற்கான நேரம் வந்துவிட்டது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் ஷெல் தாக்குதலில் குறைந்தது எட்டுப் பேர் கொல்லப்பட்டு ஒன்பது பேர் காயமடைந்திருப்பதாக உக்ரைன் உள்விவகார அமைச்சின் ஆலோசகர் தெரிவித்துள்ளார். உக்ரைன் மீது படை நடவடிக்கை பற்றிய புட்டினின் அறிவிப்பு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. உக்ரைனில் இனப்படுகொலைக்கு உள்ளாகும் ஆபத்தை எதிர்கொள்ளும் ரஷ்ய குடிமக்கள் உட்பட மக்களை பாதுகாப்பதற்கான “விசேட இராணுவ நடவடிக்கை” ஒன்றுக்கு உத்தரவிட்டதாக புட்டின் குறிப்பிட்டிருந்தார்.

“உக்ரைனின் அழிவை தடுப்பது மற்றும் இராணுவமயமாக்களை தடுப்பதற்காக நாம் பாடுபடுவோம்” என்று புட்டின் கூறினார். “நவீன உக்ரைனிய பூமியில் இருந்து தொடர்ந்து வரும் அச்சுறுத்தலுடன் ரஷ்யாவின் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் இருப்பை உணர முடியாது. இரத்தம் சிந்தப்படுவதற்கான அனைத்து பொறுப்பையும் உக்ரைனின் ஆளும் அரசு ஏற்க வேண்டும்” என்றும் குறிப்பிட்டார். 44 மில்லிய மக்கள்தொகை கொண்ட ஜனநாயக நாடான உக்ரைன் ரஷ்யாவுக்கு அடுத்து ஐரோப்பாவில் மிகப்பெரிய நாடாகும். சோவியட் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ரஷ்யாவிடம் இருந்து பிரிவதற்கு அந்நாட்டின் அதிகப் பெரும்பான்மை மக்கள் வாக்களித்தனர். அந்த நாடு நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அமைப்புகளில் இணைய முயன்று வருகிறது.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்துவதை புட்டின் கடந்த சில மாதங்களாக மறுத்து வந்தார். எனினும் உக்ரைன் ரஷ்யாவில் இருந்து எதிரிகளால் செதுக்கப்பட்ட ஒரு செயற்கை உருவாக்கம் என்று அழைத்தார்.

உக்ரைன் மக்களுக்காக பிரார்த்திப்பதாக குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பதில் நடவடிக்கையாக கடும் தடைகள் விதிக்கப்படுவது பற்றி உறுதி அளித்தார்.

தாம் ஜி7 தலைவர்களை சந்திக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா மீது இதுவரை இல்லாத கடுமையான பொருளாதார தடைகளை விதிப்பதாக ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார தலைவர் ஜோசெப் பொரெல் உறுதி அளித்துள்ளார்.

“இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவின் இருண்ட மணித்தியாலங்களில் ஒன்றாக இது உள்ளது” என்று பொரெல் தெரிவித்தார். எனினும் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை முழு வீச்சில் இடம்பெறுவது பற்றி உடன் உறுதி செய்ய முடியாதுள்ளது. “உக்ரைனை ஆக்கிரமிப்பது எமது திட்டத்தில் உள்ளடங்காது. நாம் எதையும் வலுக்கட்டாயமாக திணிக்கப்போவதில்லை” என்று புட்டின் கூறியுள்ளார்.

நியூயோர்க்கில் கூடிய ஐ.நா பாதுகாப்புச் சபை அவசரக் கூட்டத்தில் பேசிய புட்டின், ரஷ்ய படைகளுக்கு மக்களை பாதுகாக்கும்படி தாம் உத்தரவிட்டதாகவும் உக்ரைன் இராணுவம் ஆயுதங்களை கீழே போடும்படியும் குறிப்பிட்டார். புட்டின் உட்பட ரஷ்யா மீது சாத்தியமான அனைத்துத் தடைகளையும் விதிக்கும்படி உலகத் தலைவர்களுக்கு உக்ரைன் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

புட்டின் உத்தரவு பிறப்பித்து மூன்று மணி நேரத்தின் பின் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில், உக்ரைன் விமானத் தளங்களில் இராணுவ உட்கட்டமைப்புகளை கைப்பற்றியதாகவும் அதன் வான் பாதுகாப்பை சீரழித்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

கீவ் மற்றும் வடக்கில் கார்கிவ்வில் இருக்கும் இராணுவ கட்டளை மையங்கள் மீது ஏவுகணை தாக்குதல் இடம்பெற்றதாக உக்ரைன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மறுபுறம் ரஷ்யத் துருப்புகள் ஒடெசா மற்றும் மிரியுபோலை அடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அசோவ் கடலில் கப்பல் போக்குவரத்துகளை மூடியதாக ரஷ்யா அறிவித்துள்ளது. மரியுபோல் உட்பட உக்ரைன் துறைமுகங்களுக்குச் செல்லும் இந்த நீரிணை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

## அனைத்துப் பக்கங்களாலும் ரஷ்யப் படை முன்னேற்றம்



ரஷ்ய இராணுவ வாகனங்கள் வடக்கில் பெலாரஸ் மற்றும் தெற்கில் கிரிமியா உட்பட பல இடங்களால் நாட்டுக்குள் எல்லை கடந்து வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. மேலும், கார்கிவ் மற்றும் லுஹான்ஸ் பிராந்தியங்களில் கிழக்குப் பக்கமாக ரஷ்யா நாட்டுக்குள் வருவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

ரஷ்ய இராணுவ வாகனங்கள் எல்லை கடந்து அனுப்பப்படுவதற்கு முன்னர் ரஷ்யா பீரங்கித் தாக்குதல்களை நடத்துவதாகவும் உக்ரைனின் எல்லை பாதுகாப்பு சேவையை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

10 நாட்களுக்கு முன்னர் மேற்குலக உளவுத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட மதிப்பீட்டின்படி, (வடக்கில் இருந்து) உக்ரைன் தலைநகர் கீவை நோக்கி ரஷ்யா வெற்றியமாக தாக்குதலை நடத்தும் என்றும் (டொன்பாசுக்கு முகப்பாக கிழக்கில் உள்ள) உக்ரைனின் அதிக திறன் படைத்த இராணுவப் பிரிவினர் சுற்றிவளைக்கப்படுவது அல்லது செயலிழக்கச் செய்யப்படலாம் என்று கூறப்பட்டது.

இதுவரை வெளியாகி இருக்கும் தகவல்களின்படி உக்ரைனின் அனைத்து பக்கங்களில் இருந்தும் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக கூறப்பட்டுள்ளது.

## உக்ரைன் தலைநகரில் இருந்து வெளியேற மக்கள் முண்டியடிப்பு



போர் வெடித்த செய்தி பரவியதை அடுத்து உக்ரைன் தலைநகர் கீவில் உள்ள மக்கள் அந்த நகரை விட்டு வெளியேறுவதில் முண்டியடித்து வருகின்றனர்.

உக்ரைனின் பெலாரஸ் எல்லையில் ரஷ்ய டாங்கிகள் முன்னேற ஆரம்பித்த நிலையில் கீவில் இருக்கும் மக்கள் வாகனங்கள் மற்றும் ரயில்களில் வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

உக்ரைன் தலைநகர் மற்றும் பல நகரங்களில் வெடிப்புச் சத்தங்கள் கேட்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தலைநகர் எங்கும் சைரன் ஒலி எழுப்பப்படும் நிலையில் நேற்று வியாழக்கிழமை காலையில் மக்கள் நகரை விட்டு வெளியேறும் காட்சிகள் கொண்ட வீடியோ மற்றும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் ஏ.டீ.எம் இயந்திரங்கள் முன் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன.

தலைநகரில் இருக்கும் மேலும் பலர் பாதுகாப்பான இடங்களில் அடைக்கலம் பெற்று வருகின்றனர். பீதி அடைந்திருக்கும் மக்கள் வெடிகுண்டு முகாம்கள் மற்றும் நிலவறைகளில் அடைக்கலம் பெற்று வருவதாக சமூக ஊடகங்களில் கூறப்பட்டுள்ளது.

## எண்ணெய் விலை உச்சம்



உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததை அடுத்து சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவாக பீப்பாய் ஒன்று சுமார் 102 டொலர்கள் அதிகரித்துள்ளது.

பிரண்ட் மசகு எண்ணெய் விலை 4.69 வீதம் அதிகரித்து பீப்பாய் ஒன்று 101.93 டொலர்களாக உயர்ந்துள்ளது. 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எண்ணெய் விலை 100 டொலரை தாண்டி இருப்பது இது முதல் முறையாகும். இயற்கை வாயுவின் விலையும் 4.7 வீதம் உயர்ந்திருப்பதோடு தங்கம் விலை 1.82 வீதம் அதிகரித்து அவுன்ஸுக்கு கிட்டத்தட்ட 1,931 டொலர் ஆனது.

ஐரோப்பிய நாடுகளுக்கு தேவையான 30 முதல் 40 வீதமான மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை ரஷ்யா வழங்கி வருகிறது. உலகளவில் மசகு எண்ணெய் ஏற்றுமதியில் 11 வீதத்தையும் ஐரோப்பிய நாடுகளின் எரிவாயு, மசகு எண்ணெய் பயன்பாட்டில் 60 வீதத்தையும் ரஷ்யா வைத்துள்ளது.

## உலகத் தலைவர்கள் கண்டனம்



ரஷ்யா உக்ரைன் மீது மேற்கொண்டிருக்கும் தாக்குதலுக்கு உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். ரஷ்யா மீது புதிய தடைகள் விதிக்கப்படும் என்று அவர்கள் உறுதி கூறினர். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படி வலியுறுத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதல் தூண்டப்படாத, நேர்மையற்ற ஒன்று என வர்ணித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இன்று உலகம் உக்ரைனிய மக்களுக்காகப் பிரார்த்திக்கிறது என்றும் கூறினார். இந்தத் தாக்குதலால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்கும் அழிவுக்கும் ரஷ்யா மட்டுமே பொறுப்பு என்றும் பைடன் கூறினார். ரஷ்யா உலகத்திற்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டார். உக்ரைன் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் படையெடுப்பு பதற்றத்தை அதிகரித்திருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் கூறினார். அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி தாம் உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கியுடன் பேசியிருப்பதாகவும் அவர் கூறினார்.

பேரழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கும் ரஷ்ய ஜனாதிபதிக்கு தமது நாடும் தோழமை நாடுகளும் தீர்க்கமான நடவடிக்கை மூலம் பதிலளிக்கும் என்று பிரிட்டிஷ் பிரதமர் குறிப்பிட்டார்.



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும்.**

**I. பந்தியை வாசித்து விடை தருக.**

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற மலைத் தொடர்கள் வானுயர காணப்பட்டன. நன்கு செழித்து வளர்ந்த மரங்கள் அதிலே பழுத்து மணம் பரப்பும் பழங்கள். பாய்ந்தோடும் அருவி குளிர்மையான காற்று. இன்னும் ஏராளமான அழகிய காட்சிகள் நிரம்பிய அற்புதமான கிராமம்.

1. இதிலுள்ள உவமைத் தொடரைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………..

2. 'வானுயர காணப்பட்டன' எனும் தொடர் குறிக்கும் கருத்து யாது?

……………………………………………………………………………...

3. பெயரடைமொழியொன்றினை தருக.

……………………………………………………………………………..

4. இங்குள்ள குணப்பெயர் ஒன்றினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………...

5. ஒத்த கருத்து தருக
   i. மரங்கள் - ………………………………………………….
   ii. பழங்கள் - ………………………………………………….

6. கிராமம் எதிர்கருத்து தருக.

……………………………………………………………………………...

**II. வெற்றிடத்துக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக**

7. பசி – உணவு என்பது போல தாகத்துக்கு …………………………… (நீர் / பானம்)

8. வாழையின் இளையது குட்டி – மாவின் இளையது ……………………….. (பிள்ளை / கன்று)

9. குருவி கீச்சிடும் என்பது போல ஆந்தை ………………………………… (அலறும் / கத்தும்)

10. பலாவின் உள்ளீடு சுளை என்பது போல கற்றாளையின் உள்ளீடு ………………………… (சதை / சோறு)

**III. எழுத்து வழக்கில் எழுதுக.**

11. வேர்வை - ………………………………………………………….

12. பாவக்காய் - ………………………………………………………….

13. பொகயிலை - ………………………………………………………….

**IV. மரபுத் தொடருக்குரிய கருத்தை எழுதுக.**

14. நாக்கு புரளுதல் - …………………………………………………..

15. கைவிடுதல் - …………………………………………………..

**V. தொடர் உணர்த்தும் தனிச்சொல்லை தருக.**

16. விசாரணை முடிவில் வழங்கப்படுவது ……………………………………...

17. கணவனை இழந்தவள் …………………………………………………….

**VI. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.**

18. மின்னுவதெல்லாம் …………………………………………………….

19. ஆறிலும் சாவு …………………………………………………………

20. இளங்கன்று …………………………………………………………….

**VII. பின்வரும் உருக்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

21.





i. ……………………… ii. ………………………

iii. ஆங்கில சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக தருக.

coming / the / am / I / class / to

……………………………………………………………………………..

22. பின்வரும் உருக்களின் சிங்கள கருத்தை தமிழில் எழுதுக.






i. ………………………… ii. ……………………………

23.



i. இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………...

ii. செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………...

24.

 = 500g

 = 100g எனில்

i.  = ……………………………

ii.  = ……………………………

25. **8 8 2 = 14**
**9 7 5 = 11**
**6 6 6 = ?**

26. ஒரு வாரத்தில் வருகை தந்த மாணவர்களின் விபரங்களின் அட்டவணை

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| ஆண் பிள்ளைகள் | 20 | 22 | 20 | 21 | 19 |
| பெண் பிள்ளைகள் | 18 | 20 | 24 | 19 | 21 |

i. ஒரு வாரத்தில் எந்த நாளில் மாணவர்களின் வருகை அதிகமாக இருந்தது?

……………………………………………………………………………

ii. இந்த வாரத்தில் வருகை தந்த ஆண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………

iii. எந்த நாளில் பெண் பிள்ளைகள் மிகக் குறைவாக வருகை தந்தனர்?

……………………………………………………………………………

27. **7632 + 8432** இவ்விரண்டு எண்களின் கூட்டுத்தொகையை எழுத்தில் எழுதுக.

……………………………………………………………………………...

28. அளவு நாடாவொன்றின் நீளம் 8m 27cm இதிலிருந்து 5m 19cm வெட்டி அகற்றினால் மீதமாகவுள்ள நாடாவின் அளவு யாது?

……………………………………………………………………………...

(10ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

29. 

இதில் ¾ பங்கு எத்தனை மீன்கள்?

…………………………………………………………………………………...

**IX. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. காற்றின் மூலம் பரம்பல் அடையும் தாவரம்
i. கொய்யா ii. எருக்கலை iii. தேக்கு

31. இலங்கைக்கேயுரிய முலையூட்டி அல்லாதது
i. சுண்டெலி ii. மரநாய் iii. சிங்கம்

32. தனது ஓட்டினுள் புகுந்து பாதுகாப்பு பெறும் பிராணி
i. மரவட்டை ii. அட்டை iii. நத்தை

33. தையல் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் உபகரணம்
i. இடுக்கி ii. தீதாள் iii. சீவுளி

34. முதலுதவி பெட்டியில் கட்டாயமாக இருக்க வேண்டியது
i. டெட்டோல் ii. பஞ்சு iii. மேற்கூறிய இரண்டும்

35. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தில் கடைசிப் பருவம்
i. நிறையுடலி ii. கூட்டுப்புழு iii. குடம்பி

36. பாரம்பரிய முறையில் கிருமிநாசினியைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் வித்து
i. வேப்பம் வித்து ii. ஆமணக்கு வித்து iii. பூசணி வித்து

37. தேசிய ஒற்றுமையை குறிப்பதற்கு தேசியக் கொடியில் காணப்படும் நிறமானது
i. மஞ்சள் ii. பச்சை iii. சிவப்பு

38. பின்வருவனவற்றுள் ஆடம்பர பொருளாக அமையாதது
i. தொலைபேசி ii. ஆபரணம் iii. சொகுசு கார்

39. **“நான் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஒளியாவேன்”** என்பது தியானத்தின் எப்படிமுறையில் கூறப்படுவது
i. பிரார்த்தனை ii. மனவுறுதி iii. மலர்வு

40. பௌத்தர்களின் புனித நூலாக அமைவது
i. திரிபீடகம் ii. திருவிவிலியம் iii. பகவத் கீதை

41. இக்குறியீடு குறிப்பது
i. நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை
ii. இலங்கை மின்சார சபை
iii. இலங்கை தொலைத்தொடர்பு

42. ஒலிம்பிக் போட்டியில் முதன் முதலில் இலங்கைக்கு பதக்கத்தை வென்று கொடுத்தவர்
i. சுசந்திகா ii. தமயந்தி தர்சா iii. டங்கன் வைட்

43. வதிவிடச் சான்றிதழை பெற்றுக் கொள்ள நாம் செல்ல வேண்டிய இடம்
i. பிரதேச சபை
ii. கிராம அதிகாரி அலுவலகம்
iii. பொலிஸ் நிலையம்

44. இருவித்திலை தாவரமொன்றின் இயல்பானது
i. ஆணிவேர் ii. நாருரு வேர் iii. கிளைகள் அற்றது

45. அதிக மோப்ப சக்தியுடைய பிராணி எது?
i. நாய் ii. பூனை iii. யானை

46. நல்ல உணவு வேளையொன்றில் இருக்க வேண்டிய சிறப்பியல்பு
i. சத்துப் பொருட்கள் ii. சுவை iii. மணம்

47. இதன் மூலம் உணர்த்தப்படும் வீதி சமிக்ஞை யாது?



i. பாதுகாப்பான புகையிரத கடவை
ii. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
iii. புகையிரதம் செல்லத் தடை

48. ஔடதமாகப் பயன்படுத்தப்படும் தாவரம்
i. அவரை ii. கத்தரி iii. நொச்சி

49. கழிச்சல் நோய் பரவக் காரணமான பிராணி
i. இலையான் ii. நுளம்பு iii. தேனீ

50. மின்மாணியில் காணப்படும் காந்த வகையானது
i. வட்டக் காந்தம்
ii. சட்டக் காந்தம்
iii. குண்டுமுனைக் காந்தம்

51. வாகனமொன்றினை பக்கவாட்டில் திருப்பும் போது ஒளிரும் விளக்கின் நிறம் யாது?
i. மஞ்சள் ii. சிவப்பு iii. வெள்ளை

52. பலாக்காயில் அதிகளவு காணப்படும் சத்துப்பொருள்
i. புரதம் ii. விற்றமின் iii. மாப்பொருள்

53. ஒரேயொரு வித்தைக் கொண்ட பழம் எது?
i. திராட்சை ii. ரம்புட்டான் iii. மாதுளம்

54. மின்னேரியா குளத்தை கட்டிய மன்னன் யார்?
i. மகாசேனன் ii. தாதுசேனன் iii. பராக்கிரமபாகு

55. தேசிய இலச்சினையில் சௌபாக்கியத்தை உணர்த்துவது
i. பூவிதழ்கள் ii. தர்மச் சக்கரம் iii. நிறைகுடம்

56. விசர்நாய்க் கடியை ஏற்படுத்தும் விலங்கினம்
i. குரங்கு ii. கோழி iii. நுளம்பு

57. பின்வருவனவற்றுள் இயற்கை அனர்த்தமல்லாதது
i. மண்சரிவு ii. சூறாவளி iii. வாகன விபத்து

58. காற்றினால் இயங்கும் இசைக்கருவியானது
i. மிருதங்கம் ii. வயலின் iii. புல்லாங்குழல்

59. சூரியனுக்கு மிக அண்மையில் உள்ள கோள்
i. புதன் ii. வியாழன் iii. வெள்ளி

60. **“ஒரு அழகிய மாலைப் பொழுதினில் கடற்கரைக்குச் சென்ற போது”** என்ற தலைப்பின் கீழ் 5 சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்களை எழுதுக.

…………………………………………………………………………...
…………………………………………………………………………...
…………………………………………………………………………...

### கடந்த வார (18.02.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 3 | 21 | 1 | 31 | 1 |
| 02 | 3 | 12 | 2 | 22 | 2 | 32 | 1 |
| 03 | 2 | 13 | 3 | 23 | 3 | 33 | 3 |
| 04 | 1 | 14 | 1 | 24 | 2 | 34 | 2 |
| 05 | 1 | 15 | 3 | 25 | 1 | 35 | 3 |
| 06 | 3 | 16 | 2 | 26 | 1 | 36 | 1 |
| 07 | 3 | 17 | 3 | 27 | 2 | 37 | 3 |
| 08 | 2 | 18 | 1 | 28 | 1 | 38 | 2 |
| 09 | 2 | 19 | 2 | 29 | 3 | 39 | 1 |
| 10 | 1 | 20 | 3 | 30 | 2 | 40 | 2 |

### எதிர்பாற் சொற்கள்

பிதா - மாதா
தம்பி - தங்கை
மாமா - மாமி
பாட்டன் - பாட்டி
கணவன் - மனைவி
சிறுவன் - சிறுமி
மகன் - மகள்
மாணவன் - மாணவி
தந்தை - தாய்
சகோதரன் - சகோதரி
வீட்டுக்காரன் - வீட்டுக்காரி
அவன் - அவள்
அசிரியர் - ஆசிரியை
இடையன் - இடைச்சி
உத்தமன் - உத்தமி
உழவன் - உழத்தி
எசமான் - எசமானி
ஒருவன் - ஒருத்தி







நியாய விலையில் பொருட்களை கொள்வனவு செய்யத்தக்க வகையிலான பல்பொருள் அங்காடி ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கடற்றொழில் அமைச்சு வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் அமைச்சில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களின் நலன்களை கருத்திற் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எண்ணக்கருவிற்கு அமைவாக இது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# மன்னார் நகரப் பகுதியில் தரம் பிரித்து கழிவு பொருட்களை சேகரிக்கும் திட்டம்

**மன்னார் குறூப் நிருபர்**

பசுமையான நகர திட்டத்தின் கீழ் மன்னார் நகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக நகரை சுத்தமாக வைத்திருக்கும் நோக்குடன் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து, கழிவு பொருட்களை சேகரிக்கும் கழிவுத் தொட்டிகள் நேற்று வியாழக்கிழமை (24) காலை மன்னார் நகர பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.



மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பொது இடங்களில் கழிவு பொருட்களை தரம் பிரித்து சேகரிக்கும் வகையில் மன்னார் நகர சபையினால் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடதாசி மற்றும் காட்போட் வகையான கழிவு பொருட்களை தனியாகவும், பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவு பொருட்களை தனியாகவும், உணவு பொருட்கள் மற்றும் உக்கக்கூடிய பொருட்களை தனியாகவும் சேகரிக்கும் வகையில் மூன்று கழிவுத் தொட்டிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

மக்கள் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து தொட்டிகளில் போட வேண்டும்.

# மன்னாரில் அரிய வகை கடலாமைகள் குளியல் அறையில் இருந்து மீட்பு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் கடலில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டு எழுத்தூர் பகுதியிலுள்ள வீடொன்றின் குளியல் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து கடலாமைகள் நேற்று முந்தினம் (23) புதன்கிழமை இரவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் துல்ஸன் நாகவத்தயின் பணிப்புரையின் கீழ் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானக்கவின் கண்காணிப்பில் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி குமார பல்லேவெல தலைமையிலான குழுவினர் மன்னார் எழுத்தூர் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் புதன் கிழமை (23) இரவு சோதனைகளை மேற்கொண்டனர்.



இதன்போது வீட்டின் குளியல் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிய வகை கடலாமைகள் 5 பொலிஸாரால் மீட்கப்பட்டது.

ஆமைகள் அரிய வகை பேராமை இனத்தை சேர்ந்தவை என்பதுடன் ஒவ்வொரு ஆமையும் சுமார் 100 கிலோ எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் குறித்த வீட்டில் சந்தேக நபர்கள் எவரும் இருக்கவில்லை.

கடலாமைகள் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு கடலில் விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் குறித்து மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வயோதிப பெண் அடித்துக்கொலை வீட்டு வேலைக்கு வந்த நபர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ பகுதியில் வீடொன்றில் வயோதிப பெண்ணொருவர் அடித்துக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்கிழமை 22ஆம் திகதி மதியம் இடம்பெற்ற கொலை சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது 72) எனும் பெண் அடித்துக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

தனிமையிலிருந்த பெண்ணை வீட்டு வேலைக்கு வந்த இளைஞனே பூ சாடியால் அடித்துக்கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.



இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கொலை நடந்த வீட்டுக்கு அருகிலிருந்த சி.சி.ரி.வி காணொளிகளின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

காணொளியில் கொலை சந்தேக நபர் துவிச்சக்கர வண்டியில் தப்பி செல்லும் காட்சிகள் பதிவாகியுள்ளன. அதன் அடிப்படையில் விசாரணைகளை துரிதப்படுத்தி பொலிஸார் யாழ். புறநகர்ப் பகுதியில் வைத்து கொலை சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பெண் ஊடகவியலாளரின் வீட்டில் பட்டப்பகலில் திருட்டு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் பெண் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் வீடு உடைத்து பணம், நகைகள், கமரா என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் பெண் ஊடகவியலாளர் ஒருவர் செய்தி அறிக்கையிடல் ஒன்றுக்காக காலை 10.50 மணிக்கு வீட்டில் இருந்து சென்றுள்ளார். கணவர் வர்த்தக நிலையத்திற்கும் பிள்ளைகள் தனியார் கல்வி நிலையத்திற்கும் சென்றுள்ளனர்.

மதியம் 12.15 மணியளவில் கடமை முடிந்து தனது பிள்ளையுடன் வீட்டிற்கு சென்ற போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு திறந்து காணப்பட்டுள்ளது. வீட்டின் இரு அறைகளிலும் காணப்பட்ட அலுமாரிகள் உடைக்கப்பட்டு இருந்ததுடன், வீட்டில் இருந்த பொருட்களும் பரவிக் காணப்பட்டுள்ளன.



அத்துடன், வீட்டில் இருந்த சங்கிலி, மோதிரம், கைச்செயின், தோடு உள்ளிட்ட 14 பவுண் நகைகள், 42 ஆயிரம் ரூபாய் பணம், கமரா, தொலைபேசி, பென்ரைவ் உள்ளிட்ட பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் காணாமல் போயிருந்தன. இதனையடுத்து வவுனியா குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர், வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று தடயவியல் பொலிஸார் மற்றும் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மோட்டார் சைக்கிள் -டிப்பர் ரக வாகனம் மோதி விபத்து; இளைஞன் உயிரிழப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் 18 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். 18 வயதுடைய கோயில் சந்தையை சேர்ந்த இளைஞன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வடமராட்சி நெல்லியடி மாலிசந்தி மத்திய மகளிர் பாடசாலை முன்பாக நேற்று வியாழக்கிழமை பகல் இடம்பெற்ற வாகன விபத்திலேயே இளைஞன் உயிரிழந்துள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது

மாலிசந்தி வதிரி வீதியில் மாலிசந்தி நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், வதிரி சந்தி நோக்கி சென்றுகொண்டிருந்த டிப்பர் வாகனமும் மோதியமையால் இளைஞன் உயிரிழந்துள்ளார். இளைஞனை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உறவினர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் ஒப்பாரி ஓலமிட்ட வண்ணமுள்ளனர்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வை பார்வையிட சந்தர்ப்பம் வழங்கவும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை கோரிக்கை

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மனிதப் புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யும் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அதனை நேரடியாக பார்வையிட்டு உண்மைகளை கண்டறிய அனுமதிக்க வேண்டும் என மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க செயலாளர் பி.ஷர்மிளா கோரிக்கை விடுத்துள்ளார். மன்னாரில் நேற்று(24) வியாழக்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன் மன்னார் நுழைவாயிலில் சதொச கட்டடம் இருந்த இடத்தில் தோண்டப்பட்ட போது மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன. மன்னார் தீவு பகுதியில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். வீடுகளுக்கு வந்து இராணுவம் எமது உறவுகளை பிடித்துச் சென்றுள்ளனர். இதனால் அப்பகுதியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் எமது உறவுகள் உடையதாக கூட இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இருந்தோம்.

ஆனால் எமக்காக வாதாட வந்த சட்டத்தரணிகளை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் எமக்காக ஆஜராக கூடாது என்று தடுத்து நிறுத்தினார்கள்.இதனால் மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆகிய நாங்கள் இவ்வழக்கினை வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம்.

அதனடிப்படையில் நேற்று முந்தினம் (22) வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் எமக்கு நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட்டது. இது எமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாக உள்ளது. எனினும் நாங்கள் கேட்டுக் கொள்வது எமக்கான உண்மை தன்மை மற்றும் நீதி என்பன எங்களுக்கு கிடைக்க வேண்டும்.

இந்த மனித எச்சங்கள் யாருடையது? என்பதை தெரியப்படுத்த வேண்டும். அத்தோடு அகழ்வு பணியின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் அங்கு சென்று அதனை நேரடியாக பார்வையிட்டு கண்டறிவதற்கான சுதந்திரத்தை எங்களுக்குத் தர வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் மாதத்தில் நடைபெறவிருக்கின்ற ஜெனிவா கூட்டத்தொடரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உண்மை மற்றும் நம்பிக்கை தன்மையுடன் கூடிய சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

# ரயில் விபத்தில் இளம்பெண் மரணம்



**யாழ். விசேட நிருபர்**

யாழில் புகையிரதம் மோதி இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

ராஜ்குமார் ஜெயந்தினி (வயது 23) எனும் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கொக்குவில் தொழிநுட்ப கல்லூரிக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பல்துறை ஆளுமை மத்திய மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.எம்.உனைஸ்








மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் முஸ்லிம் கல்விப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக எம்.ஏ.எம்.உனைஸ் புதிதாக நியமனம் பெற்றுள்ளார்.

எம்.ஏ.எம்.உனைஸ் கண்டி, கலகெதரைவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் ஜனாப் A.M.M ஆரிப் மற்றும் ஜனாபா மரியம் பீபீயின் மூத்த புதல்வராக 1971 ஜூன் மாதம் பிறந்தார். இவர் கல்வித் துறையில் மாத்திரமல்லாமல் பல துறைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டு வரும் ஒருவராவார். கற்றல் கற்பித்தல், கல்வி நிர்வாகம், விஞ்ஞான ஆய்வுத்துறை, கல்வியியல் ஆய்வுத் துறை, எழுத்து துறை, பத்திரிகை துறை, நாடகத்துறை, இயற்கையியல் மற்றும் பல துறைகளில் ஈடுபாடு காட்டி வருகின்றார்.

உனைஸ் ஆரிப், தனது ஆரம்பக் கல்வியைத் தனது பிறந்த ஊரான கலகெதர ஜப்பார் கல்லூரியில் 1982 வரை பெற்றார்.

சிறு பராயம் முதலே கணிதம் மற்றும் தமிழ்மொழி ஆகிய பாடங்களில் சிறந்து விளங்கிய இவர், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியெய்த கண்டி புனித அந்தோனியர் கல்லூரியில் அதன் பின்னரான கல்வியை உயர்தரம் வரை தொடர்ந்தார். க.பொ.த. உயர்தரப் பரீட்சையைத் தொடர்ந்து, ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியில் 1992 முதல் 1994 வரை தேசிய போதனா கல்வி டிப்ளோமா பாடநெறியையும், 1997 இல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கட்டடக்கலை திட்டவரைபியல் கற்கையினையும் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இயற்கை விஞ்ஞானங்கள் பீடத்தில் இளமாணிப் பட்டத்தினை (B. Sc. in Natural Sciences) 2004 இல் பெற்றார். மீண்டும் 2007இல் அதே பல்கலைக்கழகத்தில் இணைந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமோ கற்கையைப் பூர்த்தி செய்தார். பின்னர் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டத்தினைப் (M. Sc.) பெற்றார்.

இவர் முதுகலைக் கற்கைக்காக தனது மிக விருப்பத்துக்குரிய விஞ்ஞானம் மற்றும் கல்வித் துறைகளை ஒன்றிணைத்த பாடத்துறையைத் தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியில் தேசிய போதனா கல்வி டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்ததை தொடர்ந்து 1994 இல் கண்டி, புனித அந்தோனியர் கல்லூரியில் பயிலுனர் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1995 இல் எண்டரறுதென்ன முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக இணைந்து கொண்ட இவர், கல்ஹின்ன அல்மனார் மத்திய கல்லூரி, மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரி மற்றும் ஸாஹிரா கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் மாத்தளை ஸாஹிரா கல்லூரியில் உப அதிபராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2010ம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய இவர் சுமார் 40,000 இற்கும் மேற்பட்ட அனைத்து மொழி மூலமான பரீட்சார்த்திகளுக்கு மத்தியில் நாடளாவிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றமை அவரது திறமைக்குச் சிறந்த சான்றாகும்.

ஆசிரிய சேவையின் பின், கல்வி நிர்வாக சேவையில் உதவிக் கல்விப் பணிப்பாளராக 2013 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தனது புது பயணத்தைத் தொடங்கினார். 2013 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் விஞ்ஞானத்துக்குப் பொறுப்பான உதவி கல்வி பணிப்பாளராக இணைக்கப்பட்டார். தான் கடமையாற்றிக் கொண்டிருக்கும் குறுகிய காலத்திற்குள் அப்போதைய மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் M.T.A. நிஸாம், மாகாண கல்விச் செயலாளர் ஆகியோரின் அவதானத்தை வென்ற இவர் தனது சேவையில் ஒரு வருடம் பூர்த்தியாகும் முன்னரே திட்டமிடல் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.




மாகாண கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றிய 7 வருடங்களுக்குள் குறிப்பிட்ட காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்திற்கான உலக வங்கியின் கல்வி ஒருங்கிணைப்பாளராகவும், UNICEF அமைப்பின் கல்விக்கான முக்கிய ஒழுங்கமைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திட்டமிடல், பரிபாலனம் சம்பந்தமாக மிகுந்த அனுபவம் மற்றும் ஆற்றலைக் கொண்டுள்ள இவர் 2020 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் இருந்து மத்திய மாகாணத்துக்கு இடமாற்றம் ஆகி வந்து, வத்தேகம வலயத்தின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடசாலைகளுக்கான, விஞ்ஞான மற்றும் கணித பாடங்களுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக 2 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். கடந்த 09.02.2022 முதல் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார்.

இவர் இந்தியா, புதுடில்லி, கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்திற்கான தேசிய பல்கலைக்கழகத்தில் (NUPA) பெற்றுக் கொண்ட கல்வியில் உபாய மையத் திட்டமிடல், நிதியிடல் மற்றும் பண்பு சார் விருத்தி தொடர்பான பயிற்சி, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் நாடுகளில் பெற்றுக்கொண்ட பாடசாலை மட்ட முகாமைத்துவம் மற்றும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி, சியோல், கொரியாவில் பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் தொடர்பான பயிற்சி என்பன குறிப்பிட்டுக் கூறப்பட்டக் கூடியவையாகும்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் கலகெதர தினகரன் நிருபராக கடமையாற்றிய இவர் பல சஞ்சிகைகளில் இணை ஆசிரியராகவும், இதழாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். கலகெதரையை மையமாகக் கொண்டு வெளியான “வானவில்” அறிவியல் இதழின் ஆசிரியர்களுள் ஒருவராக கடமையாற்றிய இவர் சர்வதேச தர புத்தக எண் (ISSN) கொண்ட “ப்ரவாகம்” எனும் சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் “மின்னல்” மாதாந்த சஞ்சிகையின் இதழாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் கடமையாற்றிய பாடசாலைகளில் பல கையெழுத்துச் சஞ்சிகைகள், மாதாந்த சஞ்சிகைகள், காலாண்டு சஞ்சிகைகள் என பல சஞ்சிகைகளின் உருவாக்கத்திற்கு வித்திட்டுள்ளார். இவற்றுள் பல இதழ்களின் ஆரம்பகால இதழாசிரியராகவும் அவர் கடமையாற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் தினகரன் நிருபராக கடமையாற்றிய காலம் முதல் இலங்கை முஸ்லிம் பத்திரிகையாளர் அமைப்பின் (Sri Lanka Muslim Media Forum) அங்கத்தவராகவும் இருந்தார். 1998 இல் வெளியான இலங்கை பத்திரிகையாளர் கோப்பகத்தில் (Sri Lanka Media Directory) இவரது பெயரும் பதியப்பட்டிருப்பது முக்கியமான விடயமாகும். இஸ்லாமிய எழுத்தாளர் அமைப்பின் பிரதித் தலைவராக கடமையாற்றியுள்ள உனைஸ் சுதந்திர கலை இலக்கியப் பேரவையின் ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

உனைஸ் பாடசாலைக் காலம் முதலே எழுத்துத் துறையிலும் ஆர்வம் காட்டி வந்தார். பாடசாலை செல்லும் காலம் முதல் இவரது ஆக்கங்களுக்கு தினகரன் களம் அமைத்துக் கொடுத்தமை முக்கிய விடயமாகும். சமூக விழிப்புணர்வு மற்றும் அறிவியலை மையமாகக் கொண்ட இவரது கவிதைகள், கட்டுரைகள் என்பன தினகரன் உள்ளிட்ட பல தேசிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இவரது எழுத்துத்துறை வரலாற்றில் இவர் தனது நண்பரான சோ. ஸ்ரீதரன் உடன் இணைந்து வெளியிட்ட “இருளைத் துழாவும் மின்மினிகள்” என்ற கவிதைப் புத்தகம் குறிப்பிடத்தக்கதாகும்.

தனது எழுத்தாற்றலை புத்தகங்களுடன் மட்டும் மட்டுப்படுத்த விரும்பாத எம்.ஏ.எம்.உனைஸ் அவர்கள் Cyber வெளியில் நவீன விஞ்ஞான கட்டுரைகளை எழுதும் வகையில் http://unaisariff.blogspot.com/ எனும் Blog பக்கத்தையும் நடாத்தி வருவது அவரது அறிவுத்தாகத்தின் அளவையும் ஆழத்தையும் தான் கற்றதை பிறருக்கு வழங்குவதில் உள்ள ஆர்வத்தையும் காட்டி நிற்கின்றது.

இவர் ஒரு சிறந்த நாடக கலைஞர் என்பது பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லாத ஒரு விடயமாகும்.

'விஞ்ஞானக் கல்வியில் பிரச்சினை மையக் கற்றல் கற்பித்தல் நுட்ப முறை', 'இலங்கையில் விஷம் கொண்ட பாம்புகள்', 'இலங்கை மயில்களின் இனப்பெருக்கக் கோலங்கள்' என்பன இவர் செய்த முக்கிய ஆய்வுகளாகும். இவரது ஆய்வுகள் தேச மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் வெளியிடப்பட்டுள்ளன. SLAAS ஆய்வரங்கு, PURSE ஆய்வரங்கு ஆகியவற்றில் வெளியிடப்பட்ட இவரது ஆய்வுக் கண்டுபிடிப்புகள் இவரை இத்துறையில் ஒரு ஜாம்பவானாக எடுத்துக்காட்டின. அத்துடன் இந்து சமுத்திர நாடுகளின் ஒப்பீட்டுக் கல்விக்கான அமையத்தின் (IOCES) ஒரு ஆய்வாளராகவும் இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுக்கான அமையத்தின் (SLAAS) ஆய்வாளராகவும் இவர் தன்னைப் பதிவு செய்து கொண்டிருந்தார்.

அது மட்டுமல்லாமல் தனது கல்வி நிர்வாக சேவையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 500 பாடசாலைகளில் அதிபர்கள் தமது பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடலைச் செய்கின்ற போது முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டு அந்த ஆய்வில் இனங்காணப்பட்ட அதிபர்களின் பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக வெளியிடப்பட்ட 'பங்குபற்றலை அடிப்படையாகக் கொண்ட பாடசாலை சுயமதிப்பீடு மற்றும் திட்டமிடலுக்கான தெரிவுசெய்யப்பட்ட சிறந்த நடைமுறைகள்' எனும் நூலை ஆக்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். குறிப்பிட்ட ஆய்வில் பிரதம இணைப்பாளராகவும் பிரதம வளவாளராகவும் கடமையாற்றியிருந்தமை இவரது ஆய்வியல் தொடர்பான தேட்டத்தை கோடிட்டுக்காட்டும் மற்றொரு விடயமாகும். 1996 இல் இவர் அறிமுகப்படுத்திய 'வகுப்பறை ஆய்வுகூடம்' எனும் எண்ணக்கரு இன்றும் அதிகமான பின்தங்கிய பாடசாலைகள் பின்பற்றக் கூடிய ஒரு நடைமுறையாக உள்ளது.

இவர் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் பாதுகாப்பில்லாத பாம்புகளை தனது காப்பகத்தில் வளர்த்து அவற்றைப் பாதுகாப்பான காடுகளில் விடுதலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.









ஓர் ஆசிரியர் குடும்பமான இவரது குடும்பத்தில் தந்தை ஓய்வு பெற்ற அதிபராவார். சகோதரிகளான பாத்திமா பர்ஸானா, பாத்திமா பாஹிமா ஆகியோர் ஆசிரியைகளாகக் கடமையாற்றுகின்றனர். சகோதரன் முஹமட் ருஷான் அரச உத்தியோகத்தர் ஆவார். இவரின் மனைவி திருமதி ஏ.எச். ரியாஸா இரசாயனவியல் பாட ஆசிரியை ஆவார். இவர் கல்வி நிர்வாகத் துறையில் காலடி எடுத்து வைத்த நாள் முதல் இவரது அடைவுகளைத் தட்டிக் கொடுத்தும், வழிகாட்டியும் வரும் பிரதான நபராக முன்னாள் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் M.T.A. நிஸாம் திகழ்கின்றார்.

விஞ்ஞானத்தை மாணவரிடையே பிரபலப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக தேசிய விஞ்ஞான மன்றம் இவரைப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கி கௌரவித்துள்ளது. இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் மாணவர் அடைவுகளை மேம்படுத்துவதற்காக இவர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டி கட்டுகஸ்தோட்டை வலயக்கல்வி அலுவலகம், மத்திய மாகாண கல்விச் திணைக்களம் என்பன விருது வழங்கி கௌரவித்துள்ளன. கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் M.L.A.M. ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் இவரது சேவையைப் பாராட்டியுள்ளனர்.



**எம்.சதுர்தீன்...**

# வெலிகம பிரதேச சர்வமத குழுவுக்கு 4 வருடம் பூர்த்தி; செயலக மட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள்







*(வெலிகம தினகரன் நிருபர்)*

வெலிகம பிரதேச சர்வமத குழு உருவாக்கப்பட்டு நான்கு வருடம் பூர்த்தியையொட்டி விசேட செயலமர்வொன்று புதன் கிழமை (23) வெலிகம 'ஹெவோனா' மண்டபத்தில் நடைபெற்றது. கடந்த நான்கு வருடங்களாக இக்குழு மூலமாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் எதிர்வரும் நான்கு வருடங்களுக்கு மேற்கொள்ளப்படவிருக்கின்ற நடவடிக்கைகள் பற்றி இச்செயலமர்வில் விரிவாக கலந்துரையாடப்பட்டன. நாடளாவிய ரீதியில் இவ்வாறான சர்வமதக் குழுக்கள் 12 பிரதேச செயலக மட்டங்களில் இயங்கி வருகின்றமை விசேட அம்சமாகும். இச் செயலமர்வில் இஸ்லாம், பௌத்த, கிறிஸ்தவ மத குழுமங்கள், வெலிகம பிரதேச செயலக அதிகாரிகள், கிராம சேவகர்கள், பிரஜா பொலிஸ் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் பொலிஸார் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக்கல்லூரி 105 வருட பூர்த்தியும் 7வது பட்டமளிப்பும்

*பேருவளை விசேட நிருபர்*

தர்காநகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி 105 ஆவது வருட பூர்த்திவிழாவும் 7 ஆவது பட்டமளிப்பு வைபவமும் நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கலாபீட நிர்வாகசபைத் தலைவர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எஸ்.ஏ.எம் மஸா ஆலிம் (பஹ்ஜி) தலைமையில் வெகுவிமர்சையாக நடைபெறும்.

விழாவில் தென்னிந்தியாவைச் சேர்ந்த அரூஸியதுல் காதிரிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குறிய அஷ் ஷெய்க் அல்லாமா கலாநிதி அஹமட் நாஸிர் ஆலிம் பின் அஷ்ஷெய்க் சுஹைப் ஆலிம் அரூஸியதுல் காதிரி ஜெலாலி– ஜெமாலி பிரதம அதிதியாக கலந்துகொள்வார். 2017 ஆம் 2019 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் கல்வியைப் பூர்த்திசெய்த 18 மாணவர்கள் விழாவில் பட்டம் பெற்றுக் கொள்ளவுள்ளதாக அதிபர் ஷெய்ஹுல் முஅய்யதி மௌலவி எம். அஸ்மிகான் தெரிவித்தார். தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்விநிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் அஸ்லம் ஹாஜியார் முன்னாள் அதிபர் மௌலவிஅப்துல் வாஹித் (பஹ்ஜி) அகுரனை ரஹ்மானிய்யாமுன்னாள் அதிபர் மௌலவிமுஹம்மத் ஜிப்ரி (ரஹ்மானி) அகில இலங்கை இமாம்கள் மன்றதலைவர் மௌலவிபௌஸூல் அமீர் (முஅய்யதி) கல்முனைமன்பவுல் ஹூதாஅரபுல் கல்லூரி விரிவுரையாளர் மௌலவிஎம். ஹம்ஸூல்லாஹ் முஅய்யதி ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்துகொள்வர்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட

# எண்ணெய் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட கியூ வரிசையில்

## பொதுமக்கள் பல்வேறு பாதிப்பு

*ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்*

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல்வேறு நகரங்களிலுமுள்ள எண்ணெய் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இன்மையினால் மக்கள் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

மக்களது தேவைக்கேற்ப போதியளவு எரிபொருள் தங்களுக்கு கிடைப்பதில்லையென எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தங்களுக்கு நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் தொழில் செய்துவரும் முச்சக்கர வண்டிகள், சிறு வியாபாரத்தில் ஈடுபடுவோர், வாகனங்களில் தொழிலுக்காக செல்வோர் உட்பட பல்வேறு தரப்பினரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் எரிபொருள் நிலையங்களில் நீண்ட கியூவரிசைகளை காணக்கூடியதாக இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்



119

### பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP LN-0781 Tata 1618 Lorry 2017, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 014146



122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

NC YB-8323 Bajaj 2010, SP YI-9877 Bajaj 2011, NW YK-435 9 Baja j 2011 T hreewh eel கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 014148

WP B H P- 8217 Yama h a Ray ZR 2018, Motor Cycle கூடி ய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 014147

WP B H U- 2800 TVS NTOR Q 2 019, Moto r C ycle கூடிய விலை க் கோரிக்கை க்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 014150

WP QI-6 097 bajaj 2006, EP AAO-7890 B a jaj 2014, SP YU- 7 736 bajaj 2011 T h reewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 014151



### காணி/தோட்டம்

616

### வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

யூனியன் பிளேஸ் 0320 3படுக்கையறையுடன் முழுமையான தளபாடத்துடனான அப்பார்ட்மென்ட் விற்பனைக்கு. தொடர்பு ரஞ்சித் பெல்பொல 0112821504, அல்லது 0773251404 முதன்மையானவர்கள் மட்டும். 013925

## மரண அறிவித்தல்

**செல்வி. மணிமேகலை கனகரத்தினம்** முன்னர் அமெரிக்காவிலும், தற்பொழுது வெள்ளவத்தை, கொழும்பில் வ சித்தவருமாகிய செல்வி மணிமேகலை கனகரத்தினம் அவர்கள் காலமானார். அன்னார் மறைந்த கனகரத்தினம், பாக்கியம் அவர்களின் அன்பு மகளும், யோகேஸ்வரி, தவேந்திரன், சுரேந்திரன், ப த்மினி, இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வோல்டர், நிதி, சாந்தி, இன்பா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நெலும், சமன், ரதினி, ததீசன், தர்மிலா, ரஜீவ், ரோமலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் வெள்ளிக்கிழமை 25ஆம் திகதி 11 மணியளவில் மவுன்ட்லவேனியா மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, கொஹுவெல மயானத்தில் 1 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். 014301




இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலை மனுக்கோரல் (IFB)

### தேசிய மனு கோரல் போட்டி முறை
### வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அஸ்போல்ட் தளங்களுக்கான கருங்கல் மூலப்பொருட்களை வழங்குதல் -2022

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அஸ்போல்ட் தளங்களுக்கான கருங்கல் மூலப்பொருட்களை வழங்குதல் (2022) வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

2. 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

| # | ஒப்பந்த இல. | தகவல்கள் | பொறியியலாளர்களின் மதிப்பீடு (வட் வரி அற்ற) | மூலப் பொருளின் அளவு (மி.மீ) | மொத்த அளவு (மெ.டொ) | மனுக் காப்புறுதி (ரூபா.) | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூபா.) | கால அளவு/ நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | RDA/MM/KOTHAG/2022/01 | கொத்மலை அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல் - 2022 | 57.81 மில் | 0 - 5 | 10,500 | 580,000.00 | 12,500.00 | 180 |
| | | | | 5 – 12.5 | 6,250 | | | |
| | | | | 12.5 - 19 | 4200 | | | |
| 02 | RDA/MM/KOTHAG/2022/02 | கொத்மலை அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல்- 2022 | 38.48 மில் | 0 - 5 | 7,000 | 390,000.00 | 3,500.00 | 120 |
| | | | | 5 – 12.5 | 4,200 | | | |
| | | | | 12.5 - 19 | 2,750 | | | |
| 03 | RDA/MM/KOTHAG/2022/03 | கொத்மலை அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல்- 2022 | 28.67 மில் | 0 - 5 | 5,200 | 290,000.00 | 3,500.00 | 90 |
| | | | | 5 – 12.5 | 3,200 | | | |
| | | | | 12.5 - 19 | 2,000 | | | |
| 04 | RDA/MM/KEAG/2022/04 | கீரகல அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல்- 2022 | 51.5 மில் | 0 - 5 | 10,500 | 520,000.00 | 12,500.00 | 180 |
| | | | | 5 – 12.5 | 6,250 | | | |
| | | | | 12.5 - 19 | 4,200 | | | |
| 05 | RDA/MM/KEAG/2022/05 | கீரகல அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல்- 2022 | 34.29 மில் | 0 - 5 | 7,000 | 350,000.00 | 3,500.00 | 120 |
| | | | | 5 – 12.5 | 4,200 | | | |
| | | | | 12.5 - 19 | 2,750 | | | |
| 06 | RDA/MM/KEAG/2022/06 | கீரகல அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல்- 2022 | 25.57 மில் | 0 - 5 | 5,200 | 260,000.00 | 3,500.00 | 90 |
| | | | | 5 – 12.5 | 3,200 | | | |
| | | | | 12.5 - 19 | 2,000 | | | |
| 07 | RDA/MM/MEAG/2022/07 | மதவச்சி அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல்- 2022 | 30.57 மில் | 0 - 5 | 7,000 | 310,000.00 | 3,500.00 | 120 |
| | | | | 5 – 12.5 | 4,200 | | | |
| | | | | 12.5 - 19 | 2,750 | | | |
| 08 | RDA/MM/INAG/2022/08 | இங்கிரிய அஸ்போல்ட் தளத்திற்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல்- 2022 | 34.29 மில் | 0 - 5 | 7,000 | 350,000.00 | 3,500.00 | 120 |
| | | | | 0 - 5 | 4,200 | | | |
| | | | | 5 – 12.5 | 7,000 | | | |

3. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

4. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை **பராமரிப்பு முகாமைத்துவப் பிரிவு, 6 ஆவது மாடி,"மகநெகும மஹா மெதுர", வீதி அபிவிருத்தி அதிகார சபை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லையில்** (தொலைபேசி: 011-2882196 பெக்ஸ்:- 011-2882195) பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், **25.02.2022** ஆம் திகதியிலிருந்து மனு ஆவணங்களை **www.rda.gov.lk** இல் பார்வையிடமுடியும்.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **25.02.2022** ஆம் திகதியிலிருந்து **18.03.2022** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச் செலுத்தப்படாத கட்டணத்தை **பணிப்பாளர் (பாராமரிப்பு முகாமைத்துவம்) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு** செலுத்திய பற்றுச்சீட்டுடன் (ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன பண வைப்புச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.) எழுத்துமூல மின்னஞ்சலை அனுப்பி ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

   மின்னஞ்சல் முகவரி **mmtenders123@gmail.com**.

   ஒவ்வொரு மனு ஆவணத்திற்கும் மேலே அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள மீளச் செலுத்தப்படாத மனுக்கட்டணத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக்கணக்கில் பணமாக செலுத்த வேண்டும்.

   | | | |
   |---|---|---|
   | கணக்கின் பெயர் | : | பணிப்பாயர் நாயகம்- வீதி அபிவிருத்தி அதிகார சபை |
   | கணக்கிலக்கம் | : | 0000001943 |
   | வங்கியின் பெயர் | : | இலங்கை வங்கி- பெருநிறுவன கிளை |

   மனுக்களை சமர்ப்பிக்கும் போது அசல்/ செல்லுபடியாகும் பண வைப்புச்சீட்டு என்பன சமர்ப்பிக்கப்படுகின்றனவா என பரீட்சிக்கப்படுவதுடன், அசல்/ செல்லுபடியாகும் பண வைப்புச்சீட்டு அற்ற மனுக்கள் நிராகரிக்கப்படும்.

6. மனு தொடர்பான கூட்டம் **08.03.2022** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு ஒன்லைன் Zoom தொழிநுட்பம் மூலம் பராமரிப்பு முகாமைத்துவ பிரிவின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுவதுடன், Zoom தொழிநுட்பம் இணைப்பை பராமரிப்பு முகாமைத்துவ பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 011-2882196)

7. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களின் அசல் மற்றும் பண வைப்புச்சீட்டை **21.03.2022** ஆம் திகதி **14.00 மணித்தியாலத்திற்கு முன் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, 06 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். ஒன்லைன் முறை மூலம் மனுக்கள் திறக்கப்படுவதுடன் Zoom இணைப்பு பின்னர் அறிவிக்கப்படும்.

8. மனு ஆவணங்களை இடும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"அஸ்போல்ட் தளங்களுக்கு கருங்கல் மூலப்பொருட்களை வழங்கல் - 2022 (அஸ்போல்ட் தளத்தின் பெயர்)"** குறிப்பிடல் வேண்டும்.

9. அனைத்து மனுக்களும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மனுக்காப்புறுதிப்பிணையுடன் **18.07.2022 ஆம் திகதி** வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். மனுக்காப்புறுதிகள் இணைக்கப்படாத மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் கோரப்படும் இறுதித்திகதியில் இருந்து **91 நாட்கள் வரை** செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

10. மனுக்களுக்கான இந்த அழைப்பின் கீழ் அழைக்கப்பட்ட மனுக்களுக்கு (08 மனுக்கோரல்கள்) மனுதாரர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கான மனுக்கோரலை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவார். எவ்வாறாயினும் ஒரு ஒப்பந்ததாரருக்கு இரண்டிற்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு தகுதி பெற முடியாததுடன், ஒரு ஆலைக்கு ஒரு ஒப்பந்ததாரர் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

    வேலை வழங்குனருக்கு மிகக் குறைந்த செலவு ஏற்படும் கலவை ஒன்றை பெறும் வகையில் மனுக்களோ அல்லது மனுக்களின் கலவையோ மதிப்பீடு செய்யப்பட்டு, ஒப்பிடப்பட்டு தெரிவு செய்யப்படும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் சபை,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)
## 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**குறிப்பு இல: பிசெஅம்/காணி/08/சுவீ/09/நீதிமன்றம் பொது**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விஸ்தரிப்புத் திட்டத்திற்காக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பின்வரும் காணிகளுக்கு அரசு வட்டி வழங்குவதற்காக காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் மரணமடைந்தபடியால் மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கத்தின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

காணிகளுக்குரிய நஷ்டஈடு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் நிரூபித்தால் பெற்றுக் கொள்வதற்கு தங்காலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கத்தின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக குடியரசின் 2021.11.15ஆம் திகதிய 2254/07ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

| தொடர் இல. | வரைபட இல. | துண்டு இல. | நஷ்டஈடு (ரூ.) | வழக்கு இல. | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| 01 | நீர்ப்பாசன நில அளவை வ.ப. இல. 9, பிற்சேர்க்கை இல. 42, தாள் இல. 42 | 3473, 3476 | 330,497.32 | LA 377/20 | தங்காலை |

**என்.டி.பீ. ரணசிங்க,**
**பிரதேச செயலாளர்.**
**அம்பலாந்தோட்டை**

**2021.06.05.**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)
## 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விஸ்தரிப்புத் திட்டத்திற்காக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பின்வரும் காணிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்குவதற்காக காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் மரணமடைந்தபடியால் மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கங்களின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

காணிகளுக்குரிய நஷ்டஈடு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் நிரூபித்தால் பெற்றுக் கொள்வதற்கு தங்காலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கங்களின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக குடியரசின் 2022.01.13ஆம் திகதிய 2262/37 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

| தொடர் இல. | வரைபட இல. | துண்டு இல. | நஷ்டஈடு (ரூ.) | வழக்கு இல. | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| 01 | 335/7/9 | 683 | 34,299.16 | LA/222/17 | தங்காலை |
| 02 | 343/22/22 | 646/648 | 50,745.23 | LA/219/17 | தங்காலை |
| 03 | 343/23/23 | 876 | 42,908.47 | LA/519/20 | தங்காலை |
| 04 | 343/22/22 | 748 | 53,666.63 | LA/221/17 | தங்காலை |
| 05 | 337/13/13 | 588 | 71,106.72 | LA/218/17 | தங்காலை |

**சிந்தா பீ.டபிள்யூ வன்னியாராச்சி,**
**பிரதேச செயலாளர்,**
**அங்குணகொலபெலஸ்ஸ.**

**08.12.2021**

## தேசிய கல்வி நிறுவனத்தின் மஹரகம பிரதான உணவகத்தை நடத்திச் செல்லல் (2022/ 2023 ஆண்டு) இற்கான விலைமனுக்கள் கோரல்

**NIE/LP/2022/11**

தேசிய கல்வி நிறுவகத்தின் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் தேசிய கல்வி நிறுவகத்தின் மஹரகம பிரதான உணவகத்தை நடத்திச் செல்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட உணவகம்/ ரெஸ்டூரன்ட்/ ஹோட்டல் உரிமையாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 500/- வைப்பை பணிப்பாளர் நாயகம், கணக்குஇல. 607628 இற்கு (இலங்கை வங்கி, மஹரகம) செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியை பெறுகை அதிகாரிக்கு சமர்ப்பித்து, வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்கள் மற்றும் சகல விபரங்களையும் கேள்வி அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை விநியோகித்தல் 2022.03.21 பி.ப. 2.00 இற்கு முடிவடையும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை முத்திரையிட்டு, 2022.03.22 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய கல்வி நிறுவகம், த.பெ. 21, ஹைலெவல் வீதி, மஹரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் கேள்வி ஆவணங்களை உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், 'NIC/LP/2022/11' என்ற கேள்வி கோவை இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். 2022.03.22 பி.ப. 2.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

இப் பெறுகை விடயம் பற்றிய இறுதித் தீர்மானம் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமாகும்.

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 0117601797, 0117601799ஐ அழையுங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம.**

**2022.02.25**



# இலங்கை பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## உரிமத்தை நீட்டிப்பதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") ஆனது இத்தால் அறியச் செய்வது யாதெனில், பின்வரும் நபர்களுக்கு, மின்சாரத்தைப் பிறப்பிக்கும் நோக்கத்தில், நுகர்வோருக்கு மின்சாரவழங்கலின் தயார்நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக, மின்பிறப்பாக்க உரிமத்தை நீட்டிக்க தீர்மானித்துள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | ஆலை/வசதி பெயர் | திறன் (MW) | தொழில்நுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/21/37 | இக்கோ பவர் (பிரைவேட்) லிமிடெட் | ஹப்புகஸ்தென்ன 1 மினி நீர் மின்நிலையம் | 4.65 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/22/08 | இக்கோ பவர் (பிரைவேட்) லிமிடெட் | கிளாசாக் மினி நீர் மின்நிலையம் | 2.5 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர்**
**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**
**06-வது மாடி, இலங்கைவங்கி வர்த்தகக்கோபுரம்,**
**இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,**
**கொழும்பு 03**

**தொலைபேசி: (011) 2392607/8**
**தொலைநகல்: (011) 2392641**
**பெக்ஸ்: licensing@pucsl.gov.lk**
**இணையதளம்: www.pucsl.gov.lk**

**திகதி: 2022.02.25**

---

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு**
**இல:- தி/காணி/எல்2/சுவீVI/161**
**காணி அமைச்சின் குறிப்பு**
**இல:- 4-3-/6/2019/எச்டபிள்யூ/494**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 08.02.2022ஆம் திகதிய 2266/12ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி IIIஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகானம் | : | தென் |
| மாவட்டம் | : | மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | திஹாகொட |
| கிராம சேவகர் பிரிவு | : | இல. 335சி - கப்புதூவ கிழக்கு |
| கிராமத்தின் பெயர் | : | கப்புதூவ |
| ஆரம்ப வரைபட இல. | : | ஆ.வ.இல. மார. 2875 |
| துண்டு இலக்கம் | : | 1-6 (06 துண்டுகள்) |
| விஸ்தீரணம் | : | 0.0235 ஹெக்டயார் |

**உமேஷா சுராங்கி மாத்தறகே,**
**பிரதேச செயலாளர்,**
**திஹாகொட.**

**பிரதேச செயலகம்,**
**திஹாகொட**

23.02.2022

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (எரிசக்தி அமைச்சு)**

### சீனக்குடாவிலுள்ள தாங்கிகள் பண்ணை இடப்பரப்பு வெளியை சுத்தப்படுத்துதல்

**B/19/2022**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் மற்றும் (அண்ணளவாக) 2 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட சீனக்குடாவிலுள்ள தாங்கிகள் பண்ணை இடப்பரப்பு வெளியை சுத்தப்படுத்தும் வேலைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
2. இந்த வேலையின் நிர்மாணக்காலம் ஒரு (01) மாதமாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய விலைமனுக்கோரல் நடைமுறையின் பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் **ICTAD** நிறுவனத்தில் C-8 அல்லது C-07 பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை (ரூபா 925.83+8%) மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்பவும்.
6. விலைமனுக்கள் 2022-03-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை), பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும்.
7. ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் இருப்பின் திரு. ஆர். சிவசங்கர் (சிவில் பொறியியலாளர்) அவர்களை 011-5455138 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**
**தலைவர், திணைக்கள பெறுகைக்குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டாக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09. தொ.பே. 011-5455335, தொலைநகல்: 011-5455424**

---

**பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ம் பிரிவின் விதிகளுக்கமைய வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியின் பெயர் 2022 பெப்ரவரி 07ம் திகதி 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்:
**ஹொரயிசன் ஹோல்டிங்ஸ் வென்ச்சர்ஸ் (பிவீடீ) எல்டீடீ**
கம்பனி இலக்கம்: **PV 106434**
பதிவு அலுவலகம்: **இல. 278/4 லெவல் 27, எக்சஸ் டவர் (தெற்கு) யூனியன் பிளேஸ், கெழும்பு -2**
கம்பனியின் பெயர்:
**பேர்சைட் கொமர்ஷல் டிவெலொப்மன்ட் (பீவீடீ) எல்டீடீ**
**RNH ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்**
**'RNH இல்லம்' இல. 622B**
**கோட்டே வீதி, கோட்டே**

---

**பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ம் பிரிவின் விதிகளுக்கமைய வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியின் பெயர் 2022 பெப்ரவரி 07ம் திகதி 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்:
**ஸ்பார்க் அக்கடமி (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனி இலக்கம்: **PV 00240973**
பதிவு அலுவலகம்:
**எக்சஸ் டவர் (தெற்கு) லெவல் 27, இல. 278/4 யூனியன் பிளேஸ், கெழும்பு -2**
கம்பனியின் பெயர்:
**ஸ்பார்க் டென டைம்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**
**RNH ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்**
**'RNH இல்லம்' இல. 622B**
**கோட்டே வீதி, கோட்டே**

---






---

# இலங்கை பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் தரப்புக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப் பத்திரத்தினை வழங்க உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/22/07 | நிக்கோ எனர்ஜி (பிரைவேட்) லிமிடெட் | எம்பிலிபிடிய 4 *SBS II (90) 1 MW* சோலார் பி.வி மின்உற்பத்தி நிலையம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/21/47 | ஷாய்ஷா சோலார் ஹபரண (பிரைவேட்) லிமிடெட் | திருகோணமலை 1 *SBS II (90) 1 MW* சோலார் பி.வி மின்உற்பத்தி நிலையம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/21/48 | ஷாய்ஷா சோலார் ஹபரண (பிரைவேட்) லிமிடெட் | திருகோணமலை 2 *SBS II (90) 1 MW* சோலார் பி.வி மின்உற்பத்தி நிலையம் | 1.00 | சோலார் பி.வி |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.02.25

---

சுகாதார அமைச்சு

## அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை – கல்முனை

# 2022/2023ஆம் ஆண்டில் சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விமனுக்கோரல்

அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை சிற்றுண்டிச்சாலையினை 2022/2023 ஆண்டின் ஒரு வருட காலப்பகுதிக்கு நடாத்துவதற்கு திறமையும் தகுதியும் வாய்ந்த கேள்வி மனுதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விமனுக்கள் கோரப்படுகின்றது.

1. ஆர்வமுள்ள கேள்விமனு கோருபவர்கள் கல்முனை அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலையிலிருந்து மீளப்பெறமுடியாத கேள்விக் கட்டணமாக ரூபா 3,000/-ஐ அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், தேசிய அடையாள அட்டையையும் காண்பித்து கேள்வியில் கலந்து கொள்வதற்கான ஆவணங்களை 2022.02.25ஆந் திகதி தொடக்கம் 2022.03.16ஆந் திகதி வரை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
2. காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சிற்றுண்டிச்சாலை சேவைகள் வழங்குதல் - 2022/2023' என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் 17.03.2022ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக வைத்திய அத்தியட்சகர், அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 'Tender Box' இல் இடப்படல் வேண்டும்.
3. கேள்விமனுக் கோரிக்கைகள் அனைத்தும் 17.03.2022ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு வைத்திய அத்தியட்சகர் அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கோரிக்கை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்க முடியும்.
4. கேள்விமனுக் கோரிக்கை ஆவணங்களை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது அதனை நிராகரிப்பதற்குமான உரிமை கேள்விச் சபைக்குரியது.
5. மேலதிக தகவல்களுக்கு பெறுகை உத்தியோகத்தரை 067-2229496, 067-2222261- Ext-122, 113 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**வைத்திய கலாநிதி, ஏ.எல்.எப். றஹ்மான்**
**வைத்திய அத்தியட்சகர்**
**அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை**
**கல்முனை**
**25.02.2022**

---

கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

**கரையோரம் பேணல் மற்றும்**
**மூல வள முகாமைத் திணைக்களம்**

# விலைமனுக்கோரல் (IFB)

## கரையோர பாதுகாப்பு கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான பொருட்களை வழங்குதல்

1. கரையோரம் பேணல் மற்றும் மூல வள முகாமைத் திணைக்களத்திற்காக வழங்கல் குழுத்தலைவரினால், கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, கரையோர பாதுகாப்பு கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான பொருட்களை வழங்கலுக்காக தகுதியை கொண்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததார்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு வழங்கல் ஒரு தனிப்பட்ட மற்றும் சுயாதீன வழங்கல் நடவடிக்கை ஆகும்.

| ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | வழங்கல் விபரங்கள் | மனுக்காப்புறுதி மற்றும் மனு செல்லுபடியாகும் காலம் | விநியோக காலம் | மாவட்டம் | தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|---|
| 70 மீற்றர் நீளமான பக்க சுவர் கட்டுமானம் திக்வெல்ல, மாத்தறை CCD/CD/2022/57 | டொன் (1.0) கருங்கல் - 700 Nos<br>டொன் (1.5) கருங்கல் - 165 Nos<br>கி.கி (2-250) கலவைகல்- 350m³ | ரூபா.425,000.00<br>60 நாட்கள் | 120 நாட்கள் | மாத்தறை | பிராந்திய பொறியியலாளர் (மாத்தறை / ஹம்பாந் -தோட்டை) 041-2234572 |
| 180 மீற்றர் நீளமான பக்க சுவர் கட்டுமானம் ஜுட்வத்தை, உஸ்வெட கொய்யாவ, கம்பஹா CCD/CD/2022/59 | டொன்(1.0) கருங்கல் - 3000 Nos<br>டொன்(1.5) கருங்கல் - 1030 Nos<br>கி.கி (150-225) கலவைகல் - 900m³ | ரூபா.120,000.00<br>77 நாட்கள் | 90 நாட்கள் | கம்பஹா | பிராந்திய பொறியியலாளர் (கொழும்பு - வடக்கு) 031-2238400 |

2. மனுக்கோரல் தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுவதுடன், மேலே உள்ள ஒவ்வொரு மனுக்கோரலுக்கும் தனித்தனியாக மனுக்கள் வழங்கப்படும்.
3. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற மனுதாரர் திருப்தியற்ற சேவைப்பட்டியலில் (கருப்புப்பட்டியல்) இடம்பெற்றிருக்கக்கூடாது.
4. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற, மனுதாரர்களினால் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை தமது மனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும். (திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மனுதாரர்களுக்குப் பொருந்தாது.)

**அ). பொருட்கள் வழங்கலுக்காக**

- அ). பொருட்களை கொண்டு செல்ல பயன்படும் இயந்திரங்கள், டிப்பர்கள், டிராக்டர்கள், டிரம் லாரிகள் மற்றும் பிற வாகனங்களின் சான்றளிக்கப்பட்ட பட்டியலுடன் வாகனங்கள் / இயந்திரங்களின் பதிவுச் சான்றிதழ்களின் நகல்கள்
- ஆ). கடந்த 05 ஆண்டுகளில் எமது திணைக்களத்தில் அல்லது பிற நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட விநியோகங்களின் விவரங்கள்
- இ) 2022 ஆம் ஆண்டிற்கான வெடிபொருட்கள் உரிமம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமம் மற்றும் தொழில்துறை சுரங்க உரிமத்தின் நகல்கள்
- ஈ) வணிகப் பதிவுச் சான்றிதழ், வட் வரிகளுக்கான பதிவுச் சான்றிதழ்களின் நகல்கள்

5. இது தொடர்பில் ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு தேவையான மேலதிக தகவல்களை கரையோரம் பேணல் மற்றும் மூல வள முகாமைத் திணைக்களத்தின், பிரதான பொறியியலாளர் (கரையோர அபிவிருத்தி) மூலம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், எந்தவொரு காரியாலய வேலை நாளிலும் **0900 மணி** தொடக்கம் **1500 மணி** வரையிலான காலப்பகுதியினுள் மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் மற்றும் பெக்ஸ் இலக்கம் என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.
6. அலுவலக முறை கோரிக்கை கடிதத்தின் மூலம் கீழுள்ள முகவரியில் பிரதான பொறியியலாளர் (கரையோர அபிவிருத்தி) இற்கு எழுத்து மூல விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம் மீளச் செலுத்தப்படாத கட்டணமான மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை **(ரூபா.3,500)** செலுத்துவதன் மூலம் **2022.02.25** ஆம் திகதி தொடக்கம் **2022.03.10** ஆம் திகதி வரை **0900 மணி** தொடக்கம் **1500 மணி** வரையிலான காலப்பகுதியினுள் ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு, மனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும்.
7. பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட மனுக்கள் **2022.03.11** ஆம் திகதி **1400 மணிக்கு** முன் கொண்டு வந்து கையளிக்க அல்லது பதிவுத்தபாலின் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. மனு ஆவணத்தை இடும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர், ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடல் வேண்டும்.
9. மனுக்கோரல் நேரம் முடிவடைந்த உடனேயே, கரையோரம் பேணல் மற்றும் மூல வள முகாமைத் திணைக்களத்தின் பிரதான கேட்போர் கூடத்திற்கு வருகைதந்திருக்கும் மனுதாரர் அல்லது அவர்களினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.
10. அனைத்து மனுக்களுடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் படி மனுக்காப்புறுதி, வங்கிப்பிணை அல்லது பணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் மூலம் இருக்க வேண்டியதுடன், வங்கிப்பிணையை முன்வைப்பதாயின் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வங்கியின் மூலம் முன்வைக்கப்பட வேண்டியதுடன், குறித்த மனுக்காப்புறுதி திணைக்களத்தின் சிராப்பருக்கு ரொக்கமாக செலுத்த முடியும். மனுக்காப்புறுதியின் விபரங்கள் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
11. நேரம் தாழ்த்திக்கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | : | **011-2449197 / 011-2472622 / 011-2387920** |
| **பெக்ஸ்** | : | **011-2387920 / 011-2438005** |
| **மின்னஞ்சல்** | : | coastaldevelopmentcd@gmail.com |

**தலைவர்,**
**திணைக்களத்தின் வழங்கல் குழு,**
**கரையோரம் பேணல் மற்றும் மூல வள முகாமைத் திணைக்களம்,**
**நான்காம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,**
**கொழும்பு 10.**

சுதந்திரக்கிண்ண கால்பந்தாட்டம்:

# முதல் கட்ட அரையிறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பம்

INDEPENDENCE TROPHY
CEYLON PROVINCIALS LEAGUE 2022

## சப்ரகமுவ–தென்மாகாண அணிகள் இன்றும் வடக்கு–கிழக்கு மாகாண அணிகள் நாளை களத்தில்

POINTS TABLE

| TEAM | P | W | D | L | GF | GA | GD | PTS |
|---|---|---|---|---|---|---|---|---|
| SABARAGAMUWA (Q) | 7 | 5 | 2 | 0 | 11 | 3 | 8 | 17 |
| NORTHERN (Q) | 7 | 3 | 4 | 0 | 9 | 4 | 5 | 13 |
| EASTERN (Q) | 7 | 2 | 5 | 0 | 5 | 1 | 4 | 11 |
| SOUTHERN (Q) | 7 | 3 | 2 | 2 | 8 | 7 | 1 | 11 |
| WAYAMBA RAJARATA | 7 | 2 | 2 | 3 | 11 | 13 | -2 | 8 |
| WESTERN | 7 | 2 | 2 | 3 | 12 | 10 | 2 | 8 |
| CENTRAL | 7 | 1 | 1 | 5 | 3 | 11 | -8 | 4 |
| UVA | 7 | 1 | 0 | 6 | 4 | 14 | -10 | 3 |

சுதந்திரக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் முதல் அரையிறுத்திப் போட்டி இன்று சப்ரகமுவ-தென் மாகாண அணிகளுக்கிடையில் காலி மைதானத்திலும், நாளை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கிடையில் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்திலும் நடைபெறவுள்ளன. அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவான அணிகள் இரு அரையிறுதிப் போட்டிகளில் இருவேறு பிரதேசங்களிலுள்ள மைதானங்களில் மோதவுள்ளன. இதனடிப்படையில் வடக்கு கிழக்கு அணிகளுக்கிடையிலான 2வது அரையிறுத்திப் போட்டி மார்ச் 1ம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக மைதானத்திலும், சப்ரகமுவ-தென் மாகாண அணிகள் பங்கேற்கும் 2ஆவது அரையிறுத்திப் போட்டி மார்ச் 2ம் திகதி இரத்தினபுரி சீவலி மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த இரு அரை இறுதிப்போட்டிகளில் வெற்றிகள் சம நிலையானால் அரையிறுதியில் மோதிய அணிகள் பெறப்பட்ட கோல்கள், எதிரணிக்கு விட்டுக்கொடுத்த கோல்களின் எண்ணிக்கையடிப்படையில் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளன. இதிலும் சமநிலை ஏற்படும் பட்சத்தில் பெனால்டி சூட் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

முதல் அரையிறுதிப் போட்டியில் மோதும் சப்ரகமுவ தெற்கு மாகாணங்களில் சப்ரகமுவ மாகாண அணி முதல்கட்டப் போட்டிகளில் 5 வெற்றி, 2 சமநிலை முடிவுகளுடன் 17 புள்ளிகளைப் பெற்று முதல் அணியாக அரையிறுதிக்குத் தெரிவானது. அவ்வணி 11 கோல்கள் பெற்றுள்ளதுடன் எதிரணிக்கு 3 கோல்கள் மட்டுமே விட்டுக்கொடுத்துள்ளது. இவ்வணி வீரர் ஏ. எச். எம். முஷ்பீக் இதுவரை 5 கோல்கள் பெற்று அவ்வணியின் வெற்றிக்கு பங்களித்துள்ளார். இந்த அரையிறுதிப் போட்டியிலும் அவரின் திறமையான ஆட்டத்தை காண முடியும் என நம்பலாம். இவ்வணிக்கு பௌசுல் ரகுமான் பயிற்சியாளராகவுள்ளார். தென்மாகாண அணி 3 வெற்றி, 2 சமநிலையுடன் 11 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் 4வது இடத்தைப் பிடித்து அரையிறுத்திக்கு தெரிவாகியுள்ளது. அவ்வணி 8 கோல்கள் பெற்றதுடன் 7 கோல்களை விட்டுக்கொடுத்துள்ளது. அவ்வணியின் முன்கள வீரர் சுபுன் தனன்ஜய அவ்வணி சார்பில் மூன்று கோல்களைப் பெற்று தொடரில் கோல்கள் பெற்றோர் வரிசையில் 4வது இடத்தில் உள்ளார். ஷிரந்த குமாரவின் பயிற்றுவிப்பில் களமிறங்கும் இவ்வணி முதல் சுற்று ஆட்டத்தில் சப்ரகமுவ அணியிடம் 1 0 என்ற கோல்கணக்கில் தோல்வியுற்றது.

நாளை நடைபெறவுள்ள 2வது அரையிறுதிப் போட்டியில் நீண்ட இடைவெளிக்குப் பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான தரம்வாய்ந்த உதைபந்தாட்ட போட்டி நடைபெறவுள்ளதால் இவ்விரு அணிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டிகளைக் காண அதிகமான ரசிகர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரு அணிகளும் முதற் சுற்றுப் போட்டிகளில் 7 போட்டிகளில் மோதியுள்ளதுடன் இரு அணிகளும் தோல்வியடையாமலே அரையிறுதிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ரத்னம் ஜஸ்மினின் பயிற்சியின் கீழ் களமிறங்கிய வட மாகாண அணி புள்ளிப்பட்டியலில் 13 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது. இத்தொடரில் 9 கோல்கள் பெற்றதுடன் எதிராக நான்கு கோல்கள் மட்டுமே கொடுத்தது. வடக்கு மாகாண அணி வீரர் எஸ். நிதர்சன் ஒரு ஹெட்ரிக் கோலுடன் மொத்தம் 6 கோல்களைப் பெற்று இத்தொடரில் அதிக கோல்களைப் பெற்ற வீரராகவுள்ளார். மொஹம்மட் ரூமி பயிற்சியாளராகக் கடமையாற்றும் கிழக்கு மாகாண அணி இத்தொடரில் 7 போட்டிகளில் 2 வெற்றிகள் 5 சமநிலை முடிவுகளுடன் 11 புள்ளிகள் பெற்று 3வது இடத்தைப் பெற்றது. அவ்வணியின் கோல் காப்பாளர் எம். எம். முர்ஷிக் எதிர் அணி பெறவிருந்த பல கோல்களை லாவகமாகத் தடுத்து திறமை காட்டியிருந்தார். இந்த அரையிறுதிப் போட்டியிலும் அவரது பங்களிப்பு கிழக்கு மாகாண அணியின் வெற்றியில் செல்வாக்குச் செலுத்தும். இவ்விரு அணிகளும் மோதிய ஆரம்பச் சுற்றுப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.



ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள உதைபந்தாட்ட ரசிகர்களையும், இளம் வீரர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில் முதற்தடவையாக 4 அரையிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் விளையாட்டுக் கொள்கைகளுக்கு இணங்கவும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் யஸ்வர் உமரின் கிராமங்களிலுள்ள இளம், திறமை வாய்ந்த வீரர்களையும் இனம் கண்டு தேசிய அணிக்கு உள்வாங்க வேண்டும் என்ற எண்ணக்கருவுக்கு அமையவும் இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுதந்திரக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் நடைபெற்று வந்தது.

அவர்களின் இச்சிந்தனை ஓரளவுக்கு செயல்ரூபம் பெறும் வகையில் இத் தொடரில் கிராமப்புற வீரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், யாழ்ப்பாணம், மன்னார், திருகோணலை, கேகாலை, பதுளை, பாணந்துறை, மாத்தறை போன்ற பகுதிகளின் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் இத்தொடரில் சிறப்பாக செயற்பட்டுள்ளனர். இளம் வீரர்களான வடமாகாண அணி வீரர் எஸ். நிதர்சன், ஊவாமாகாண அணி வீரர் பிராஸ் சாஹிர், தென் மாகாண வீரர் எஸ். சசித், கிழக்கு மாகாண வீரர் லினுஸ் கான் இத் தொடரில் சிறப்பாக விளையாடி தமது திறமையை வெளிப்படுத்தினர்.

இச்சுற்றுத் தொடரில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மேல் மாகாண அணி புள்ளிப்பட்டியலில் 6வது இடத்துக்குத் தள்ளப்பட்டது. அவ்வணியில் விளையாடும் வீரர்கள் அனுபவம் வாய்ந்த, தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்களாக இருந்தாலும், சப்ரகமுவ, கிழக்கு போன்ற வளர்ந்து வரும் வீரர்களைக் கொண்ட அணிகளிடம் படுதோல்வியடைந்திருந்தமை விமர்சனத்திற்குள்ளாகியிருந்தது. அவ்வணிக்கு பயிற்சி அளிக்கும் பிரபல பயிற்றுவிப்பாளரான சுமித் வல்பொலவும் இதனால் அதிர்ச்சியடைந்துள்ளார். அவ்வணி வீரர் நவீன் ஜூட் இத்தொடரில் பெறப்பட்ட 2வது ஹெட்ரிக் கோல் பெற்றதுடன் மொஹம்மட் ஹஸ்மீரும் இத்தொடரில் 4 கோல்கள் அடித்திருந்தாலும் அவ்வணி பின்னடைவையே சந்தித்துள்ளது.

வடமேல், வடமத்திய மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ரஜரட்ட அணி முதல் சுற்று முடிவில் 2 வெற்றி, 3 சமநிலை முடிவுடன் 9 புள்ளிகளுடன் 5வது இடத்தைப் பெற்றது.

இத்தொடரில் முதல் வெற்றியைப் பெற்று மற்றைய அணிக்கு அதிர்ச்சியளித்த ஊவா மாகாண அணி முதல் அணியாக அரையிறுதிப் போட்டியிலிருந்து வெளியேறியது. அவ்வணி இலகுவாக வென்று முன்னிலை பெறவிருந்த 3ம் கட்டமாக திருகோமலையில் நடைபெற்ற மத்திய மாகாண அணிக்கு எதிரான போட்டியில் ஏற்பட்ட மோதல் காரணமாக பின்னடைவையடைந்தது. அதனால் வெளியேற்றப்பட்ட பிராஸ் சாஹிர், அர்பான், கவிந்து ரவிஹங்ச, ஹெரந்த நந்தனவும் போட்டித் தடைக்குட்பட்டதால் அவ்வணி மேலும் சிக்கலுக்குள்ளானது. அதன் பின் நடைபெற்ற எல்லாப் போட்டிகளிலும் அவ்வணி படுதோல்வியடைந்து ஒரே ஒரு வெற்றியுடன் 3 புள்ளிகளையே பெற்றது.

இந்நிலையே மத்திய மாகாண அணிக்கும் ஏற்பட்டது. அவ்வணி வீரர்களான உமைர், எச்.எச். மொஹம்மட் உட்பட சில வீரர்களுக்கு தடைவிதிக்கப்பட்டமை அவ்வணியின் பின்னடைவுக்குக் காரணமாக அமைந்தது. அவ்வணி ஒரு வெற்றி ஒரு சம நிலையுடன் 7வது இடத்திற்கே வரமுடிந்தது.

எம்.எஸ்.எம்.ஹில்மி,
(திருகோணமலை குறூப் நிருபர்)

## மெக்சிகோ பகிரங்க டென்னிஸ் தொடரில் இருந்து அலெக்சாண்டர் ஸ்வெரேவ் நீக்கம்



மெக்சிகோ பகிரங்க டென்னிஸ் தொடரில் இருந்து அலெக்சாண்டர் ஸ்வெரேவ் நீக்கபட்டுள்ளார். ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்று அசத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெர்மனியை சேர்ந்தவரும், தரவரிசையில் நம்பர் 3 இடத்தைப் பிடித்தவருமான அலெக்சாண்டர் ஸ்வெரேவ் மெக்சிகோ பகிரங்க சர்வதேச டென்னிஸ் போட்டியில் கலந்து கொண்டார். ஆண்கள் இரட்டையர் பிரிவில் ஸ்வெரேவ் பிரேசிலின் மார்சிலோ மெலோவுடன் இணைந்து விளையாடினார். அதில் ஸ்வெரேவ் ஜோடி தோல்வி அடைந்தது. டைபிரேக்கரின் போது ஸ்வெரேவ் நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அப்போது ஆத்திரமடைந்த ஸ்வெரேவ் நடுவர் காலை தாக்குவது போல் அவர் அமர்ந்திருந்த நாற்காலி மீது டென்னிஸ் மட்டையால் ஓங்கி அடித்தார். அவரது செயல் டென்னிஸ் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர்ஸ்வெரேவ் மெக்சிகோ பகிரங்க டென்னிஸ் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

## கிழக்கு பிராந்திய உதைபந்தாட்ட அணி வட பிராந்திய அணியை வீழ்த்தியது



ஹிங்குறாணை குறூப் நிருபர்

இலங்கை போக்குவரத்து சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட போக்குவரத்துசபையின் பிராந்தியங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த 16ம் திகதி கொழும்பு நாராஹேன்பிட்டி சாலிகா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த போட்டி நிகழ்வுக்கு பிரதம திதியாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி றணவக கலந்துகொண்டார். சுற்றுப்போட்டியில் இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய உதைபந்தாட்ட அணியினருக்கும் இலங்கை போக்குவரத்துசபையின் கிழக்கு பிராந்திய அணியினருக்கும் இடையில் நடைபெற்றது இடைவேளைக்கு முந்திய ஆட்டத்தின் போது இரு அணியினரும் எந்த விதமான கோல்களையும் இரு அணியினராலும் போடாமல் மிகவும் சிறப்பாக விளையாடினர். இடைவேளைக்கு பிந்திய ஆட்டத்தின்போது கிழக்கு பிராந்திய அணியினர் மிகவும் சிறப்பாக விளையாடி தொடர்சியாக 03 கோல்களை அடித்து 3-0 என்ற விகித்தில் வெற்றிபெற்றனர்.

## அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வு நாளை

அம்பாறை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை அம்பாறை நகரில் இடம்பெறவுள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான விளையாட்டுப் போட்டி ஒன்றினை அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்.

இவ்விளையாட்டு பெருவிழாவின் ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அம்பாறை நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறவுள்ள இறுதிப்போட்டி நிகழ்வுகளிலும் பரிசளிப்பு வைபவத்திலும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மணிவண்ணன் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் வெள்ளிக்கிழமையே ஆரம்பமாகி முடிவடைய உள்ளது. உதைபந்தாட்ட போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச சபை அணி இறக்காமம் பிரதேச சபை அணி, நாவிதன்வெளி பிரதேச சபை அணி, அம்பாறை நகர சபை அணி என்பன போட்டியிடுகின்றது.

சனிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை கிரிக்கெட் எல்லே நீச்சல், பெட்மின்டன் போட்டிகளும் இடம்பெறவுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் உள்ள 18 உள்ளூராட்சி மன்றங்கள் இவ்விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

விசேடமாக பெண்களும் இப்போட்டிகளில் இடம்பெறுகின்றனர். குறிப்பாக கிரிக்கெட் போட்டியில் 9 ஆண்களும் இரண்டு பெண்களும் விளையாடுகின்றனர். அதேபோன்று எல்லே போட்டியில் 12 ஆண்களும் நான்கு பெண்களும் விளையாடுகின்றனர்.

பெட்மின்டன் போட்டியில் ஆண் பெண் தனி பிரிவாகவும் ,ஆண் பெண் கலப்பு இரட்டையர் பிரிவாகவும் போட்டிகள் இடம்பெறவுள்ளது. இவ்விளையாட்டு பெருவிழாவில் வெற்றி பெறுகின்ற அணிகளுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசுகளும், கிண்ணங்களும் வழங்கி வைக்கப்படவுள்ளமை விஷேட அம்சமாகும்.

அம்பாறை நகர சபை பொது விளையாட்டு மைதானம் மற்றும் வீரசிங்க விளையாட்டு மைதானங்களில் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் சபையின் உறுப்பினர்கள் மத்தியில் பரஸ்பர ஒற்றுமையையும் நட்பையும் வெளிக்கொண்டு வந்து இன ஐக்கியத்தை வலியுறுத்தும் ஒரு நிகழ்வாக இவ்விளையாட்டு பெருவிழா அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்தகால வரலாறுகளை மாற்றியமைத்து இவ்வாறான விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்து அர்ப்பணிப்புடன் அதனை முன்கொண்டு செல்லும் அம்பாரை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி அவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சபையின் கௌரவ தவிசாளர்கள், உறுப்பினர்கள் தமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இந்தியன் வங்கி 356, காலி வீதி, கொழும்பு 03.

## 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான நிதி அறிக்கை

### வருமானக்கூற்றின் சுருக்கம்

| வருமானக்கூற்றின் சுருக்கம் (வங்கி இலங்கை ரூபா ஆயிரங்களில்) | நடைமுறைக் காலம் 01/04/2021-31/12/2021 (கணக்காய்வுகுட்படாதது) | முன்னையகாலப் பகுதி 01/04/2020-31/12/2020 (கணக்காய்வுகுட்படாதது) |
|---|---|---|
| வட்டி வருமானம் | 2,652,765 | 2,579,987 |
| வட்டிச் செலவினங்கள் | 387,161 | 856,887 |
| **தேறிய வட்டி வருமானம்** | **2,265,604** | **1,723,101** |
| கட்டணம் மற்றும் தரகு வருமாணம் | 67,142 | 55,766 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | 2,618 | 2,710 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமாணம்** | **64,524** | **53,056** |
| வியாபாரம் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - |
| இலாபம்/(நட்டம்) ஊடாக நியாய மதிப்பீட்டில் | - | - |
| நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - |
| நியமிக்கப்பட்ட நிதிப் பொறுப்புகளின் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - |
| அங்கீகரிக்கப்படாத நிதிச் சொத்துக்களின் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் | - | - |
| நிலைமாறக்கூடிய செலவீனம் | - | - |
| நியாய மதிப்பீட்டின் ஊடாக ஏனைய விரிவான வருமானம் | - | |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 202,050 | 15,098 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **2,532,178** | **1,791,255** |
| பெறுமதி குறைப்பு | 23,186 | 395,638 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **2,508,992** | **1,395,617** |
| ஊதியம் | 62,038 | 48,195 |
| தேய்மானம் மற்றும் கடன் கழிப்பு | 15,895 | 3,002 |
| ஏனைய செலவினங்கள் | 75,510 | 108,878 |
| **பெறுமதிகூட்டப்பட்ட வரி (VAT) மற்றும் தேசிய கட்டுமான வரிக்கு (NBT) முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **2,355,549** | **1,235,542** |
| நிதியியல் பணிகள் மீதான பெறுமதிகூட்டப்பட்ட வரி (VAT) மற்றும் தேசிய கட்டுமான வரி (NBT) | 269,898 | 106,315 |
| **பெ.கூ.வ மற்றும் தே.க.வ பின் தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **2,085,651** | **1,129,227** |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | 2,085,651 | 1,129,227 |
| வரிச் செலவினங்கள் | 59,091 | (87,846) |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | **2,026,560** | **1,217,023** |

### தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள்

| தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள் | 31.12.2021 (கணக்காய்வுகுட்படாதது) | 31.03.2021 (கணக்காய்வுகுட்பட்டது) |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தும் மூலதன போதுமை** | | |
| பொது மூலதனம் படி 1 | 9,961.63 | 9,961.63 |
| கரு மூலதனம் (படி 1 மூலதனம்) | 9,959.65 | 9,959.65 |
| மொத்த அடிப்படை மூலதனம் | 10,089.89 | 10,089.89 |
| **ஒழுங்குபடுத்தும் மூலதன போதுமை (%)** | | |
| பொது சம மூலதன படி 1 விகிதம் (ஆகக் குறைந்த தேவை 7%) | 38.49% | 36.08% |
| மூலதன படி 1 விகிதம் (ஆகக் குறைந்த தேவை 8.5%) | 38.48% | 36.07% |
| மொத்த மூலதன விகிதம் (ஆகக் குறைந்த தேவை 12.5%) | 38.98% | 36.55% |
| **அந்நிய விகிதம் (ஆகக் குறைந்த தேவை 3%)** | 15.37% | 10.10% |
| **ஒழுங்குபடுத்தும் திரவத்தன்மை** | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்து, ரூபா மில்லியன்கள் | | |
| உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு - | 11,162.86 | 7,825.82 |
| வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவு | 38,171.06 | 55,473.50 |
| நியதிச்சட்ட திரவச் சொத்து வீதம் (ஆகக் குறைந்த திரவச் சொத்து வீதம் 20 %) | | |
| உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு | 90.75% | 84.49% |
| வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவு | 81.40% | 97.51% |
| உயர் தரமான திரவச் சொத்துக்களின் மொத்த பங்கு | 2,922.97 | 2,999.44 |
| திரவ பாதுகாப்பு விகிதம் (ஆகக் குறைந்த தேவை 100%) | | |
| ரூபாய் (%) | 2147.00% | 2781.00% |
| அனைத்து நாணயம் (%) | 395.08% | 331.20% |
| நிகர நிலையான நிதி விகிதம் - (ஆகக் குறைந்த தேவை 100%) | 125% | 123% |
| **சொத்துக்களின் தரம் (கடன்களின் தரம்)** | | |
| மொத்த செயற்படா முற்பணங்கள் வீதம் % (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | 9.65% | 9.38% |
| தேறிய செயற்படா முற்பணங்கள் வீதம் % (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் | 0.44% | 0.43% |
| குறைபாடுள்ள கடன்கள் (நிலை 03) விகிதம் (%) | 0.44% | 0.43% |
| குறைபாடு (நிலை 3) முதல் நிலை 3 கடன்கள் விகிதம் (%) | 95.46% | 95.40% |
| **இலாப இயலுமை** | | |
| வட்டி மிகை, % | 4.55% | 3.50% |
| சொத்துக்களின் மீதான வருவாய் % (வரிக்கு முன்) | 4.25% | 2.46% |
| உரிமை மீதான வருவாய் % | 21.43% | 16.03% |

### நிதி நிலைமை கூற்று

| நிதி நிலைமை கூற்று (வங்கி இலங்கை ரூபா '000) | நடைமுறைக்காலம் 31.12.2021 (கணக்காய்வுகுட்படாதது) | முன்னையகாலப்பகுதி 31.03.2021 (கணக்காய்வுகுட்பட்டது) |
|---|---|---|
| **சொத்து** | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 728,354 | 934,728 |
| இலங்கை மத்திய வங்கி மீதிகள் | 117,391 | 51,612 |
| வங்கியுள்ள இருப்புக்கள் | 26,454,511 | 38,075,223 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 67,100 |
| அங்கீகரிப்பட்ட நிதியியல் சொத்துக்களின் மீது இலாபம் அல்லது நட்டம் | | |
| நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்டவை | - | - |
| நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்டவை | - | - |
| நிலைமாறக்கூடிய செலவில் நிதிச்சொத்துக்கள் | | |
| கடன் மற்றும் முற்பணங்கள் | 17,984,649 | 18,563,091 |
| ஏனைய சாதனங்கள் | 8,206,812 | 11,559,308 |
| நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்ட நிதிச்சொத்துக்களின் மூலம் ஏனைய விரிவான வருமானம் | 10,468 | 10,443 |
| துணை நிறுவணங்களின் முதலீடு | - | - |
| கூட்டு மற்றும் இனை முதலீடுகள் | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 26,710 | 16,473 |
| முதலீடுச் சொத்துக்கள் | - | - |
| நன்மதிப்பு மற்றும் கட்புலனாகா சொத்துக்கள் | - | - |
| ஒத்திவைக்கபட்ட வரிச் சொத்துக்கள் | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 58,300 | 92,898 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **53,587,195** | **69,370,876** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | 28,935,383 | 46,916,148 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 6,175 | - |
| அங்கீகரிப்பட்ட நிதியியல் பொறுப்புகளின் மீது இலாபம் அல்லது நட்டம் | - | - |
| நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்டவை | - | - |
| நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்டவை | - | - |
| நிலைமாறக்கூடிய செலவில் நிதிப்பொறுப்புக்கள் | | |
| வைப்பாளர் கடன் | 10,265,294 | 10,178,298 |
| பங்குதாரருக்கு செலுத்த வேண்டிய கடன்பாடுகள் | - | - |
| ஏனைய கடன்பாடுகள் | - | - |
| வழங்கப்பட்ட படுகடன் | - | - |
| ஓய்வூதிய நலக்கடன்கள் | 8,985 | 9,639 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 198,988 | 153,635 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 350 | 350 |
| ஏனைய ஏற்பாடுகள் | - | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 531,282 | 531,897 |
| இணைக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **39,946,457** | **57,789,967** |
| **பங்கு மூலதனம்** | | |
| கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம் | 1,740,882 | 1,740,882 |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | 430,643 | 430,643 |
| OCI ஒதுக்கீடு | 1,876,229 | 1,842,960 |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 9,592,984 | 7,566,424 |
| ஏனைய ஒதுக்கீடு | - | - |
| மொத்த பங்குதாரரின் பங்குகள் | - | - |
| கட்டுப்படுத்தாத வட்டி | - | - |
| **மொத்த பங்கு மூலதனம்** | **13,640,738** | **11,580,909** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **53,587,195** | **69,370,876** |
| **எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்** | **10,020,354** | **13,455,469** |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 24 | 26 |
| கிளைகளின் எண்ணிக்கை | 2 | 2 |

### உரிமை மற்றும் ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களை காட்டும் கூற்று - வங்கி

| இலங்கை ரூபாய் ஆயிரங்களில் | உரிமை மூலதனம்: சாதாரண வாக்களிக்கத் தகுதியுடைய பங்குகள் | உரிமை மூலதனம்: சாதாரண வாக்களிக்கத் தகுதியற்ற பங்குகள் | உரிமை மூலதனம்: ஒதுக்கப் பட்ட மூலதனம் | ஒதுக்கங்கள்: ஒதுக்க நிதி | ஒதுக்கங்கள்: OCI ஒதுக்கங்கள் | ஒதுக்கங்கள்: நியாய மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | ஒதுக்கங்கள்: பிடித்து வைக்கப்பட்ட வருவாய் | ஒதுக்கங்கள்: ஏனைய ஒதுக்கங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **01.04.2021 இல் உள்ளவாரான மீதி (ஆரம்ப மீதி)** | | | **1,740,882** | **430,643** | **1,837,522** | **5,438** | **7,566,424** | | **11,580,909** |
| **ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாப/(நட்டம்) | | | | | | | 2,026,560 | | 2,026,560 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்(தேறிய வரி) | | | | | 33,244 | 25 | - | | 33,269 |
| **ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | | | | | **33,244** | **25** | **2,026,560** | | **2,059,829** |
| **அங்கிகரிக்கப்பட்ட சம பங்கு வைத்திருப்பவரின் மொத்த நடவடிக்கைகள்** | | | | | | | | | |
| பங்கு வழங்கல் / மூலதன ஒதுக்கீடு அதிகரிப்பு | | | | | | | | | |
| பங்கு தேர்வு செயல்படுத்தல் | | | | | | | | | |
| மிகை ஊதியம் வழங்கல் | | | | | | | | | |
| உரிமைப் வழங்கல் | | | | | | | | | |
| காலத்திற்கான ஒதுக்கீடு மாற்றம் | | | | | | | - | | - |
| சமபங்கு வைத்திருப்பவர்களின் மொத்த நடவடிக்கைகள் | | | | | | | | | |
| தலைமை அலுவலகத்திற்கு இலாம் மாற்றியது | | | | | | | | | |
| சொத்து, ஆதனம் மற்றும் உபகரணம் மீள் மதிப்பீட்டு இலாபம் / (நட்டம்) (செலவு முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால்) | | | | | | | | | |
| ஏணையவை | | | | | | | | | |
| **சமபங்கு வைத்திருப்பவரின் மொத்த நடவடிக்கைகள்** | | | | | | | | | |
| **31.12.2021 இல் உள்ளவாரான மீதி (இறுதி மீதி)** | | | **1,740,882** | **430,643** | **1,870,766** | **5,463** | **9,592,984** | | **13,640,738** |

### சீராக்கப்பட்ட வருமானக்கூற்று

| சீராக்கப்பட்ட வருமானக்கூற்று (வங்கி இலங்கை ரூபா ஆயிரங்களில்) | நடைமுறைக் காலம் 01/04/2021 to 31/12/2021 (கணக்காய்வுகுட்படாதது) | முன்னையகாலப் பகுதி 01/04/2020 to 31/03/2021 (கணக்காய்வுகுட்பட்டது) |
|---|---|---|
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | 2,026,560 | 1,808,460 |
| **வகைப்படுத்தப்பட்ட உருபடிகளின் இலாபம் அல்லது நட்டம்** | | |
| வெளிநாட்டு நடவடிக்கைகளின் மொழிப்பெயர்ப்பில் பரிமாற்ற வேறுபாடு | 33,244 | 352,791 |
| காசுப்பாய்ச்சல் மீதான தேறிய இலாபங்கள்/(இழப்புக்கள்) | | |
| நியாய மதிப்பீட்டின் மூலம் ஏனைய விரிவான வருமானத்தில் அளவிடப்பட்ட கடன் சாதனங்களின் மீது தேறிய இலாபங்கள்/(இழப்புக்கள்) | 25 | (124) |
| கழி: வரிச் செலவினங்களுக்கு தொடர்பான உருபடிகளின் மறுவகைப்படுத்தப்பட்ட இலாப நட்டம் | | |
| **வகைப்படுத்தப்படாத உருபடிகளின் இலாபம் அல்லது நட்டம்** | | |
| பங்குச் சாதனங்கள் முதலீடு செய்வதில் நியாமதிப்பீட்டில் மாற்றம் | | |
| நியாய மதிப்பீட்டின் மூலம் நியமிக்கப்பட்ட ஏனைய விரிவான வருமானம் | | |
| வங்கியின் சொந்த மாற்றம் காரணமாக நியாய மதிப்பில் மாற்றம் | | |
| நிதிப் பொறுப்புகளின் இடர் ஆபத்து மீது நியாய மதிப்பீட்டில் இலாப நட்டம் | | |
| வேலை வாய்ப்பின் பின் நலக் கடமைகளின் மறுமதிப்பீடு | - | (455) |
| உபரி மறுமதிப்பீட்டின் மீது மாற்றம் | | |
| கழி: வரிச் செலவினங்களுக்கு தொடர்பான உருபடிகளின் மறுவகைப்படுத்தப்படாத இலாப நட்டம் | - | 109 |
| **காலத்திற்கான மொத்த விரிவான வருமானம், தேறிய வட்டி** | **33,269** | **352,320** |
| **காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | **2,059,829** | **2,160,780** |
| **பகிர்தளிக்கப்படுவதற்கு:** | | |
| கட்டுப்பாடற்ற வட்டி | | |

### காசுபாய்ச்சல் கூற்று

| காசுபாய்ச்சல் கூற்று (வங்கி இலங்கை ரூபா ஆயிரங்களில்) | நடைமுறைக்காலம் 31/12/2021 (கணக்காய்வுகுட்படாதது) | முன்னையகாலப் பகுதி 31/03/2021 (கணக்காய்வுகுட்பட்டது) |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வட்டிக்கு முன் இலாபம் | 2,085,651 | 1,803,008 |
| **சீர்படுத்துகை:** | | |
| வரிக்கு முன் இலாபத்தில் சேர்க்கப்பட்ட காசு அல்லாதவை | 121,695 | 254,060 |
| தொழிற்பாட்டுச் சொத்துக்களில் மாற்றம் | 726,218 | (6,031,092) |
| தொழிற்பாட்டுச் பொறுப்புக்களில் மாற்றம் | (17,807,747) | (486,556) |
| பங்கிலாபம் | (1,362) | (1,908) |
| வரி செலுத்தியது | (13,738) | (23,889) |
| பெறுமதி கூட்டப்பட்ட வரி செலுத்தியது | (261,127) | (160,957) |
| செயற்பாட்டு குத்தகை வாடகை செலுத்தியது | (4,451) | (5,623) |
| நன்கொடை கொடுப்பணவு செலுத்தியது | (654) | (3,304) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசு** | **(15,155,515)** | **(4,656,261)** |
| **முதலீட்டு நடவடிக்கை மூலம் பெற்ற காசுப்பாய்ச்சல்** | | |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் கொள்வணவு | (13,615) | (3,537) |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் விற்பனை | - | 2,285 |
| நிலைமாறக்கூடிய செலவில் நிதிச் சொத்துக்களில் தேறிய முதலீடு | 3,351,076 | 4,727,688 |
| நியாயமன மதிப்பின் மூலம் OCI சொத்துக்களின் தேறிய முதலீடு | - | (1,000) |
| ஏனைய நிதிச் சொத்துக்களில் தேறிய முதலீடு | - | (1,152,962) |
| பெற்ற பங்கிலாபம் | 1,362 | 1,908 |
| **முதலீட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசு** | **3,338,823** | **3,574,382** |
| **நிதி நடவடிக்கை மூலம் பெற்ற காசுப்பாய்ச்சல்** | | |
| தலைமை அலுவகத்திலிருந்து பெற்ற ஒதுக்கப்பட்ட மூலதனம் | - | - |
| **நிதி நடவடிக்கை மூலம் தேறிய காசு** | - | - |
| காசு, காசுக்கியையான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | (11,816,692) | (1,081,879) |
| வருட ஆரம்பத்திலுள்ள காசு, காசுக்கினையானவை | 39,033,502 | 40,115,381 |
| வருட இறுதியிலுள்ள காசு, காசுக்கினையானவை | **27,216,810** | **39,033,502** |

**உறுதிப்படுத்தல்:**

கீழே கையொப்பமிட்டிருக்கும் இந்தியன் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் மற்றும் மேலாளர் நிதி ஆகிய நாங்கள் கூட்டாக கீழேயுள்ளனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

அ) மேலே தயாரிக்கப்பட்டுள்ள கூற்று மத்திய வங்கியினால் விபரிக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுக்கு இசைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆ) கணக்காய்வு செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்டால் ஒழிய இக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத கூற்றுகளிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டவையாகும்.

**திரு. M. பஷீர் அஹமது**
(ஒப்பம்) பிரதம நிறைவேற்று அதிகாரி
திகதி : 23.02.2022

**மல்ஷா சேனாரத்ன**
(ஒப்பம்) மேலாளர் நிதி

### ஐந்தொகையின் சுருக்கம்

| ஐந்தொகையின் சுருக்கம் (கிலோபல் இந்திய ரூபா ஆயிரங்களில்) | நடைமுறைக் காலம் 31/12/2021 (கணக்காய்வுகுட்படாதது) | முன்னையகாலப் பகுதி 31/03/2021 (கணக்காய்வுகுட்பட்டது) |
|---|---|---|
| **ஐந்தொகையில் உள்ளடங்கும் சொத்துக்கள்** | | |
| கையிலுள்ள காசு | 21,248,986 | 16,582,776 |
| இலங்கை மத்திய வங்கியுடனான / ஏனைய மத்திய | 249,986,225 | 258,868,041 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தான வருமதிகள் | 481,937,687 | 265,147,954 |
| **வியாபார நோக்கில் வைத்திருக்கப்பட்ட முதலீடுகள்** | **417,019,214** | **478,740,723** |
| அரச பிணைகள் | 294,317,390 | 356,315,896 |
| ஏனைய பிணைகள் | 122,701,824 | 122,424,827 |
| **முதிர்வு திகதி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் (முதலீட்டுப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சிக்காக செய்யப்பட்ட ஏற்பாடு கழித்து தேறியது)** | 1,391,855,975 | 1,284,467,258 |
| அரச பிணைகள் | 1,172,551,361 | 1,063,011,325 |
| ஏனய பிணைகள் | 219,304,614 | 221,455,933 |
| கழிக்குக: வீழ்ச்சியடையும் முதலீட்டுப் பெறுமதிக்கான ஏற்பாடு | | |
| **உப நிறுவனம் மற்றும் துணை நிறுவனங்களிலான முதலீடுகள்** | **2,161,681** | **2,161,681** |
| **மொத்த கடன்களும் முற்பணங்களும்** | **4,004,315,348** | **3,903,169,562** |
| **மொத்த தொழிற்படும் கடன்களும் முற்பணங்களும்** | **3,638,919,652** | **3,518,616,099** |
| செலாவணி உண்டியல்கள் | 33,723,531 | 23,032,106 |
| மேலதிக பற்றுக்கள் | 1,934,637,883 | 1,933,423,775 |
| பெறக்கூடிய குத்தகைய வருமானங்கள் | | |
| ஏனைய கடன்கள் | 1,670,558,238 | 1,562,160,218 |
| **மொத்த தொழிற்படாத கடன்களும் முற்பணங்களும்** | **365,395,696** | **384,553,463** |
| செலாவணி உண்டியல்கள் | 812,739 | 599,985 |
| மேலதிகப் பற்றுக்கள் | 303,775,574 | 219,932,810 |
| பெறக்கூடிய குத்தகைய வருமானங்கள் | | |
| ஏனைய கடன்கள் | 60,807,383 | 164,020,668 |
| பெறக் கூடிய வட்டி | | |
| **மொத்த கடன்களும் முற்பணங்களும்** | **4,004,315,348** | **3,903,169,562** |
| **கழிக்குக:** | | |
| நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி | 3,768,879 | 3,429,264 |
| குறிப்பீடு செய்யப்பட்ட கடன் இழப்பிற்கான ஏற்பாடுகள் | 260,782,732 | 258,930,292 |
| பொதுவான கடன் இழப்பிற்கான ஏற்பாடுகள் | 707,600 | 707,600 |
| **தேறிய கடன்களும் முற்பணங்களும்** | **3,739,056,137** | **3,640,102,406** |
| ஏனைய சொத்துக்கள் | 159,187,463 | 211,771,374 |
| கட்புலனாகாச் சொத்துக்கள் | 37,108,069 | 28,444,872 |
| முதலீட்டு ஆதனங்கள் | - | - |
| நிலையான சொத்துக்கள் (திரண்ட பெறுமானத் தேய்வுநீங்கலான நிலையான சொத்துக்கள்) | 71,260,999 | 73,763,114 |
| **ஐந்தொகையில் உள்ளடங்கும் மொத்த சொத்துக்கள்** | **6,570,822,436** | **6,260,050,199** |
| **ஐந்தொகையில் உள்ளடங்கும் பொறுப்புகள்** | | |
| **மொத்த வைப்புக்கள்** | **5,625,752,302** | **5,380,711,149** |
| கேள்வி வைப்புக்கள் | 340,014,212 | 323,445,669 |
| சேமிப்பு வைப்புக்கள் | 2,004,209,932 | 1,952,502,937 |
| தவணை வைப்புக்கள் | 3,281,528,158 | 3,104,762,543 |
| பிணைய வைப்புக்கள் | - | - |
| ஏனைய வைப்புக்கள் | - | - |
| **மொத்த கடன்பாடுகள்** | **311,667,980** | **261,745,981** |
| இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான கடன்பாடுகள் | 26,220 | 50,089 |
| இலங்கை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தான கடன்பாடுகள் | - | - |
| வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தான கடன்பாடுகள் | 51,683,093 | 40,083,743 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை | | |
| துணை தவணைக் கடன்பாடுகள் | 90,000,000 | 96,000,000 |
| ஏனைய கடன்பாடுகள் | 169,958,667 | 125,612,149 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | | |
| நடைமுறை ஆண்டிற்கான வரிவிதிப்பு | | |
| ஏனைய பொறுப்புக்கள் | 203,184,945 | 233,473,620 |
| **ஐந்தொகையில் உள்ளடங்கும் மொத்த பொறுப்புக்கள்** | **6,140,605,227** | **5,875,930,750** |
| **சிறுபான்மை நலன்கள்** | | |
| **உரிமை சாதனமும் ஒதுக்கங்களும்** | **430,217,209** | **384,119,449** |
| பங்கு மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | 12,454,411 | 11,293,666 |
| நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | 86,497,551 | 86,497,551 |
| மொத்த ஏனைய ஒதுக்கங்கள் | 331,265,247 | 286,328,232 |
| **ஐந்தொகையில் உள்ளடங்கும் மொத்த பொறுப்புக்கள், உரிமை மூலதனமும் ஒதுக்கங்களும்** | **6,570,822,436** | **6,260,050,199** |
| **ஐந்தொகைக்கு வெளியிலான விடயங்களும் எதிரிடையான கணக்குகளும்** | | |
| அவசர நிகழ்வுகள் | | |
| கடப்பாடுகளும் எதிரிடையான கணக்குகளும் | **3,095,745,034** | **2,935,334,610** |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 39,997 | 41,630 |
| கிளைகளின் எண்ணிக்கை | 5,757 | 6,007 |

### வருமானக்கூற்றின் சுருக்கம்

| வருமானக்கூற்றின் சுருக்கம் (கிலோபல் இந்திய ரூபா ஆயிரங்களில்) | நடைமுறைக்காலம் 31.12.2021 உள்ளபடி (கணக்காய்வுகுட்படாதது) | முன்னையகாலப்பகுதி 31.12.2020 உள்ளபடி (கணக்காய்வுகுட்படாதது) |
|---|---|---|
| **வட்டி வருமானம்** | **290,238,106** | **302,018,621** |
| கடன்கள், முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் | 202,929,596 | 214,301,125 |
| ஏனைய வட்டி உழைக்கும் சொத்துக்களிலிருந்தான வட்டி | 87,308,510 | 87,717,496 |
| **கழிக்குக: வட்டிச்செலவு** | **165,510,175** | **178,702,491** |
| வைப்புக்கள் மீதான வட்டிச் செலவு | 157,371,985 | 169,310,156 |
| ஏனைய வட்டியைத் தாங்கிவரும் பொறுப்புக்கள் மீதான | 8,138,190 | 9,392,335 |
| **தேறிய வட்டி வருமானம்** | **124,727,931** | **123,316,130** |
| **வட்டியில்லா வருமானம்** | **54,176,241** | **41,683,669** |
| வெளிநாட்டு செலாவணியிலிருந்தான வருமானம் | 4,157,037 | 2,408,856 |
| ஏனைய வருமானம் | 50,019,204 | 39,274,813 |
| **கழிக்குக: வட்டியில்லா செலவுகள்** | **79,111,024** | **79,189,903** |
| ஊழியர் செலவுகள் | 35,217,549 | 38,620,083 |
| ஊழியர்கள் ஓய்வின்போது பெறும் நன்மைகளுக்கான ஏற்பாடுகள் | 12,245,241 | 11,140,561 |
| ஆதன, தளபாட நிலைய நிர்வாக செலவுகள் | 15,934,829 | 14,985,922 |
| முதலீட்டு பிணைகள்/வியாபாரப் பிணைகள் மீதான நட்டங்கள் | 749,391 | 993,554 |
| கட்புலனாகா சொத்துக்களின் பதிவழிப்புக்கள் | 115,338 | 427,002 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | 148,448,676 | 13,022,781 |
| **தொழிற்பாட்டு இலாபம்** | **99,793,148** | **85,809,896** |
| **கழிக்குக: அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடும் கடன் பதிவழிப்பும்** | **74,674,804** | **62,771,084** |
| பொது ஏற்பாடுகள் | 10,640,435 | 18,283,150 |
| குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் | 64,034,369 | 44,487,934 |
| அறவீடுகள்(-) | | |
| கடன் பதிவழிப்பு | | |
| **கழிக்குக: முதலீட்டுப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சிக்கான ஏற்பாடுகள் (தேறியது)** | - | - |
| **சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்** | **25,118,344** | **23,038,812** |
| கழிக்குக: நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரி | | |
| **சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான கம்பனி வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்** | **25,118,344** | **23,038,812** |
| உப கம்பனிகளினதும் துணைக்கம்பனிகளினதும் இலாபப்பங்கு | | |
| **கம்பனி வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்** | **25,118,344** | **23,038,812** |
| **கழிக்குக: சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான இலாபத்தின் மீதான வரி** | (5,800,273) | 8,138,671 |
| **காலப்பகுதிக்கான தொழிற்பாட்டு இலாபம்** | **30,918,617** | **14,900,141** |
| ஏனைய ஏற்பாடுகள் | 1,312,993 | 1,941,829 |
| **தேறிய இலாபம்** | **29,605,624** | **12,958,312** |

### தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள்

| தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள் | நடைமுறைக்காலம் 31/12/2021 (கணக்காய்வுகுட்படாதது) | முன்னையகாலப்பகுதி 31/03/2021 (கணக்காய்வுகுட்பட்டது) |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தும் மூலதன போதுமை** | | |
| கரு மூலதனம் (படி 1 மூலதனம்) ரூபா. மில்லியன் | 367,568.00 | 355,889.39 |
| மொத்த மூலதனம் ரூபா.மில்லியன் | 472,743.00 | 468,445.11 |
| இடர் கூடிய சொத்து % இன் உள்ளபடி கரு மூலதன போதுமை விகிதம், (ஆகக் குறைந்த மூலதன போதுமைவீதம் 10%) | 12.03% | 11.93% |
| இடர் கூடிய சொத்து % இன் உள்ளபடி மொத்த மூலதனப் போதுமை விகிதம், (ஆகக் குறைந்த மூலதன போதுமைவீதம் 10 %) | 15.47% | 15.71% |
| **சொத்துக்களின் தரம் (கடன்களின் தரம்)** | | |
| மொத்த செயற்படா முற்பணங்கள் வீதம் % (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | 9.13% | 9.85% |
| தேறிய செயற்படா முற்பணங்கள் வீதம் % (நிறுத்தி வைக்கப்பட்ட தேறிய வட்டி ) | 2.72% | 3.37% |
| **இலாப இயலுமை** | | |
| வட்டி மிகை, % | 2.89% | 2.81% |
| சொத்துக்களின் மீதான வருவாய் % (வரிக்கு முன்) | 0.50% | 0.49% |
| சொத்துக்களின் மீதான வருவாய் % (வரிக்கு பின்) | 0.62% | 0.50% |
| உரிமை மீதான வருவாய் % | 12.24% | 10.63% |

### விபரம் (கிலோபல் இந்திய ரூபா ஆயிரங்களில்)

| விபரம் | உரிமை மூலதனம்: சாதாரண வாக்களிக்கத் தகுதியுடைய பங்குகள் | உரிமை மூலதனம்: சாதாரண வாக்களிக்கத் தகுதியற்ற பங்குகள் | உரிமை மூலதனம்: மீள் கொள்வனவு செய்யமுடியாத பங்குகள் | உரிமை மூலதனம்: ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்க நிதி | பங்கு மிகை | ஒதுக்கங்கள்: மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | ஒதுக்கங்கள்: பொது ஒதுக்கங்கள் | ஒதுக்கங்கள்: ஏனைய ஒதுக்கங்கள் | வருமானக் கூற்று | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **01/04/2021இல் உள்ளவாறான மீதி (ஆரம்ப நிலுவை)** | **11,293,666** | - | - | - | **86,497,551** | **8,576,190** | **57,549,663** | **131,243,194** | **87,957,557** | **1,001,628** | **384,119,449** |
| பங்கு வழங்கல் / ஒதுக்கப்பட்ட | 1,160,745 | - | - | - | - | - | - | - | - | - | 1,160,745 |
| மிகையூதியப் பங்கு வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| உரிமைப் பங்கு வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஆதன மீள் மதிப்பீட்டிலிருந்தான மிகை | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | - | - | - | 29,605,624 | 29,605,624 |
| காலப்பகுதியில் ஒதுக்கத்திற்கு மாற்றியது | | - | - | - | - | 15,339,254 | (1,105,446) | 1,105,446 | 224,286 | - | 15,563,540 |
| செலுத்தப்பட்ட பங்குலாபம் | - | - | - | - | - | - | - | - | - | (232,149) | (232,149) |
| தலைமை அலுவலகத்துக்கான இலாபமாற்றல்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மூலதனத்தின் மறு சீரமைப்பு | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஏனையவை | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **31.12.2021 இல் உள்ளவாறான மீதி (இறுதி நிலுவை)** | **12,454,411** | - | - | - | **86,497,551** | **23,915,444** | **56,444,217** | **132,348,640** | **88,181,843** | **30,375,103** | **430,217,209** |

# கேள்வி அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகம் - நுவரெலியா விவசாயத் திணைக்களத்தின் நுவரெலியா விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு கீழ்க்காணும் வேலைகளுக்காக உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | E | | |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத தொகை | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் செல்லுபடியாகும் காலம் | | |
| | | | | காசாக (ரூ.) | வங்கிப் பிணை மூலமாயின் (ரூ.) | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் |
| 01 | சீத்தாஎலிய தாவரசாலை கட்டிடத் தொகுதிக்கான Reverse osmosis வகை நீர் வடிகட்டி அமைப்பை வழங்கிப் பொருத்துதல் | நுஎ/பிவிப/ டெ/2021/184 | ரூ. 1,000.00 | 21,750.00 | 43,500.00 | 2022.06.20 |
| 02 | சீத்தாஎலிய விதை உருளைக்கிழங்கு களஞ்சியத்திற்கு அலுமினியம் கதவுகள் மற்றும் 41 ஜன்னல்களை வழங்கிப் பொருத்துதல் | நுஎ/பிவிப/ டெ/2021/174 | ரூ. 1,500.00 | 43,600.00 | 87,200.00 | 2022.06.20 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்ட பெற்றுக் கொண்ட கேள்விப் படிவங்களைப் பாவித்து கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) நுவரெலியா அலுவலகத்தில் பிரதான முகாமைத்துவ சேவை அதிகாரிக்கு மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்து 2022.02.25 முதல் 2022.03.18 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி அறிவுருத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளும் 'தலைவர், பிரதேச பெறுகைக்குழு, பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகம், சந்ததென்ன வீதி, நுவரெலிய' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல கேள்விதாரர்களும் மேற்படி அட்டவணையில் E இன் கீழ் குறிப்பிடப்படுமாறு பிணைத்தொகையை வைப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் வங்கிப் பிணை மூலம் பிணை வைப்புச் செய்வதாயின் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2022.03.21 முற்பகல் 10.00 இற்கு முடிவடைவதுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விகள் சமர்ப்பிப்போருக்கு அல்லது அவர்களது எழுத்து மூல அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) பணியகம்,**
**சந்ததென்ன வீதி, நுவரெலிய.**
**052-2222611**

# சப்ரகமுவ மாகாணத்தில் Solar Photovoltaic (PV) முறைமைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிட கூரைகளை வாடகைக்கமர்த்துவதற்கான முன்மொழிவுக் கோரிக்கைகள்

## பிரதான செயலகம்
## சப்ரகமுவ மாகாண சபை

1. 20 ஆண்டு காலத்திற்கு மேற்கூரை சூரிய சக்தியை (PV) நடைமுறைப்படுத்துவதற்காக சப்ரகமுவ மாகாண சபை (SPC) நிறுவனங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடக் கூரைகளை வாடகைக்கு எடுப்பதற்காக பிரபல நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து முன்மொழிவுகளுக்கான கோரிக்கைகளை (RFP) சப்ரகமுவ மாகாண சபை, பிரதான செயலகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்

2. விலைக்கோரல் ஆவணங்களை மீளளிக்கப்படாத மூவாயிரம் இலங்கை ரூபாவை (இல. ரூபா 3,000.00) ஆவணக் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சப்ரகமுவ மாகாண சபையின் பிரதி பிரதான செயலாளருக்கு (நிதி நிர்வாகம்) கோரிக்கை கடிதம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 25.02.2022ஆம் திகதி முதல் 19.04.2022ஆம் திகதி வரையிலான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் சப்ரகமுவ மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். காரணம் ''சூரிய ஒளி மின்னழுத்த (PV) முறைமைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிட கூரைகளை வாடகைக்கு எடுப்பதற்கான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

3. விலைக்கோரல் ஆவணங்களை 25.02.2022ஆம் திகதி முதல் 19.04.2022ஆம் திகதி வரையிலான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்), சப்ரகமுவ மாகாண சபையில் பார்வையிடலாம்.

4. விலைமனுதாரர்கள் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்பெற்ற வங்கியிலிருந்து தரப்பட்ட வடிவத்தில் பெறப்பட்ட 100,000.00 இலங்கை ரூபாய் மதிப்புள்ள நிபந்தனையற்ற, உடன் பணம் பெற்றுக்கொள்ளும் (Pay-on-demand) விலைக்கோரல் பிணை முறி அல்லது சப்ரகமுவ மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளருக்கு (நிதி முகாமைத்துவம்) உரிய தொகையை செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுப்பிணை முறிகள் 19-02-2022ஆம் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். காரணம் ''சூரிய ஒளி மின்னழுத்த (PV) முறைமைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிட கூரைகளை வாடகைக்கு எடுப்பதற்கான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

5. முன்மொழிவுகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு பிரதிகளில் தயாரித்து வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''சூரிய ஒளி மின்னழுத்த (PV) முறைமைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிட கூரைகளை வாடகைக்கு எடுப்பதற்கான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

6. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகளை 20.04.2022ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், பெறுகைக் குழு, பிரதம செயலகம், சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இதே முகவரியிலுள்ள சப்ரகமுவ மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். அனைத்து முழுமையற்ற மற்றும் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டவுடன் 20.04.2022ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும், மேலும் விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் விலைமனுக்கள் திறக்கும் நேரத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்.

8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 09.03.2022ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்தினபுரி, புதிய நகரம், சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

9. விலைமனுக்களைத் தயாரிப்பது தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவுகள் அல்லது கிரயத்திற்கு சப்ரகமுவ மாகாண சபை பொறுப்பு கூறாது.

10. விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பான இறுதி முடிவெடுக்கும் உரிமையை பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

11. மேற்படி விலைக்கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை இரத்தினபுரி, புதிய நகரம், சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் வார நாட்களில் சாதாரண அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு, 0452228414 / 0452223080

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதான செயலாளர் அலுவலகம்,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
**25.02.2022**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/13/051 | Diesel Engine Oil SAE 15W – 40 CI -4 2100 LTR | 16,000.00 | 1,000.00 | 18-03-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 பெப்ரவரி 25ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
